இந்தியாவை சீற்றமுறச் செய்த பாலியல் இலஞ்ச விவகாரம்
பக்கம் 16

# உதயன்

30°c – 25°c
தெளிவான வானம்

சுடர் 30 | கதிர் 325 | வள்ளுவர் ஆண்டு 2046 | புரட்டாதி 30, சனிக்கிழமை 17.10.2015

## நாடாளுமன்றத்தின் முன்னால் எம்.பிக்கள் போராடவேண்டும்

### கூட்டமைப்பிடம் கைதிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 17
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, நாடாளுமன்றத்தின் முன்பாக தமக்காகப் போராட்டம் நடத்தவேண்டும் என்று உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அவர்களின் உறவினர்கள் ஊடாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
பொதுமன்னிப்பில் விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து, நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
இவர்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசின் அமைச்சர்கள் சிறைச்சாலைகளில் சென்று பார்வையிட்டு வருகின்றனர். நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவும் தமிழ் அரசியல் கைதிகளைச் பக்.24

## கைதிகள் விடுதலை குறித்து நவ. 7 ஆம் திகதிக்குள் முடிவு

### சம்பந்தனிடம் தெரிவித்தார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், ஒக். 17
தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்யும் முறைமை தொடர்பாக நவம்பர் 7 ஆம் திகதிக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்குத் தெரிவித்துள்ளார்.
தொலைபேசியூடாக ஜனாதிபதியுடன் எதிர்க்கட்சித் தலைவர் நேற்றுப் பேச்சு நடத்திய போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
பொதுமன்னிப்பில் தம்மை விடுதலைசெய்யுமாறு கோரித் தமிழ் அரசியல் கைதிகள் கடந்த திங்கட்கிழமை முதல், சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் பக்.24

## நேற்றும் 14 கைதிகள் மயக்கம்

*இதுவரை 35 பேர் பாதிப்பு*

யாழ்ப்பாணம், ஒக். 17
உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 14 தமிழ் அரசியல் கைதிகள் வைத்தியசாலைகளில் நேற்று சேர்க்கப்பட்டுள்ளனர். மகஸின் சிறைச்சாலையிலிருந்து 12 பேரும், கண்டி போகம்பரைச் சிறைச்சாலையிலிருந்து இருவருமாக 14 பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் சேர்த்து இதுவரை பக்.24

# எம் பிள்ளைகளை விடுவிக்காவிடின் நாடு பற்றியெரியும்



## கைதிகளின் உறவுகள் அரசுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 17
எங்களுடைய பிள்ளைகளுக்கு ஒரு முடிவு இல்லையேல் இலங்கை பற்றி எரியும். எங்களுடைய கண்ணீர் உங்களைச் சும்மாவிடாது. கேட்பதற்கு ஆள்கள் இல்லை என்று தானே எமது பிள்ளைகளையும், கணவர்மாரையும் அடைத்து வைத்திருக்கின்றது இந்த அரசு என்று – அரசியல் கைதிகளின் உறவினர்கள் ஆக்ரோசமாகக் கதறி அழுது கவலையை வெளிப்படுத்தினர்.
நேற்று யாழ். முனியப்பர் கோயிலுக்கு முன்பாக இடம்பெற்ற அடையாள உணவு தவிர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.
ஐயா! உங்களைத் தயவு பண்ணிக் கேட்கின்றேன். எங்களுடைய பிள்ளைகள் இனியாவது விடுதலை செய்யுங்கோ!. சாவதற் பக்.24



## கைதிகளுக்கு ஆதரவாக வடக்கில் போராட்டங்கள்

### பல இடங்களில் நேற்று முன்னெடுக்கப்பட்டன



யாழ்ப்பாணம், ஒக். 17
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கின் பல பகுதிகளிலும் நேற்று அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டங்கள் பெருமளவு மக்கள் பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்டன.
பொது மன்னிப்பின் அடிப்படையில் தம்மை விடுதலை செய்யக்கோரி தமிழ் அரசியல் கைதிகளால் முன்னெடுக்கப்பட்டுவரும் உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தே வடக்கில் நேற்று பக்.24

## பல்கலைச் சமூகமும் கைதிகளுக்கு ஆதரவு



யாழ்ப்பாணம், ஒக். 17
நல்லாட்சி என்று கூறப்படும் இந்தக் காலத்தில் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படாவிட்டால் பின்னர் எந்தக் காலத்திலும் அவர்களுக்கு விடுதலை கிடையாது என்று தெரிவித்துள்ள யாழ்.பல்கலைச் சமூகம், அரசில் கைதிகளை எந்தவித நிபந்தனையுமின்றி உடன்விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டது.
யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் இணைந்து அரசியல் கைதிகளின் கோரிக்கையை கடுமையாக வலியுறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர். யாழ்.பல்கலைக்கழகச் சிவன்கோயில் முன்பாக ஒன்றுகூடிய அவர்கள், அங்கிருந்து பக்.24

## விநாயகத்தின் குடும்பத்தினர் திடீரென மீண்டு வந்தனரா?

### குடாநாட்டில் நேற்றுப் பரபரப்பான கதைகள்

யாழ்ப்பாணம், ஒக். 17
இறுதிப் போரின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னர் காணாமற்போனார்கள் என்று அறியப்பட்ட, விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறைத் தளபதிகளில் ஒருவரான விநாயகத்தின் குடும்பத்தினர் திடீரென தமது தாய் வீட்டுக்குத் திரும்பியிருக்கின்றனர் என்று வெளியான தகவல்களை அடுத்து யாழ். குடாநாடு நேற்றுப் பெரும் பரபரப் பாக இருந்தது.
விநாயகம் தற்போது மேற்கு நாடு ஒன்றில் இருக்கிறார் என்றும் விடுதலைப் [illegible] லகம் என்ற அமைப்பை நடத்தி வருகின்றார் என்றும் இலங்கை அரச படைகள் கடந்த காலங்களில் தெரிவித்து வந்தன. இறுதிப் போரின் போது அவரது மனைவியும் இரண்டு பிள்ளைகளும் வட்டுவாகலில் இராணுவத்தினரிடம் சரணடைந்தார்கள் என்றும் பின்னர் காணாமற்போயிருந்தார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டு வந்தது.
இந்தநிலையில் விநாயகத்தின் மனைவியும் அவரது இரு குழந்தைகளும் அவரது தாயாரது வீட்டுக்குக் கடந்த சில நாள்களின் முன்னர் திரும்பியி பக்.24

## மனித மண்டையோட்டுடன் பெண்களின் ஆடையணிகள்

### அரியாலையில் நேற்று கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17
அரியாலை முள்ளியில் மனித மண்டையோடு, எலும்புகள் மற்றும் 2 பெண்களின் ஆடைகள், அவர்களது பொருள்கள் என்பன இருந்தமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது.
அங்குள்ள சூழமைவுகளைப் பார்க்கும் பக்.24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சிப் பெண் கடத்தல்: 9 பேருக்கு விளக்கமறியல்

## அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் உத்தரவு

நெல்லியடி, ஒக்.17

வடமராட்சி கம்பர் மலைப்பகுதியில் பெண்ணொருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 9 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன் அவர்களை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் ஒன்பது பேரும் நேற்று நண்பகல் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரீ மீடின் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் நீதிமன்றம் கொண்டுவரப்பட்டனர். கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டது என்று கூறப்படும் டொல்பின் ரக வாகனத்தில் முகங்கள் துணியால் மூடப்பட்ட நிலையில் அவர்கள் நீதிமன்றுக்கு கொண்டு வரப்பட்டனர்

இந்த நிலையில் குறித்த வழக்கு நேற்று பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த நிலையில் பெண்ணின் கணவரான சிவானந்தராஜா சுசீந்திரன் உட்பட ஒன்பது சந்தேகநபர்களையும் விசாரணைக்குட்படுத்திய நீதிவான் 9 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

வடமராட்சியில் பட்டப்பகலில் பெண்ணொருவர் வாகனம் ஒன்றில் வந்தவர்களால் கடத்தப்பட்டிருந்தார். பருத்தித்துறை நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கு ஒன்றில் பங்கு பற்றிவிட்டு தாயாருடன் வீடு நோக்கி திரும்பிக்கொண்டிருந்த நிலையில் இந்தக் கடத் தல் சம்பவம் நடந்தது.

இது தொடர்பில் பெண்ணின் தாயார் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பரின் வழி நடத்தலில் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மீடின் தலைமையில் இரண்டு பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டன.

அவர்கள் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில் புத்தூர் பகுதியில் உள்ள சட்டத்தரணி வீட்டில் இருந்து கடத்தப்பட்ட பெண் மீட்கப்பட்டிருந்தார். அவரின் கணவரும் குறித்த வீட்டில் இருந்து கைது செய்யப்பட்டிருந்தார். இந்த நிலையில் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது மேலும் எட்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர். (ந-109)



சர்வதேச கைகழுவுதல் தினத்தை முன்னிட்டு வவுனியா இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலையில் கைகழுவுதல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது. நேற்றுமுன்தினம் காலை பாடசாலை வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்வில் பாடசாலை மட்டத்திலிருந்து, சுகாதார பழக்க வழக்கங்களை மேம்படுத்தும் நோக்குடன் மாணவர்களை இரு பிரிவுகளாகப் பிரித்து – கை கழுவுதல் தொடர்பான விழிப்புணர்வு வழங்கப்பட்டது. நிகழ்வில் வவுனியா மாவட்ட பொது சுகாதாரப் பரிசோதகர்கள், வளவாளர்களாகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கு செயன்முறை விளக்கங்களுடன் சுகாதார விளக்கங்களையும் வழங்கினர். மாணவர்களுக்கு சுகாதாரப் போட்டிகள் நடத்தப் பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன. (ந)

# கட்டாக்காலி மாடுகளை பிடிக்க வேலணையில் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 17

வேலணை பிரதேச செயலகப் பிரிவில் கட்டாக்காலி மாடுகளால் விவசாய நடவடிக்கைகள் பாதிப்படைந்து வருவதை அடுத்து கட்டாக்காலி மாடுகளைப் பிடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாடுகள் பிடிப்பதற்கென ஆள்கள் நியமிக்கப்படுவதுடன் அதற்கான அனுமதி அட்டைகளும் வழங்கப்படவுள்ளன என்றும் இந்த அட்டைகளைப் பெற்றுக் கொள்பவர்கள் வேலை முடிந்ததும் தினமும் குறிப்பிட்ட அட்டைகளை விவசாய சம்மேளனத்தில் ஒப்படைத்துச் செல்லவேண்டும் எனவும் தீவகம் தெற்கு வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக விவசாயிகள் சம்மேளனப் பிரதிநிதிகள் பிரதேசசபை மற்றும் விவசாய திணைக்கள உத்தியோகத்தர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த முடிவுகள் மேற்கொள்ளப்பட்டது.

பிடிக்கப்படும் கட்டாக்காலி மாடுகளைத் தேவையானவர்கள் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவற்றைப் பெறவிரும்புபவர்கள் விவசாய சம்மேளனத்துடன் தொடர்புகொள்ள முடியும் எனவும் மாடுகளைப் பெற்றுக் கொள்பவர்கள் எந்தக் காரணம் கொண்டும் அவற்றை வெளியில் நடமாடவிடக்கூடாது என்றும் குறிப்பிட்டதுடன் மாடுகளின் உரிமையாளர்கள் அவற்றுக்கான காதுப்பட்டிகளை கால்நடை வைத்தியரின் உதவியுடன் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டது.

பிரதேசசெயலர், வேலணை பிரதேசசபை, வேலணை விவசாய சம்மேளனம் ஆகியவற்றுடன் இணைந்து இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும் கமநல பெரும்பாக உத்தியோகத்தர் இதற்குப் பொறுப்பாக இருப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ந-7)

## ஆணொருவரின் சடலம் மீட்பு

மன்னார், ஒக்.17

மன்னார் – மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்கடவை ஏ-32 வீதியில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் இருந்து நேற்று ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் இராசதுரை நாகேஸ்வரன் (வயது-47) என அடையாளம் காணப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு இவர் இறந்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. இறப்புக்கான காரணம் இதுவரையில் கண்டு பிடிக்கப்படவில்லை.

நேற்று பிற்பகல் சம்பவ இடத்திற்கு சென்ற திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ரி.சிந்தாத்துரை சடலத்தை பார்வையிட்டதுடன் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலத்தை மன்னார் பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந)



# வாழ்வாதார உதவிக் கடனை செலுத்தாததால் முறைப்பாடு

## கைதடி, நாவற்குழியைச் சேர்ந்த 48 குடும்பங்களிடம் பொலிஸ் விசாரணை

சாவகச்சேரி, ஒக்.17

ஐந்து வருடங்களுக்கு முன்னர் பெற்ற வாழ்வாதார உதவிக் கடனில் மிகுதித் தொகை செலுத்தாத கைதடி, நாவற்குழி பிரிவைச் சேர்ந்த 48 குடும்பங்கள் நேற்றுச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து விசாரிக்கப்பட்டுள்ளனர்.

அந்தப் பகுதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டையடுத்தே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

2010ஆம் ஆண்டு குறித்த பிரிவு மக்கள் மீளக்குடியமர்ந்தபோது வாழ்வின் எழுச்சித் திட்டத்தில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் கடன் வழங்கப்பட்டு அங்குள்ள பொது அமைப்பொன்றின் ஊடாக அறவிடப்பட்டு வந்தது.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் கடனை அறவிட்ட பொது அமைப்பு செயலிழந்ததால் மக்கள் மிகுதித் தொகை செலுத்தவில்லை. இந்நிலையில் அங்குள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் கடனை அறவிடும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதையடுத்தே இதுகுறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடனை மீளச் செலுத்துமாறு பிரிவு கிராம அலுவலரோ அல்லது சங்கத்தினரோ எந்தவொரு அறிவித்தலும் வழங்காத நிலையில் கடன் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கொடுத்துள்ளனர் என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பாக குறித்த மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் தொடர்பு கொண்டு கேட்ட போது :-

வாழ்வின் எழுச்சிக் கடன் தொடர்பாக உரிய அதிகாரிகளால் குறித்த பிரிவு மக்களுக்குக் கூட்டம் நடத்தப்பட்டுச் சங்கத்திடம் மிகுதித் தொகைகளை மீளச் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டது. அதன் போது அனைவரும் சம்மதம் தெரிவித்தனர். எனினும் பணத்தை மீளச் செலுத்துமாறு கேட்டபோது மறுப்புத் தெரிவித்தனர். எமக்குத் தரப்பட்ட பொறுப்பை சீர்செய்ய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டோம். மக்களின் பங்களிப்புடன் சங்கம் இயங்குவதால் மக்களைப் பகைக்க வேண்டிய அவசியம் எமக்கு இல்லை.- என்று தெரிவிக்கப்பட்டது. (ந-9)

# மார்பகப் புற்றுநோய் தொடர்பான சுய பரிசோதனை முறை அறிமுகம்

சாவகச்சேரி, ஒக்.17

உலக சுகாதார நிறுவனத்தால் ஒக்ரோபர் மாதம் மார்பக புற்றுநோய் தடுப்பு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளில் மார்பக புற்று நோய் தொடர்பான சுய பரிசோதனை முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

உலக சுகாதார நிறுவன அறிக்கைப் பிரகாரம் இலங்கையில் வருடாந்தம் 2 ஆயிரத்து 500 பெண்கள் புற்றுநோய்க்கு உள்ளாகின்றனர் எனவும் இவர்களில் 25 சத வீதமானோர் மார்பக புற்று நோய்க்கு உள்ளாகின்றனர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

மார்பக புற்று நோயை ஆரம்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் குறைந்த காலத்தில் முழுமையாக குணமாக்கமுடியுமெனவும் இதற்கு 20 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மார்பகங்களில் கட்டி, சுயமாக மார்பகங்களிலிருந்து ஒரு வகை நீர் சுரப்பது போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலையில் சுயமாக பரிசோதனைகளில் ஈடுபட்டு நோய் ஏற்பட்டிருப்பதைக் கண்டு பிடிக்கலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறான அறிகுறிகள் காணப்பட்டால் தத்தமது பிரிவு குடும்ப நல சேவையாளரிடம் கலந்துரையாடி பரிசோதனைகளை மேற்கொண்டு மேலதிக பரிசோதனைகளை அருகில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று குணமாக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் சுகவாழ்வுக் கிளினிக்கிலும் பிரதி சனிக்கிழமைகளில் நடைபெறும் சுக வனிதையர் கிளினிக் மற்றும் சத்திர சிகிச்சை கிளினிக்குகளிலும் சுயபரிசோதனை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் பெண்கள் பயமின்றி தாங்களே சுய பரிசோதனைகளை மேற்கொண்டு மார்பக புற்றுநோயைக் குணப்படுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணத்தில் நிலவும் தாதியர் பற்றாக்குறையை நீக்குக

## வடக்கு சுகாதார அமைச்சருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஒக். 17
வட மாகாண வைத்தியசாலைகளில் நிலவுகின்ற விசேட தாதிய உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்யக் கோரி வடமாகாண பொது சேவை ஐக்கிய தாதிய சங்கத்தினால் வடமாகாண சுகாதார அமைச்சருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
வடக்கு மாகாணத்தில் மாவட்ட பொது வைத்தியசாலைகளாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், என்பனவும் ஆதார வைத்தியசாலைகளாக பருத்தித்துறை, சாவகச்சேரி, தெல்லிப்பழை, மாங்குளம், என்பனவும் மாவட்ட வைத்தியசாலைகளாக செட்டிகுளம், மல்லாவி, புதுக்குடியிருப்பு, சங்கானை என்பனவும் இயங்கி வருகின்றது.

**பொது வைத்தியசாலைகள் விசேட தாதிய உத்தியோகத்தர்களின் பங்களிப்பின்றி பெரும் சிரமத்தின் மத்தியில் இயங்கி வருவது ஏற்புடையதல்ல.**

குறித்த வைத்தியசாலைகளில் பல தசாப்தங்களாக விசேட தாதிய உத்தியோகத்தர்களின் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. ஆனால் விசேட தாதிய உத்தியோகத்தர்களின் பதவிகளுக்கு தகுதியான இருபது விடுதி சகோதர சகோதரிகள் வடமாகாணத்தில் ஐந்து வருடங்கள் சேவையை நிறைவு செய்து கடந்த மார்ச் மாதத்திலிருந்து மேற்படி பதவியை எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆறு மாதத்துக்கு மேலாக இப்பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பது வேதனைக்குரிய விடயம்.

சில பொது வைத்தியசாலைகள் விசேட தாதிய உத்தியோகத்தர்களின் பங்களிப்பின்றி பெரும் சிரமத்தின் மத்தியில் இயங்கி வருவது ஏற்புடையதல்ல. எனவே விசேட தாதிய உத்தியோகத்தர்களின் பதவி வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்று தெரிவித்தார்.

வடமாகாண பொது சேவை ஐக்கிய தாதிய சங்கத்தின் தலைவர் ச.குணசீலன் வடமாகாண சுகாதார அமைச்சர், வடமாகாண ஆளுநர், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வடமாகாண சேவைகள் ஆணைக்குழு செயலாளர் ஆகியோருக்கும் இதன் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன. (ற-4)

# தொண்டைக்கழலை நோயாளருக்கு கிளிநொச்சியிலும் ரத்த பரிசோதனை

சாவகச்சேரி, ஒக்.17
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடைபெறும் தொண்டைக்கழலை சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுபவர்கள் கிளிநொச்சி மாட்ட வைத்தியசாலையில் இலவசமாக இரத்தப் பரிசோதனை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நந்தகுமார் மேற்கொண்டுள்ளார்.

இதன் பிரகாரம் மாதத்தில் இரு தடவைகள் தொண்டைக்கழலை சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுவோரின் இரத்த மாதிரிகள் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சாவகச்சேரி வைத்தியசாலையில் நடத்தப்படும் தொண்டைக் கழலை சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் ஆறு மாதத்துக்கு ஒரு தடவை இரத்தப் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

இரத்தப் பரிசோதனைக்காக ஒவ்வொரு தடவையும் 800 ரூபா தொடக்கம் ஆயிரத்து 200 ரூபா வரை செலவு ஏற்படுகிறது எனவும் யாழ்.போதனா வைத்தியசாலை நோயாளர்களுக்கு இரத்தப் பரிசோதனை இலவசமாகச் செய்யப்படுவது போல தமக்கும் இலவசமாக இரத்தப் பரிசோதனை செய்ய உரிய பரிசோதனைக் கருவிகளை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு வழங்க வேண்டும் என்றும் நோயாளர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதையடுத்து தற்போது புதிதாக பதவியேற்றுள்ள யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மாற்று ஏற்பாடாக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் இரத்த மாதிரிகளை பரிசோதனை செய்ய மாதத்தில் இரு தடவை பணியாளரை அனுப்பி வைக்குமாறு அறிவித்துள்ளார். (ற-9)

# தென்மராட்சி கல்வி வலயத்துக்கு ஆசிரியர் சங்கம் பாராட்டு

யாழ்ப்பாணம், ஒக். 17
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றி இளைப்பாறிச் செல்லும் அதிபர், ஆசிரியர்களை ஓய்வுபெறும் தினத்தில் நேரில் சென்று வாழ்த்துவதுடன் ஓய்வூதியம் பெறுவதற்கான ஆவணங்களையும் வழங்கும் செயற்திட்டத்தை தென்மராட்சி கல்வித் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

திணைக்களத்தின் இந்த முன்மாதிரியான நடவடிக்கை பாராட்டப்பட வேண்டியது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அதிபர், ஆசிரியர்களின் பல வருட கால அர்ப்பணிப்பான சேவைக்கு வழங்கும் உயரிய கௌரவத்தை இவர்கள் தங்களது பொறுப்பான செயற்பாடு வழியாக வழங்க முன் வந்திருப்பது அதிபர் ஆசிரியர்கள் மட்டில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கொண்டுள்ள கரிசனையை நன்கு புலப்படுத்துகின்றது.

ஆசிரியர் தினங்களில் மட்டும் இதுவரை ஆசிரியர்களின் சேவைகள் நினைவுகூரப்பட்டு வந்துள்ளன. இவை ஆசிரியர்களுக்கு அன்று மட்டும் வழங்கப்படும் கௌரவமாகவும், மாலைகளாகவுமே இருந்துள்ளன. இதனை உண்மைத் தன்மையான ஓய்வு காலங்களில் மகிழ்வாகவும், அலைச்சலின்றியும் வாழக்கூடிய உயர்ந்த கௌரவமாக முதலில் மாற்றியமைத்த பெருமை தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனையினரையே சாரும். இத்தகைய முன்மாதிரிகையான செயற்பாடுகளை, அனைத்து வலயக்கல்விப் பணிமனையினரும் கடைப்பிடித்து ஓய்வு பெறுவோர் ஓய்வு பெற்ற அடுத்தமாதமே ஓய்வூதியம் பெறச்செய்ய முன்வரவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம் என்று ஆசிரியர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ற-4)

# அரசியல் கைதிகளது விடுதலை இனவாதமாக நோக்கப்படுகிறது

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.17
அரசியல் கைதிகளின் விடுதலை இனவாதத்தின் அடிப்படையில் கையாளப்படுகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சிறைகளில் உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வலியுறுத்தி நேற்று வெள்ளிக்கிழமை யாழ். முனியப்பர் ஆலய முன்றிலில் உண்ணாவிரதம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த உண்ணாவிரதத்தின் போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இலங்கையின் பல்வேறு சிறைச்சாலைகளில் 273 ற்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் இருக்கின்றார்கள். இந்த அரசியல் கைதிகள் அனைவரையும் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்க வேண்டுமென்ற கோரிக்கை மிக நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மற்றும் இந்நாள் ஜனாதிபதி ஆகியோரிடம் பேசியபோது, விசேட நீதிமன்றம் அமைத்து விசாரணை செய்யப்படும். அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவித்தார்கள். பின்னர் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பின்னர் விடுவிப்பதாக தெரிவித்தார்கள். ஆனால் இதுவரையில் விடுவிக்கப்படவில்லை என்பது யதார்த்தம்.

பல்வேறுபட்ட பிரச்சினைகளில் இருக்கின்ற பல்வேறுபட்ட நபர்கள் எந்தவித நீதிமன்ற நடவடிக்கைகளும் இல்லாமல், பல்வேறு குற்றச்செயல்களை செய்தவர்கள் சாதாரணமாக சுற்றித் திரிக்கின்றபோதும், அமைச்சர்களாக இருக்கின்றபோதும், அப்பாவி நபர்கள் சிறைகளில் வாடுகின்றார்கள்.

சகல இனங்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தினைப் பேசுகின்ற அரசு அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டுமென்பதே கட்டாயம்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையிலும், அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளவாறு இலங்கை அரசு அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-106)





# அரசியல் கைதிகள் விடுதலை வேண்டி சர்வமத பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஒக்.17
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வேண்டிய சர்வமத பிராத்தனை நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் அமைதியான முறையில் நடைபெற்றது.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த சர்வமத வழிபாடு கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கந்தசுவாமி ஆலயத்திலும் அதனைத் தொடர்ந்து தெரேசா ஆலயத்திலும் அமைதியான முறையில் நடைபெற்றது. மன்னார் மாவட்ட குருமுதல்வர், இந்து ஆலயங்களின் குருக்கள், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான வை.தவநாதன், எஸ்.சுகிர்தன், அரியரத்தினம் பசுபதிபிள்ளை, அரசியல் கைதிகளின் குடும்பங்களும் மற்றும் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் என பலர் பிரார்த்தனையில் கலந்துகொண்டனர். (ற-21)

# முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவி வழங்கல்

கிளிநொச்சி, ஒக்.17



புனர்வாழ்வின் பின்னர் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வாழ்வாதார உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் முல்லைத்தீவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு வடமாகாண போக்குவரத்து மற்றும் மீன்பிடி அமைச்சர் டெனீஸ்வரன் தலைமையில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து முதற்கட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 18 பேருக்கான வாழ்வாதார உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன. அரசியல் கைதிகளாக சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளோரின் குடும்பங்களுக்கும், புனர்வாழ்வின் பின் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள், மாற்றுவலுவுள்ளோர் என முன்னுரிமை அடிப்படையில் இரண்டாம் கட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 147 பேருக்கும் இவ்வாறு வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளது.

நிகழ்வில், மாகாண சபை உறுப்பினர் ரவிகரன், போக்குவரத்து மற்றும் மீன்பிடி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், முல்லைத்தீவு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ற-21)

# பொதுக் கூட்டம்

மானிப்பாய் கோவில்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டமும் இயக்குநர் சபைத் தெரிவும் இன்று சங்க மண்டபத்தில் மு.ப.10 மணிக்கு நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் ரி.திருநாவுக்கரசு தலைமையில் நடை பெறும் இந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கணேசு கலந்துகொள்வார். (ற-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுபோதையில் சாரத்தியம் தென்மராட்சியில் அதிகரிப்பு

சாவகச்சேரி, ஒக்.17

தென்மராட்சி பிரதேசத்தில் மது போதையில் வாகனம் செலுத்து வோரின் எண்ணிக்கையும் மது அருந்திவிட்டு பொது இடங்களில் குழப்பம் விளைவிப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றன.

இவற்றைக் கட்டுப்படுத்த சாவகச்சேரி கொடிகாமம் பொலிஸார் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டும் பயன் கிடைக்காத நிலையில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்கின்றனர். இருப்பினும் இவ்வாறான நிலைகளிலிருந்து எண்ணிக்கை குறைகின்ற நிலை காணப்படவில்லை.

சாவகச்சேரி நீதிமன்றிலும் மது போதையில் வாகனஞ் செலுத்துவோருக்கு அபராதம் விதித்தும் மது போதையில் பொது இடங்களில் குழப்பம் விளைவிப்போருக்கு 80 மணித்தியாலயங்கள் வரை சமுதாயப் பணியில் ஈடுபடுத்தியும் அவற்றின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றதே தவிர குறைந்ததாகத் தெரியவில்லை.

இந்த வருடத்தில் சாவகச்சேரி நீதிமன்றில் மதுபோதையில் வாகனங்கள் செலுத்திய குற்றத்திற்காக 200க்கு மேற்பட்டோருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா தொடக்கம் 19 ஆயிரம் ரூபா வரை அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மது போதையில் குழப்பம் விளைவித்த 58 பேரை சமுதாயப் பணியில் ஈடுபடுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்திய நால்வருக்கு தலா 10 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் மதுபோதையில் பொது இடத்தில் குழப்பம் விளைவித்த இருவரை சமுதாயப் பணியில் ஈடுபடுத்துமாறும் உத்தரவிடப்பட்டது.

இதேவேளை மதுபோதையில் வாகனம் செலுத்தியபோது சுமார் 100க்கு மேற்பட்டோர் விபத்துக்குள்ளாகி காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். (ற-9)

## கல்விமாணி பரீட்சை நவம்பர் 7 இல்

யாழ்ப்பாணம், ஒக். 17

ஆசிரியர்களுக்கான இலங்கை கல்விமாணி கற்கை நெறியைத் தொடருவோருக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் 7 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ள இந்தப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் 7,8, 14,15,28,29 ஆகிய திகதிகளில் இடம்பெறவுள்ளது. அதுபற்றிய நேர அட்டவணையும் வெளியிடப்பட்டுள்ளது. (ற-4)



சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு தரிசன விழிப் புலனற்றோர் பாடசாலை மாணவர்களால் 'வெள்ளைப் பிரம்பை அசட்டை செய்யாதீர்' எனும் தொனிப்பொருளில் நேற்றுமுன்தினம் பேரணியொன்று நடத்தப்பட்டது. கல்லடிப் பாலத்தடியில் இருந்து துளசி மண்டபம் வரை இந்தப் பேரணி நடைபெற்றது. வீடுகளில் முடங்கிக் கிடக்கும் விழிப்புலனற்றோரை வெளிக்கொணர்ந்து கல்வி கற்க அல்லது தொழில் புரிய உதவிசெய்யுங்கள், அவர்கள் சுயமாக வெள்ளைப் பிரம்புடன் நடமாட உள்ள தடைகளை நீக்கி அவர்கள் வீதியைக் கடப்பதற்கும், குறித்த இடத்தை அடையாளம் காண்பதற்கும் அதிக இரைச்சல், அதிக மழை, காற்று என்பன ஏற்படும்போது சிரமமின்றி பயணம் செய்வதற்கு அவர்களுக்கு வலிந்துதவ முன்வாருங்கள் போன்ற விடயங்கள் பேரணியின்போது வலியுறுத்தப்பட்டன. மட்டக்களப்பு தரிசன பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் பிரதேச செயலாளர், வைத்தியர், லயன்ஸ் கழக அதிகாரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டிருந்தனர். (ற)

# வயல் காணிகளை மீட்டுத் தாருங்கள்

## பரசங் குளம் மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.17

எமது வயல் காணிகளை அரச அதிகாரிகள் தமது உறவினர்களுக்கு வழங்கியுள்ளனர் என்று குற்றஞ்சாட்டியுள்ள நெடுங்கேணி பரசங்குளம் மக்கள் அவற்றை எமக்கு மீட்டுத் தாருங்கள் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிமலநாதனிடம் அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இந்தக் காணிகள் 1976 ஆம் ஆண்டு அரசால் மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இடப்பெயர்வின் பின்னர் பற்றைக் காடாகக் காணப்பட்ட அந்தப் பகுதியை வனஇலாகாத் திணைக்களம் தனதாக்கிக் கொண்டது. போரின் பின்னர் அந்தப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்கள் தமது காணிகளைக் கையளிக்குமாறு கோரினர். அதையடுத்துக் வனஇலாகாவிடம் இருந்து குறித்த காணிகள் விடுவிக்கப்பட்டுத் துப்புரவாக்கப்பட்டன.

இந்தநிலையில் காணிகளுக்கான 'பொமிற்' எம்மிடம் இல்லை என்று கூறி அவற்றை நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுடைய உறவினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுக்கின்றனர்.

இது தொடர்பில் தாம் பல தரப்பினரிடம் முறையிட்டபோதும் காணிகளுக்கான ஆதாரம் இல்லாதால் அவை வழங்கப்படவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர். அதேவேளை குறித்த அரச அதிகாரிகளின் உறவினர்கள் தம்மிடம் அந்தக் காணிகளுக்கான 'பொமிற்' இருக்கின்றது என்று கூறி அங்கு விதைப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பரசங்குள மக்கள் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சாள்ஸ் நிமல நாதனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கேட்டபோது இது தொடர்பில் பிரதேச செயலரிடம் கதைத்துள்ளேன் என்றார்.

அந்தக் காணிகள் அரச அதிகாரிகளின் உறவினர்களுடையதுதான் என்பதற்கான 'பொமிற்றின்' பிரதிகளைத் தருமாறு கேட்டுள்ளேன் என்றார்.

அந்தப் பிரதிகள் எனக்குக் கிடைத்ததும் அவற்றை காணிக் க்ச்சேரிக்கு அனுப்பி உறுதி செய்யவுள்ளேன். அவை செல்லுபடியற்றதாக இருந்தால் பரசங்குளம் மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு காணிகள் வழங்கப்படும் என்றார் அவர். (ற-21)

## சைவசமய அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 17

வண்ணை – சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவ சமய அபிவிருத்திக்கழகம் வருடம் தோறும் நடத்திவரும் சைவ சமய அறிவுப்பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி முதல் இடம்பெறவுள்ளன.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, மிருசுவில் அ.த.க. பாடசாலை, யாழ். இந்துக் கல்லூரி, காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம், வேலணை மத்திய க்ல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம், பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், மானிப்பாய் சத்தியசாயி பாடசாலை, மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி, கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை, பதுளை யஹாப்டன் கலைமகள் தமிழ் மகாவித்தியாலயம் மற்றும் பொலனறுவை யஹவன்பிட்டி தமிழ் மகாவித்தியாலயம் ஆகிய 16 பரீட்சை நிலையங்களில் பரீட்சைகள் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தரம் 3 தொடக்கம் தரம் 11 வரையான இந்தப் பரீட்சைக்கு பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 500 மாணவர்கள் தோற்றவுள்ளனர். இவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் பரீட்சார்த்திகள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்கும் அறநெறிப் பாடசாலைகளுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் எதிர்வரும் 17 ஆம்திகதி சனிக்கிழமை சைவசமய அபிவிருத்திக் கழக அறிவகம், இல. 82 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறும் சைவசமய அபிவிருத்திக் கழக பரீட்சைச் செயலர் சு.சிறீகாந்தன் தெரிவித்துள்ளார். (ற-ரி2)

## வெடி வெடித்து சிறுவர்கள் காயம்

அம்பாறை, ஒக்.17

சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீணாங்கேணி கிராமத்தில் நேற்று முன்தினம் பன்றிக்கு வைக்கப் பட்டிருந்த வெடி வெடித்து சிறுவர் இருவர் காயமடைந்துள்ளனர்.

சிறுவர்கள் பாடசாலை விட்டு வீடு திரும்பும்போது வீதியில் கிடந்த உருளை வடிவான பொருளொன்றை எடுத்துச் சென்று வீட்டில் விளையாடியபோதே அது வெடித்துள்ளது.

பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற)

# சிறுவர் தொழிலாளர் அற்ற மாவட்டமாக மட்டக்களப்பு

மட்டக்களப்பு, ஒக். 17

சிறுவர் தொழிலாளர்கள் அற்ற மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்துவதை இல்லாது செய்வது குறித்த மட்டக்களப்பு மாவட்டத்திற்கான வேலைத்திட்டம் மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறுவர் தொழிலாளர்கள் அற்ற மாவட்டமாக மட்டக்களப்பை பிரகடனப்படுத்துவது குறித்த உத்தியோகப்பூர்வ பிரகடனத்தை மாவட்ட அரச அதிபர் வாசித்தார்.

மாவட்ட தொழில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஜே.திருச்செல்வம், கிழக்கு மாகாண பிரதி தொழில் ஆணையாளரும், மட்டக்களப்பு மாவட்ட உதவித் தொழில் ஆணையாளருமான கே.எல்.கபீர், அம்பாறை மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் ரி.லக்ஷ்மிதரன், பிரதேச செய



லாளர்கள், சிறுவர்கள் தொடர்பில் செயற்படும் உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது சிறுவர்களை தொழிலில் அமர்த்துதல், அதற்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சிறுவர் தொழிலைக் குறைத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விளக்கங்கள் வழங்கப்பட்டதுடன், கலந்துரையாடலும் நடைபெற்றது. (ற)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொதுமன்னிப்பு குறித்து ஆலோசிக்க வேண்டும்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் கைதுசெய்யப்பட்டவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கும் விடயம் தொடர்பாக அரசு ஆலோசிக்க வேண்டும். இது எங்களுடைய மனிதாபிமானச் செய்தியாக மற்றவர்களுடைய மனதைச் சென்றடைந்து அவர்களின் மனதிலே ஒரு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். - இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கிருஸ்ண பிள்ளை துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் கொத்தணி முறையிலான சுத்திகரிப்பு வேலைத்திட்டத்தை ஏறாவூர்ப் பற்று செங்கலடி பிரதேச சபையில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்துவைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்க் கைதிகள் தங்களது விடுதலை கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தவிடயம்தொடர்பாககொள்கைத் திட்டமொன்றை வகுக்க வேண்டிய தேவை அரசுக்குள்ளது - என்றார். (ற)

# அரசியல் கைதிகள் விரைவில் நீதிமன்ற நடவடிக்கைக்குள்

## குற்றமற்றவர்கள் விடுவிக்கப்படுவர் என்கிறார் ராஜித

கொழும்பு, ஒக்.17

விடுதலையை வலியுறுத்தி உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் விரைவில் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்த அரசு தீர்மானித்துள்ளது என்றும், குற்றமற்றவர்களை விடுதலை செய்யவும், பெருங்குற்றச்சாட்டுக்கள் உள்ளவர்களைச் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சரவையின் இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இந்த நாட்டில் தற்போது அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை. பயங்கரவாதக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களே உள்ளனர் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்தச் செய் தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமது விடுதலையை வலியுறுத்திக் கைதிகள் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். இந்த விவகாரம் தொடர்பில் அமைச்சரவையில் நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது. அமைச்சர் மனோ கணேசன் அமைச்சரவைக்கு இந்த விடயம் தொடர்பில் நீண்ட விளக்கம் ஒன்றை வழங்கினார்.

இறுதியில் இந்த விடயம் தொடர்பில் அரசு இறுதித் தீர்மானம் ஒன்றை எடுத்தது. அதாவது விடுதலையை வலியுறுத்தி உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள அனைத்துக் கைதிகளையும் விரைவில் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

அந்தவகையில் குற்றமற்றவர்களை விடுதலை செய்யவும், பெரும் குற்றச்சாட்டுக்கள் உள்ளவர்களை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்துக் கைதிகள் தொடர்பாகவும் நீதிமன்ற நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அதன்படி இதுவரை காலமும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமல் இருக்கின்றவர்களை விடுதலை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். குற்றச்சாட்டுக் காணப்படுகின்றவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இவர்கள் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எனவே நீதி நிலைநாட்டப்படவேண்டும் என் பதில் நாங்களும் உறுதியாக இருக்கின்றோம்.



கைதிகளின் உணவு தவிர்ப்புப் போராட்டம் தொடர்பில் அரசு இந்த தீர்மானத்தையே எடுத்துள்ளது. இது தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்று கூறியுள்ளார். (ற)

## ஜனாதிபதியை விமர்சிப்போரை வெளியேற்றும் காலம் வருகிறது

### அமைச்சர் மகிந்த அமரவீர கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.17

ஜனாதிபதியை விமர்சிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களை வெளியேற்ற வேண்டிய காலம் நெருங்கிவிட்டது என்று தெரிவித்துள்ள அமைச்சர் மகிந்த அமரவீர, முன்னணியிலுள்ள இனவாதிகளின் செயற்பாடுகளின் காரணமாகவே பொதுத் தேர்தலில் சிறுபான்மை இன மக்களின் நம்பிக்கையை இழந்து தோல்வி கண்டோம் என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐ.நாவிலும் ஜெனிவாவிலும் எமக்கெதிரான சர்வதேச விசாரணையை தடுத்தவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே. ஜனாதிபதியின் முயற்சியால் இன்று சர்வதேச அழுத்தங்களிலிருந்து நாடும் மக்களும் பாதுகாக்கப்பட்டு உள்ளக விசாரணை இடம்பெறவுள்ளது.

ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் இனவாதக் கட்சிகள், உள்ளக விசாரணை என்றல்லாது, சர்வதேச விசாரணையே இடம் பெறப் போகின்றது என்றும் பொய் யான பரப்புரைகளை முன் னெடுக்கின்றன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர் ஜனாதிபதியே ஆவார்.

எனவே அந்த முன்னணியில் அங்கம் வகித்துக் கொண்டு வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் இன்று ஜனாதிபதியின் தூரநோக்குடனான செயற்பாடுகளை எதிர்க்கின்றனர், விமர்சிக்கின்றனர். இதற்கு இடமளிக்க முடியாது. இன்னமும் இவ்வாறானவர்களை எமது முன்னணிக்குள் இணைத்துக் கொள்வதா? வெளியேற்றுவதா? என்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. - என்றார். (ற)

## பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும் சொந்த ஊரிலேயே வசிப்பேன்

### ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.17

பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும், எனது சொந்த ஊரான பொலனறுவைக்குச் சென்று எனது வீட்டில் வசிப்பேனே தவிர ஜனாதிபதிக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் வசிக்கமாட்டேன் என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையின் நிலத்துக் கடியில் உள்ள இரண்டுமாடிக் கட்டடப் பராமரிப்புச் செலவைத் தவிர்க்க முடியாதுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பத்திரிகை நிறுவனப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நான் ஓய்வு பெற்ற பின்னரும் தற்போது நான் பயன்படுத்தும் கொழும்பிலுள்ள உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலேயே வசிக்கப்போவதாகப் தவறான செய்திகள் வெளிவந்துள்ளன. அந்த உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தைப் புனரமைப்பதற்குப் பெருமளவில் பணம் செலவு செய்யப்பட்டுள்ளது என்றும் பரப்புரை முன்னெடுக்கப்படுகின்றது. அதில் எந்தவிதமான உண்மையும் கிடையாது. கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகைக்கு நான் செல்லவில்லை அங்கு வசிப்பதற்கு போயிருந்தால் பராமரிப்பு செலவு மிகவும் அதிகமாகும். அதன் மின்சாரக் கட்டணம் மட்டும் மாதமொன்றுக்கு 150 லட்சமாகும். எனவே மாளிகையை வைபவங்களுக்கு மட்டுமே பயன்படுத்துகின்றேன். இதற்காக மாதம் 30 லட்சம் ரூபா மின்சாரத்துக்குச் செலவாகின்றது. இந்த மாளிகையின் நிலத்துக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு மாடிக் கட்டடத்தைப் பராமரிப்பதற்கான செலவு தவிர்க்க முடியாத செலவாகவுள்ளது. ஜனாதிபதி மாளிகையினது மட்டுமல்ல அதனோடு தொடர்புபட்ட ஏனைய நிறுவனங்களினதும் வீணான செலவுகள் நிறுத்தப்பட்டுள்ளன- என்றார். (ற)

## விசாரணை எனும் பெயரில் அரசியல் பழிவாங்கல்கள்

### குமுறுகின்றார் மகிந்த எம்.பி.

கொழும்பு, ஒக். 17

விசாரணைகள் என்ற பெயரில் தற்போது முற்றுமுழுதாக அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளே இடம்பெற்று வருகின்றன என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சுயாதீன தொலைக்காட்சிக்கு தேர்தல் விளம்பரக் கட்டணங்களைச் செலுத்தத் தவறியமை குறித்த விசாரணைக்காக நேற்றுமுன்தினம் பெரும் மோசடிகள் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு சென்ற மகிந்த ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் மகிந்த தெரிவித்துள்ளதாவது:-

ஏதோ பெரும் குற்றங்களைச் செய்ததாக எம்மை விசாரணைக்கு அழைத்துள்ளனர். ஆனால் எனக்குத் தெரிந்த அளவில் குறித்த கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் சுயாதீன தொலைக்காட்சி அது குறித்துக்கடிதமும்அனுப்பியுள்ளது. இதனை வைத்துப் பார்க்கும்போது, இது முற்றுமுழுதாக அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாகும். நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல் நான் கட்சியின் வேட்பாளர் மட்டும்தான். கொடுக்கல் வாங்கல் குறித்து ஏதேனும் இருந்தால் அதனைக் கட்சியுடன் பார்த்துக் கொள்ள வேண்டும்.

எவ்வாறெனினும், இவை குறித்து விசாரிப்பதற்கு இந்த ஆணைக் குழுவுக்கு எவ்வித அதிகாரமும் இல்லையென்பதை நாம் சுட்டிக் காட்டியுள்ளோம்.- என்றார். (ற)

## அனைவரும் ஒன்றிணைந்தால் மட்டுமே போதைப் பொருளைக் கட்டுப்படுத்தலாம்

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.17

போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாவனை என்பன சகல நாடுகளிலும் காணப்படும் பொதுப் பிரச்சினையாகும். சகலரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே அவற்றை ஒழிக்க முடியும். - இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திர வலயத்தில் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதிகாரிகள் பங்குகொள்ளும் மூன்று நாள் உயர் மட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாவனை என்பன சகல நாடுகளிலும் காணப்படும் பொதுப் பிரச்சினையாகும். அந்தவகையில் எமது நாட்டில் குறிப்பிட்ட இந்தப் பிரச்சினை பரந்தளவில் காணப்படுகின்றது.

2009 ஆம் ஆண்டிலிருந்து கடல் வழியைப் பயன்படுத்திக் கொள்கலன்கள் மூலம் போதைப் பொருள்களைக் கடத்தும் வீதம் அதிகரித்துக் காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் போதைப் பொருள் மற்றும் குற்றம் தொடர்பான அலுவலகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இது போன்ற மிகப் பெரிய சவாலை முறியடிக்க அனைவரும் கூட்டாகவும் ஒன்றுபட்டும் செயற்பட முன்வர வேண்டும். அத்துடன் நாடுகளுக்கு இடையிலான, கூட்டுப் பயிற்சி போன்றவை இதற்கு மிகவும் இன்றியமையாத வையாகும்.

இலங்கையை பொறுத்த மட்டிலும் இது ஒரு பெரும் சவாலாகும். அவற்றை முற்றாக முறியடிக்க வேண்டியது சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அனைத்துத் தரப் பினரதும் கடமையாகும்.எமது நாட்டில் போதைப்பொருள் பாவனையை முற்றாக முறியடிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பல்வேறு வேலைத்திட்டங்களை ஆரம்பித்து அவற்றில் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றார்.

அதேபோன்று இது தொடர்பில் ஆராய விசேட ஜனாதிபதி செயலணி ஒன்றையும் உருவாக்கியுள்ளார். இளைஞர்கள், மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பிரபல கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்காரவை விசேட தூதுவராக நியமித்துள்ளார்.

போதைப்பொருள் இல்லாத நாடொன்றை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.- என்றார். (ற)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உங்களின் வளர்ச்சி கண்டு பிறர் பொறாமைப்படுவர். கூடுதல் உழைப்பினால் தொழில், வியாபாரம் சீராகும். பெண்கள், வீட்டுச் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பர்.

**இடபம்:** உற்சாகத்துடன் அன்றாடப் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். வழக்கு விவகாரத்தில் சுமுகமான தீர்வு கிடைக்கும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்க வாய்ப்புண்டு.

**மிதுனம்:** நல்ல செயல்களில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து இலாபம் உயரும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**கடகம்:** குடும்பத்தினரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் புதிய மாற்றங்களை உண்டாக்குவீர்கள். உணவு ஒவ்வாமையால் அஜீரணம் ஏற்படலாம். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவியைப் பெறுவதில் தாமதம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் உழைப்புக் கேற்ப ஆதாயம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக் காக கடன் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தவும்.

**கன்னி:** கடந்த கால உழைப்பின் பயன் தற்போது கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். உறவினருக்குத் தேவையான பண உதவி செய்வீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகள் பெருமை சேர்க்கும்.

**துலாம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் நெருங்கிப் பழக வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். மனைவி வழியில் திடீர் செலவு செய்ய நேரிடும். வாகனப் போக்குவரத்தில் மிதவேகத்தைக் கடைபிடிக்கவும்.

**விருச்சிகம்:** சிறிய முயற்சியில் கூட பலமடங்கு நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். தாயின் தேவையை நிறைவேற்றி ஆசி பெறுவீர்கள். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**தனுசு:** மற்றவர்களின் குடும்ப விடயத்தில் தலையிட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். மனைவியின் ஆலோசனையை ஏற்பது நன்மையளிக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**மகரம்:** எந்தச் செயலையும் நேர்த்தியுடன் செய்து முடிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். விலகிய சொந்தமும் விரும்பி வந்து உறவாடுவர். வெகுநாளாக வாங்க விரும்பிய பொருளை வாங்குவீர்கள்.

**கும்பம்:** சவால்களை முறியடித்து சாதனை படைப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பிள்ளைகள் வழியில் சுபசெலவு உண்டாகும். குடும்பத்துடன் சுற்றுலா சென்று மகிழ்வீர்கள்.

**மீனம்:** உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப இலாபம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை செலுத்தத் தொடங்குவீர்கள். மாணவர்கள் படிப்பில் முன்னிலை வகிப்பர்.

# விலகினார் கார்த்தி

திகதிகள் பிரச்சினை காரணமாக இயக்குநர் மணிரத்னம் இயக்க விருக்கும் படத்தில் இருந்து விலகியிருக்கிறார் கார்த்தி. மணிரத்னம் படத்தின் முதற்கட்டப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. கார்த்தி, துல்கர் சல்மான், கீர்த்தி சுரேஷ் முதலில் ஒப்பந்தம் செய்யப்பட்டார்கள். அதனைத் தொடர்ந்து நித்யா மேனன் ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

இந்தப் படத்தை தமிழ் மற்றும் தெலுங்கு என இரு மொழிகளிலும் படமாக்கத் திட்டமிட்டார் மணிரத்னம். துல்கர் சல்மான் தேதிகள் பிரச்சினை காரணமாக விலகியதால் தெலுங்கு நடிகர் நானி ஒப்பந்தம் செய்யப்பட்டார். தற்போது தெலுங்கு தயாரிப்பாளர் ஒருவரை இந்தப் படத்தின் இணைத் தயாரிப்பாளராக்கப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார் இயக்குநர் மணிரத்னம். கடந்த வாரம் இப்படத்தில் இருந்து கீர்த்தி சுரேஷ் விலகினார்.

இந்த நிலையில், எவருமே எதிர்பாராதவிதமாக இந்தப்படத்தில் இருந்து விலகி யிருக்கிறார் கார்த்தி. மணிரத்னத்திடம் உதவி இயக்குநராகப் பணியாற்றிவிட்டு, அவருடைய படத்திலேயே நாயகன் என்று வந்த வாய்ப்பை விடக்கூடாது என நினைத்து இப்படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டார் கார்த்தி.

ஜனவரியில் படப்பிடிப்பு என்று மணிரத்னம் திட்டமிட்டு வந்தார். ஆனால், தோழா, காஷ்மோரா என்ற இரு பெரிய பட்ஜெட் படங்கள் இருப்பதால் ஜனவரியில் திகதிகள் ஒதுக்க முடியாத சூழல் ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து மணிரத்னத்துக்கு போன் பண்ணிய கார்த்தி, தனது நிலையை எடுத்துக் கூறி, படத்திலிருந்து விலகிவிட்டார். தற்போது அவருடைய வேடத்துக்கு ஃபகத் பாசிலிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள். திகதிகள் சரியாக அமையும் பட்சத்தில் அவர் ஒப்பந்தம் செய்யப்படுவார் என்கிறது தயாரிப்புத் தரப்பு. அடுத்த ஆண்டு படப்பிடிப்புப் பணிகள் தொடங்க இருக்கும் இந்தப் படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கஇ ரவிவர்மன் ஒளிப்பதிவு செய்யவிருக்கிறார்.



# வேற்றுக்கிரகவாசிகள் என்னைக் கற்பழித்துவிட்டார்கள் பெண் பரபரப்புப் புகார்



வேற்றுக் கிரகவாசிகள் இருக்கிறார்களா? இருந்தால், அவர்கள் எப்படி இருப்பார்கள்? எம்மைப் போன்று இருப்பார்களா? அல்லது சினிமாவில் காட்டப்படும் உருவங்கள் போன்று இருப்பார்களா? போன்ற எண்ணற்ற கேள்விகள் எம் மனதில் எழுவது உண்டு. வேற்றுக் கிரகவாசிகள் உள்ளார்களா என்றகேள்விக்குபெரும்பாலான விஞ்ஞானிகள் ஆம் என்றே பதில் கூறுகிறார்கள்.

தற்போது அமெரிக்க விமானப்படையின் முன்னாள் பெண் ஊழியர் ஒருவர் வேற்றுக் கிரகவாசிகள் தன்னைக் கடத்திச் சென்று கற்பழித்ததாக அதிர்ச்சிகரமான தகவலொன்றை வெளியிட்டுள்ளார். அமெரிக்க விமானப் படையில் ரேடர் டிராபிக்கிங் ஆபரேட்டராக இருந்தவர் நியாரா தெரலா இஸ்லீ (60). இவர் நெவேடாவில் உள்ள விமானப்படைத் தளத்தில் நூனோபா சோதனை பகுதியில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். விமானப்படையில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் அவர் கொலரடோ மாநிலத்தில் வசித்து வருகிறார்.

எனக்கு 25 வயதாக இருக்கையில் வால் உள்ள ஊர்ந்து செல்லும் வேற்றுக் கிரகவாசிகளால் நான் கடத்தப்பட்டேன். அவர்கள் 7 மாதகால இடைவெளியில் என்னை 8 முதல் 10 முறை கடத்தி நிலவுக்குக் கொண்டு சென்றனர். என்னை நிலவில் வைத்து அவர்கள் பலமுறை பாலியல் பலாத்காரம் செய்தனர்.

என் குழந்தையிடம் திரும்பி வர வேண்டும் என்பதால் அவர்கள் செய்ததை எல்லாம் பொறுத்துக் கொண்டேன். நான் எதிர்ப்புத் தெரிவித்தால் என்னைக் கொன்று விடுவார்களோ எனப் பயந்தேன். ஹிப்னாசிஸ் செய்த பிறகே இவை அனைத் தும் எனக்கு நினைவுக்கு வந்தன என்றும் அவர் தெரிவித் துள்ளாராம்.



மார்மோஸட் எனப்படும் ஒருவகைக் குரங்குகள் தெற்கு அமெரிக்காவில் உள்ள மழைக்காடுகளில் வாழ்கின்றன. இதுவே உலகில் வாழும் குரங்கு இனங்களில் மிக சிறிய குரங்கு வகையாகும். இவை சுமார் 16 செ.மீ உயரம் கூட வளர முடியாதவை. இவற்றின் மொத்த உயரம் வாலுடன் சேர்த்தால் 20 செ.மீ வரை தான். ஒரு நன்கு வளர்ந்த ஆண் குரங்கு மனிதனின் உள்ளங்கையில் அடங்கி விடும். இவ்வகைக் குரங்குகள் ஒன்பது பேர் கொண்ட குழுக்களாக வாழ்கின்றன.



வேகமா போடா
பொலிஸ் பிடிக்கப் போறான்..

## பேஸ் புக்கில் பிடித்தவை...









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர் தினத்தை முன்னிட்டு உண்டியல் திருவிழாக்கள்

## மக்கள் வங்கியின் ஏற்பாட்டில்

வரணி,ஒக்.17
சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கொடிகாமம் மக்கள் வங்கிக் கிளையால் இந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதிவரையான காலப் பகுதியில் 4 தினங்கள் உண்டியல் திருவிழாக்கள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. முதலாவது நிகழ்வு கடந்த முதலாம் திகதி நடைபெற்றது. இரண்டாவது நிகழ்வு எதிர்வரும் நவம்பர் 3 ஆம் திகதியும், மூன்றாவது நிகழ்வு எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி யும், 4 ஆவது நிகழ்வு டிசெம்பர் 31 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இது வரை காலமும் குறித்த வங்கியால் வழங்கப்பட்ட உண்டியல்கள் நிரப்பப்பட்டோ அல்லது வைப்புக்களைச் சேர்த்தோ தம்மிடம் ஒப்படைப்பதன் மூலம் குறித்த உண்டியல் திருவிழாவில் கலந்து கொள்ளமுடியும். மேலும் மேற்குறிப்பிட்ட காலப் பகுதியில் 500 ரூபாவும், அதற்கு மேற்பட்ட தொகைகளையும் சிறுவர் சேமிப்புக்களில் வைப்புச் செய்யும் அனைத்து நபர்களுக்கும் சிறப்புப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ–122)

# மும்மொழித் திட்டம் செயற்பட்டால் மாணவர் ஆளுமை மிக்கவராவர்

## தீவக வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.17
கல்வி உலகில் மாறுதல் ஏற்படும் தற்போதைய காலகட்டத்தில் மாணவர்களிடையே மும்மொழித்திட்டம் உரிய முறையில் நடைமுறைப் படுத்தப்படின், மாணவர்கள் சிந்தனா சக்தி மற்றும் ஆளுமைத் திறனுள்ள மாணவர்களாக உருவாக்கப்படுவர்.
–இவ்வாறு தீவக வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் (தமிழ்) சி.செல்வராஜா தெரிவித்தார்.
கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலய மொழித்தினமும் – தமிழோசை புத்தக வெளியீடும் பாடசாலை அதிபர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அவர் மேலும் தெரிவிக்கும்போது, மும்மொழித்திட்டத்தை மாணவர்களுக்கு வழங்குவதற்காக அரசு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. மாணவர்களிடையே மும்மொழித்திட்டம் உரிய முறையில் நடை முறைப் படுத்தப்படின் மாணவர் ஆளுமையுள்ள சமுதாயமாக மாறுவதுடன் நாட்டின் இன, சமய, மொழி ரீதியான வேறுபாடுகள்களையப் பட்டு ஓர் ஆரோக்கியமான எதிர் காலச் சந்ததியினர் உருவாக வழி சமைக்கப்படும். அத்துடன் மும்மொழி தெரிந்த மனிதன் மூன்று மனிதர்களுக்கு சமம் என்ற வகையில் தனிமனித நிலையும் சிறந்த முறையில் கட்டியெழுப்பப்படும் என்றார். (ஐ–50)

# விதிகளை மீறி சாரத்தியம்: 6 பேருக்கு ரூ. 61 ஆயிரம் அபராதம்

சாவகச்சேரி, ஒக்.17
போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய ஆறு பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று மொத்தமாக 61 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகளைத் தனித்தனியாக விசாரித்த நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை மதுபோதையில் வாகனம் செலுத்திய நால்வருக்கு தலா 10 ஆயிரத்து 500 ரூபா வீதமும் காப்புறுதி, வாகன வரி, சாரதிய அனுமதிப்பத்திரம் ஆகியவை இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 11 ஆயிரத்து 500 ரூபாவும், காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய ஒருவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதம் விதித்தார்.
இதேவேளை – நுளம்பு உற்பத்தியாகக்கூடிய வகையில் குடியிருப்புப் பகுதிகளை வைத்திருந்த கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த இருவருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ற)

# உசன் இராமநாதன் ம.வி. மாணவர் நாடாளுமன்ற அங்குரார்ப்பணம்

சாவகச்சேரி, ஒக்.17
உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர் நாடாளுமன்ற அங்குரார்ப்பண நிகழ்வும் நாடாளுமன்ற கன்னி அமர்வும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.
அதிபர் த. சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், கௌரவ விருந்தினராக 'வேள்ட் விஷன்' நிறுவன சாவகச்சேரி பிரதேச திட்ட முகாமையாளர் அ.கி.றொசைறோவும் கலந்து கொள்ளவுள்ளனர்.
நிகழ்வில் மாணவர் நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைவாக சபாநாயகர், பிரதமர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் பதவியேற்பும் அதன் பின்னர் மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவியேற்பும் இடம்பெற்று மாணவர் நாடாளுமன்ற முதலாவது அமர்வும் இடம்பெறவுள்ளது.(ற)

# ஆசிரியர் கௌரவிப்பு

சாவகச்சேரி, ஒக்.17
தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு கைதடி ஸ்ரீவிநாயகர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.
தென்மராட்சி கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் வலய முன்பள்ளிகளைச் சேர்ந்த 141 ஆசிரியர்களும் இளைப்பாறிய 3 ஆசிரியைகளும் நிகழ்விதீலல் கௌரவிக்கப்படவுள்ளனர்.
தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன், செலான் வங்கி சாவ கச்சேரி கிளை முகாமையாளர் யூ.டி. நிக்ஸன் றொட்றிக்கோ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற–9)

# தகவல் தொழில்நுட்பத் துறைக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.17
இலங்கை தகவல் தொழில்நுட்பத்துறைக். கண்காட்சி, இலங்கை தகவல் தொழில்நுட்பத்துறை சமாசத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.
எதிர்வரும் நவம்பர் மாதம் 20ஆம், 21ஆம் மற்றும் 23 ஆம் திகதி வரையான மூன்று தினங்கள் கொழும்பில் நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சியில், யாழ்.வர்த்தக தொழிற்றுறை மன்றத்துடன் இணைந்து வடமாகாண தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களும் கலந்து கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
இந்தக் கண்காட்சியில் கலந்துகொள்ள விரும்பும் நிறுவனங்களை எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் யாழ்.வர்த்தக தொழிற்றுறை மன்றத்துடன் தொடர்புகொள்ளுமாறும் மன்றத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (ற–ரி5)

# நிர்வாக சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 17
அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் நிர்வாக சபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் தலைவர் நா.கிருஷ்ணபிள்ளை தலைமையில் பி.ப. 3 மணிக்கு ச.சாம்பசிவம் இல்லத்தில் நடைபெறவுள்ள இந்த நிர்வாக சபைக் கூட்டத்தில் வடமாகாண சபையிடம் பெறப்பட்ட பொருள்கள் மற்றும் கல்வி தொடர்பிலான விடயங்கள் குறித்து ஆலோசிக்கப்படவுள்ளன. எனவே அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அகில இலங்கைத் திருவள்ளுவர் மகா சபையினர் தெரிவித்துள்ளனர். (ற–ரி5)

## தென்மராட்சி ஆசிரியருக்கு செயலமர்வு

சாவகச்சேரி, ஒக்.17
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 2016 ஆம் ஆண்டு தரம் 7, தரம் 11 வகுப்புகளில் சைவ சமய புதிய பாடத்திட்டம் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று காலை 8.30 மணி தொடக்கம் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் நடைபெறும்.
2016 ஆம் ஆண்டு தரம் 7 [illegible] பாடம் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களைச் செயலமர்வில் பங்குபற்றச் செய்யுமாறு பாடசாலைகளின் அதிபர்களுக்கு வலயக் கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ற–9)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
கிளி / கோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலயம்

2015 தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்று பாடசாலைக்கும் எமது சமூகத்திற்கும் பெருமைசேர்த்த இந்த மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
மை. டனார்த்தன் - 175 புள்ளிகள் (மாவட்ட நிலை 15), ச. கவினா - 174 புள்ளிகள் (மாவட்ட நிலை 17) க. இந்துஜா - 162 புள்ளிகள் (மாவட்ட நிலை83), கு. திருக்குமரன் - 159 புள்ளிகள் (மாவட்ட நிலை 106) ஜூ. சன்சிகா - 154 புள்ளிகள்
இந்த மாணவர்களை நெறிப்படுத்திய அதிபர் மற்றும் ஆசிரியர் களான ஆ.சிவசீலன், மு.கமலக்கண்ணன் மற்றும் ஏனைய ஆசிரி யர்களுக்கும் பெற்றோர்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.
வாழ்த்துவோர்: பெற்றோர்கள், கோணாவில் கிளிநொச்சி.

10 ஆவது அகவை வாழ்த்தும் பாராட்டு வாழ்த்தும்

யா/நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி
செல்வி விக்டர் தியாகராசா தரங்கினி
2015 தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த இவரை வாழ்த்தி, இந்நிலைக்கு உயர்த்திய ஆசிரியர், கல்லூரிச் சமூகத்தினரைப் பாராட்டுவதுடன் இவர் மேலும் பல சாதனைகள் படைக்க வேண்டுமென இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.
Best Wishes
வாழ்த்துவோர்: பெரியம்மா அன்ரா, மாமா குடும்பத்தினர் (பிரான்ஸ்)
தாத்தா, அன்ரா குடும்பம் (நெடுந்தீவு)
(64307) (13.15.16)

யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
2015 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்

மாணவர் விவரம்: இடமிருந்து வலம்
1. ற. உஷானி - 160 புள்ளிகள்
2. இ.யதுர்சனா - 171 புள்ளிகள்
3. உ.பிரவீன் - 161 புள்ளிகள்
4. சு.பதுசன் - 162 புள்ளிகள்
5. த.கனிஸ்ரன் - 157 புள்ளிகள்
6. யோ.சங்கமன் - 166 புள்ளிகள்
7. தி.ஜெகதாயினி - 173 புள்ளிகள்
Congratulations
Congratulations
இடமிருந்து வலம் இருப்பவர்
திருமதி ப. உதயகுமார் (ஆசிரியை)
திருமதி க. சரவணபவன் (அதிபர்)
வி. சத்தியசீலன் (ஆசிரியர்)
இந்த மாணவர்கள் கல்வியில் மேன்மேலும் வளர வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம் (65389) (13.15.16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

விண்ணக வாழ்வின்

**திருமதி ஜெயராணி ரெட்ணராஜா**



புன்னகை முகம் பூத்து
பொங்கிடும் மகிழ்வு தந்து
உயிராய் உடலாய் உவப்புடன்
- வாழ்ந்து
இறைவனடி சேர்ந்திரே - நீர்
ஆண்டவன் பாதத்தில்
அமைதியாகத்
துயில்கொள்வீர்.

பிறப்பு 21.03.1949

இறப்பு 18.09.2015

கணவர்
- குடும்பத்தினர்.

12/3, விதானையார் வீதி,
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

## 30ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**சின்னப்பு குணசிங்கம்** (காந்தன்)



அன்பின் வடிவமாய்
அறிவின் சுடராய்
தயாள குண உருவாய்
தரணி போற்ற
வாழ்வு கண்டு
எங்களையும் நல்வாழ்வு
காண வைத்த
எங்கள் அன்புத் தெய்வமே!
இறை நிழலில்
இன்பமுத்தி நிலைபெற்று
அமைதி பெற
பிரார்த்திக்கின்றோம்

தோற்றம் 16.07.1946

மறைவு 16.09.1985

என்றும் நினைவில்
மனைவி,
பிள்ளைகள்

3ஆம் கட்டை,
சிங்கராயர் வீதி, கல்வியங்காடு.

(64003)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மண்மகிழ 14 . 10 . 1953

விண்நெகிழ 17 . 10 . 2011

**அமரர் பூதத்தம்பி யோகநாதன்**
**(Director of Customs)**

அண்ணா எங்கிருந்து நீ பாடுகின்றாயோ!
இன்பக்தமே பாடுகின்றாயோ!
இந்த நிலை என்று மாறுமோ! அண்ணா
உனைக்காணும் இன்பநாளும் வந்து சேருமோ ! அண்ணா
உன்னையும் மறப்பதுண்டோ - மறந்தாலும்
உள்ளத்தில் அமைதியுண்டோ - அண்ணா
உன்னையும் மறப்பதுண்டோ

தங்களின் பிரிவால் துயருறும் தம்பிமார்கள்.
பூ. மகேந்திரநாதன் - கொழும்பு - 03
பூ.இரகுநாதன் - கொழும்பு - 06

(65258) (14,16,17)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **சங்கரப்பிள்ளை செல்லத்துரை**

(ஓய்வு பெற்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர் - கைதடி அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை)

திதி: 17.10.2015

மலர்வு 18.01.1951

உதிர்வு 01.10.2011

பரசத்தின் நிறைகுடமான எம் அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் நான்கு சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம் மனதை விட்டகலாது!
என்றென்றும் உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

புற்றளை. புலோலி. (64022) (14,15,16) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் மனிதவள அபிவிருத்தி
உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
எ.றஞ்சித்ராஜ்
அவர்களின் அன்புத் தந்தை
**கஸ்பாறு எசக்கியேல்**
15.10.2015 காலமானதையிட்டு அவரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலியையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிசங்கம்
பிரதேச செயலகம், வலி. தெற்கு, உடுவில்.

(15929) (14, 15, 17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



மலர்வு 03 . 07 . 1943

உதிர்வு 17 . 09 . 2015

**திருமதி கனகேஸ்வரி(பிள்ளையம்மா) லங்கா சுந்தரம்**

இனிய நாள்கள் முப்பத்தொன்று சென்றிடினும்
மறைந்திடுமா உங்கள் நினைவு
பரிதவிக்குதம்மா எம் நெஞ்சம்
உங்கள் புன் சிரிப்பைக் காண
விழியோரக் கண்ணீருடன் காத்திருக்கின்றேன்.


17.09.2015 அன்று மலேசியாவில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் பிரிவுச் செய்தி அறிந்து இவரின் உறவினர்களின் வீடுகளில் நடைபெற்ற துக்க அனுட்டிப்பு நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்களுக் கும் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று 17.10.2015 சனிக்கிழமை மு.ப 11.30 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து,சீரணி நாகபூசனி அம்பாள் மண் டபத்தில் மதியபோசன நிகழ்வும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(64043) (14,16,17) **குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**பொன்னையா மயில்வாகனம்**



தோற்றம் 01.03.1928

மறைவு 28.09.2014

ஆண்டொன்று மறைந்து
விட்டது அப்பா
அகலுமா உங்கள்
பிரிவின் சோகம்
ஆறவில்லை நம் இதயம்
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள்
என்றென்றும்
மனதை விட்டு அகலா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.
C.C.T.M பாடசாலை ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு.

(65322) (15,15,16)

### புள்ளி விவரவியல் தினம் 20ஆம் திகதி

உலக புள்ளி விவரவியல் தினத்தை எதிர்வரும் 20 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் கொண்டாடு வதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக் களம் தெரிவித் துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட புள்ளி விவரக் கிளை யால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வுகள் எதிர் வரும் 20ஆம் திகதி காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதில் புள்ளிவிவரவியல் தொடர்பான ஆக்க பூர்வ மான கருத்தூட்டல்களும், கௌரவிப்பும் நடைபெற்றவுள்ளன.இந்தநிகழ்வில்முல்லைத்தீவு மாவட்ட செயலர் திருமதி ரூபவதி கேதீஸ் வரன் கலந்துகொள்ளவுள் ளார். (ற-102)

### நூல் வெளியீடு

இராசையா ஸ்ரீதரன் எழுதிய குழந்தை இலக் கியம் சிறுவர் கதைக்கொத்து நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். நாவலர் கல்வி நிலைய உள்ளரங்கில் இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பிரதிப் பிரதம ஒழுக்காற்று அதிகாரி ஐ.கோ.சந்திரசேகரன் தலைமையில் இடம்பெறவுள்ள வெளி யீட்டு நிகழ்வில் நூல் வெளியீட்டு உரையை ஓய்வு நிலைக் கல்விப் பணிப்பாளர் கு.சரவணப வானந்தன் நிகழ்த்த வுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள் ளனர். (ற-ரி2)

### வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வுகள்

லயன்ஸ் கழகமும் விழிப்புலனற்றோர் சங்கமும் இணைந்து நடத்தும் வெள் ளைப்பிரம்பு தின நிகழ்வு இன்று சனிக் கிழமை, கொக்குவில் இந்துக் கல்லூரி சுப்பிரமணிய மண்டபத்தில் நடை பெற வுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக யாழ்ப் பாணப் பல்கலைக் கழ கத்தின் தமிழ்த்துறை ஓய்வு பேரா சிரியர் எஸ்.சிவலிங் கராசா கலந்து கொள்ள வுள் ளார்.

மேற்படி நிகழ்வில் விழிப் புலனற்றோர் சங்க உறுப் பினர்களின் கலை நிகழ்ச் சிகளும் இடம் பெறும் எனவும், ஆர்வலர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறும் கழகத்தின் தலைவர் வி.சதீஸ் வரன் கேட்டுக் கொண்டுள்ளார். (ற-ரி6)

### முதியோர் விழா

இலங்கை முதியோர் சுக வாழ்வுக் கழகவடமாகாண அமையம் நடத்தும் முதி யோர் தினவிழா நாளை சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ்.வேம் படி மகளிர் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள யாழ்.சென்ஜோன்ஸ். அம்புலன்ஸ் காரியா லய மண்டபத்தில் இடம் பெறும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மருத்து வம், உடல்நலம், மன நலம், உளவியல், ஆன் மிகம்,ஆகியதுறைகளின் துறைசார் மருத்துவர் கள், நிபுணர்கள் பங்கு பற்றி முதியோர் சுக வாழ்வு முறைகள், வழி காட்டல்கள் பற்றி விரிவு ரைகளும், கலந்துரை யாடல்களும் நடத்த உள் ளனர். வடமாகாண சகல ஓய்வூதியர்களும், முதி யோர்களும் நிகழ்வில் பங்குபற்றி பயன் பெறு மாறு அமையத் தலைவர் சுகணேச மூர்த்தி துண்டுப் பிரசுரம் ஒன்றின் மூலம் அறிவித்துள்ளார். (ற-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாணி விழா

யாழ்ப்பாணம், ஒக். 17

வேலணை பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் வாணிவிழா எதிர்வரும் சனிக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில் நால்வர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வானது யாழ். மாவட்டச் செயலகத்தின் தொழில்நுட்ப அலுவலரும், சமயப் பொறுப்பாளருமான ப.ஞானபண்டிதன் தலைமையில் நடைபெறவுள்ளது. மேற்படி விழாவில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு செயற்குழு அறிவித்துள்ளது. (ற-ரி6)

## அனுமதிப் பத்திரம் இன்றி சாரத்தியம்: ரூ. 5,000 அபராதம்

பயிற்சியாளருக்குரிய சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனத்தைச் செலுத்தப் பயிற்சியளித்த ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இளைஞரொருவருக்கு எதிராக யாழ்ப்பாண போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸாரால் யாழ்.நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. குறித்த இளைஞர் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதையடுத்து அவருக்கு நீதிமன்றால் 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ற-103)

**தேவை**

திருகோணமலையில் வைத்திய தம்பதியினரின் வீட்டில் வேலைக்கு பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 555 3610, 077 125 9881

**பிரத்தியேக வகுப்பு**

வீட்டில் வந்து ஆங்கில இலக்கணம் தெளிவாகக் கற்பிக்கப்படும். J.லக்சிக்கா
தொடர்பு: 077 5342 025

**விற்பனைக்கு**

கறுப்பு நிற Rot weiller - German Shepherd ஆண், பெண் 1 ½ மாத நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. பூச்சி மருந்து. தடுப்பு ஊசி போடப்பட்டது. விலை நேரில்.
சிவானந்தன்- 077 634 1541

**விஜயதசமியை முன்னிட்டு**

ஏடும் சகலகலாவல்லிமாலைப் புத்தகமும் அன்னா தொழிலகத்தில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு: அன்னா தொழிலகம் இணுவில்.

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் இராசாவின் வீதியில் நான்கு அறைகளுடன் கூடிய வீடு ஒன்று வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0720548214

**ச.தங்கமாமயிலோனின் வணங்கற்பாக்கள்**

**நூல் வெளியீட்டுவிழா**

தலைவர்
பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா
(முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

பிரதமவிருந்தினர்கள்
வாழ்நாள் பேராசிரியர் - அ.சண்முகதாஸ்
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
முனைவர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ்
(முன்னாள் ஆய்வுப் பேராசிரியர் கக்சுயின் பல்கலைக்கழகம்,ஜப்பான்)

சிறப்பு விருந்தினர்
பேராசிரியர் தி. வேல்நம்பி
(வணிகபீடாதிபதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

நூலிலிருந்து சில பாடல்கள் பாடுதல்
செல்வி ஆதித்யா அருணகிரிநாதன்

இடம்: திருநெல்வேலி பழங்கிணற்றடிப் பிள்ளையார் கோவில் கல்யாண மண்டபம்.
காலம்: 2015.10.18 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: காலை 9.30

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(விழா ஏற்பாட்டுக்குழு)
(64046)
(13.11.16.16)

**காணி வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கண்டுக்குளிக்கு அருகில் நில.பர. 2 குளி 0.25 விஸ்தீரணம் 6 அறைகள் கொண்ட நவீன வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 022 9762 (65427) (14.15.17)

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை வீதி சயன்ஸ் அக்கடமி ரியூசன் சென்ரருக்கு அருகில் வீடு கிணற்றுடன் சேர்ந்த மூன்று பரப்பு ஆதனம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: சந்திரதாசன் - 077 610 6760
சிவா - (416) 438 8509
(416) 845 8509
(65515)

**வீடு வாடகைக்கு உண்டு**

சாவகச்சேரி A-9 வீதியில் இருந்து நுணாவில் எல்லை ஒழுங்கையில் இருந்து 50 யார் தூரத்தில் வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 664 14 99
(64017)

**சமையல் ஆள்கள் தேவை**

எமது நிறுவனத்துக்கு (High Class Veg. Food) பின்வரும் வேலையாள்கள் உடன் தேவை. சம்பளம் மற்றும் இதரகொடுப்பனவுகள் பேசித் தீர்மானிக்கலாம்

* ரீமேக்கர்
* சமையலாளர்கள்
* உதவி சமையலாளர்கள்
* கிளீனர்ஸ்

அனுபவமுள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும்
. ஷைலோ ஐஸ்கிறீம் மற்றும் உணவகம்
இல: 442, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
T.P: 077 771 0785

**கே ஜெ வி "ரயர்" இறக்குமதியாளரும் வழங்குனரும்**

அனைத்து வாகனங்களுக்கும் தேவையான ரயர் மற்றும் ரியூப் வகைகளை முதன் முறையாக எம்மவரின் நிர்வாகத்தின் கீழ் வெளிநாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டு வாடிக்கையாளர்களின் நன்மைகருதி குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

தரச் சான்றுகள்: CCC, ISO9001, SONCAP, ECE, DOT, GCC, REACH

உழவு இயந்திரத்திற்கான ரயர்கள்
- அளவு 12.4-28 (12Ply) விலை ரூபா 41000 ரியூப் ரூபா 3500
- அளவு 6.00-16 (6Ply) விலை ரூபா 9500 ரியூப் ரூபா 1200
- அளவு 6.50-16 (12Ply) விலை ரூபா 10500 ரியூப் ரூபா 1200
- அளவு 7.00-15 (12Ply) விலை ரூபா 11300 ரியூப் ரூபா 1200
- அளவு 7.00-16 (12Ply) விலை ரூபா 11800 ரியூப் ரூபா 1200

Tipper Truck, Bus and lorry's போன்ற வாகனங்களுக்கான ரயர்கள்
- அளவு 10.00R20 (18Ply) விலை ரூபா 56000 (Tire, tube & flap)
- அளவு 10.00R20 (18Ply) விலை ரூபா 53000 (Tire, tube & flap)
- அளவு 9.00R20 (16 ply) விலை ரூபா 41000 (Tire, tube & flap)

மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள். E-mail: kjvtires@gmail.com
021 221 3099, 0766687901 KJV Importers & Distributors (Pvt)Ltd, Old Road, Anaicoddai.

**Anniversary 6வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு 17th 18th 19th ஆகிய திகதிகளில் பதிவுசெய்து 25% கட்டண கழிவுடன் பரிசில்களையும் வெல்லுங்கள்**

**ONLY 17th 18th 19th**

மாணவர்களே! உங்களுக்கு விசேடமான PEARSON (UK) அனுமதி பெற்ற டிப்ளோமா பாடநெறிகள் இப்போது ESOFT வழங்குகிறது

DiTEC INTERNATIONAL — Diploma in Information Technology — assured by PEARSON

DiE — Diploma in English — ESOFT + Pearson (UK)

**HND**
Computing & Systems Development
Business Management
Awarded By PEARSON edexcel

FREE Samsung GALAXY Tab4

நான்கே மாதங்களில் எதிர்கால தொழில்வாய்ப்பினை உறுதிப்படுத்தும் ஏனைய டிப்ளோமாக் கற்கைநெறிகள் ESOFT + Pearson (UK)

- DiWE assured by PEARSON — Diploma in Web Engineering
- DiSE assured by PEARSON — Diploma in Software Engineering
- DiBE assured by PEARSON — Diploma in Business Management
- DiBM assured by PEARSON — Diploma in Business English
- DiCA assured by PEARSON — Diploma in Computerized Accounting
- DiHN assured by PEARSON — Diploma in Hardware & Networking

WIN a Gift!

ESOFT + Pearson (UK) New Batches 18.10.2015 | 20.10.2015

ESOFT Shaping Lives, Creating Futures.

**ESOFT METRO CAMPUS**
No. 137, K.K.S Road, Jaffna
Hotline : 077 309 9 308 | Tel : 021 222 4142
Gajanan 077 309 9 308

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை பாதுகாப்புச் சேவைவழங்குவதற்கான விலைமனுகோரல்

யாழ். பல்கலைக்கழகத்தின் பின்வரும் இடங்களிற்கு ஒருவருட காலத்திற்கு பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்கான அரக்கிடப்பட்டவிலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. மாணவர் விடுதி, இல. 11,கோணாவளை ஒழுங்கை, கொக்குவில்
02. மாணவர் விடுதி,கோணாவளை ஒழுங்கை, கொக்குவில்
03. மாணவர் விடுதி, இல. 01, பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி
04. மாணவர் விடுதி, பலாலிவீதி, உரும்பிராய்
05. மாணவர் விடுதி, இல. 43,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
06. மாணவர் விடுதி, இல. 67,குமாரசாமிவீதி, கந்தர்மடம்
07. மாணவர்விடுதி,கலைவாணிமில் ஒழுங்கை, திருநெல்வேலி
08. ஊடகவளங்கள் பயிற்சிநிலையம், இல. 84, ஜும்மாபள்ளிவாசல் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
09. இணைந்த சுகாதாரவிஞ்ஞான அலகு(AHS)
10. பட்டப்படிப்புகள் பீடம், பலாலி வீதி, திருநெல்வேலி
11. வணிகத்துறை, வளாக வீதி, திருநெல்வேலி
12. மாணவர் விடுதி, இல. 46, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
13. மாணவர் விடுதி, இல. 155, பலாலி வீதி, திருநெல்வேலி
14. மாணவர் விடுதி, கெக்கிலிப்பாய் ஒழுங்கை, இணுவில்
15. மாணவர் விடுதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்
16. மருத்துவமாணவர் விடுதி, யாழ்ப்பாணம்
17. மாணவர் விடுதி, ஊரெழு
18. மாணவர் விடுதி, இல. 114/7, முருகமூர்த்திவீதி, வண்ணார்பண்ணை
19. மாணவர் விடுதி, வளாகவீதி, திருநெல்வேலி
20. மாணவர் விடுதி, கலட்டிஅம்மன் கோவிலடி, யாழ்ப்பாணம்
21. மாணவர் விடுதி, இல. 134, இராமநாதன் வீதி,யாழ்ப்பாணம்
22. மாணவர் விடுதி, இல. 17,வளாகவீதி, திருநெல்வேலி
23. இராமநாதன் நுண்கலைத்துறை பெண்கள் விடுதி, மருதனார்மடம்
24. முகாமைத்துறை விரிவுரைமண்டபம், கலாசாலை வீதி, திருநெல்வேலி
25. பல்கலைக்கழகவிருந்தினர் விடுதி, இல. 63,கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்
26. விவசாயபீடம், அறிவியல்நகர், கிளிநொச்சி
27. பொறியியல் பீடம், அறிவியல்நகர், கிளிநொச்சி
28. அரசஅதிபரின் பழையவாசஸ்தலம், அறிவியல் நகர், கிளிநொச்சி
29. அரசஅதிபரின் விருந்தினர் விடுதி, அறிவியல் நகர், கிளிநொச்சி
30. மாணவர் விடுதி, உதயநகர், கிளிநொச்சி
31. மாணவர் விடுதி, இல. 1138, திருநகர், கிளிநொச்சி
32. மாணவர் விடுதி, இல. 231/1, உதயநகர், கிளிநொச்சி
33. மாணவர் விடுதி, கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சி
34. பெண்கள் விடுதி, அறிவியல்நகர், கிளிநொச்சி
35. மாணவர் விடுதி, திருநகர், கிளிநொச்சி
36. மாணவர் விடுதி, கணேசபுரம், கிளிநொச்சி
37. கால்நடைப்பண்ணை, கிளிநொச்சி
38. ஒருங்கிணைந்த பண்ணை, கனகராயன்குளம்

பொதுசனபாதுகாப்புச் சட்டம் ஒழுங்குகள் அமைச்சில் பதிவுசெய்துள்ள குறைந்தது மூன்றுவருடங்கள் அனுபவமுள்ளபாதுகாப்புச் சேவைவழங்குநர்கள் மனுக்களைச் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பப்படிவம் மற்றும் தொடர்புடைய விலைமனு ஆவணங்களையும் மேலதிக விவரங்களையும் 30.10.2015பிற்பகல் 2.30 மணிவரை சிரேஸ்ட உதவிப் பதிவாளர், நிர்வாகக்கிளை அலுவலகத்தில் அலுவலக நாள்களில் மீளளிக்கப்படாதகட்டணமாக இரண்டாயிரம் ரூபாவை (ரூபா 2000/-)நிதிக்கிளையில் செலுத்தியபற்றுச் சீட்டை சமர்ப்பிப்பதன்மூலம் பெற்றுக்கொள்ளலாம். முறையாகப் பூர்த்திசெய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்கள் கடிதஉறையின் இடதுபக்கமேல் மூலையில் "யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கான பாதுகாப்புச் சேவைவழங்கு வதற்கானவிலைமனு 2016"என அடையாளமிடப்பட்டு02.11.2015 பி.ப 2.00 மணிக்குமுன்னர் கிடைக்கக்கூடியதாக **பதிவுத் தபாலில் பதிவாளர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், த.பெ. இல. 57,யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பப்படலாம் அல்லது பதிவாளர் அலுவலகத்தில் உள்ள விலைமனுப் பெட்டியில் இடப்படலாம்.

விலைமனுக்கள் 02.11.2015 அன்று பிற்பகல் 2.30 மணிக்குபரிசீலிக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடமான சபாமண்டபத்திற்கு சமுகமளிக்கலாம். சம்பளச்சபையால் அங்கீகாரமளிக்கப்பட்ட சம்பளத்திற்குக் குறையாதசம்பளம் பாதுகாப்பு ஊழியர்களுக்கு வழங்கப்படுமென்ற உத்தரவாதம் வழங்குநரால் பல்கலைக் கழக நிர்வாகத்திற்கு வழங்கப்படவேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

\- பதிவாளர்

# அஞ்சல் தினப் போட்டிகளில் வடமாகாணம் 2ஆம் நிலை

யாழ்ப்பாணம், ஒக்.17

141 ஆவது அஞ்சல் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் தேசிய சேமிப்பு வங்கியின் கொடுக்கல் வாங்கல்களில் அகில இலங்கை ரீதியில் மாகாண மட்டத்தில் வடமாகாணம் இரண்டாம் நிலையில் உள்ளது. அத்துடன் மாவட்ட மட்டத்தில் யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் பிரிவும்.இரண்டாம் நிலையைப் பெற்றுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி பத்திரமுல்லையில் இடம் பெற்ற உலக அஞ்சல் தின நிகழ்வின்போது இதற்கான வெற்றிக்குரிய விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் என்பன வழங்கப்பட்டன.

தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் அப்துல் ஹலீம் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றிச் சின்னங்கள், விருதுகள் மற்றும் பரிசில்களை வழங்கி வைத்தார்.

தேசிய சேமிப்பு வங்கி கொடுக்கல் வாங்கலில் மாகாண ரீதியில் இரண்டாம் இடத்தை வட மாகாணம் பெற்றதால் அதற்கான விருது வட மாகாண "பிரதி அஞ்சல்மா அதிபர் இரட்ண சிங்கத்திடம் வழங்கப்பட்டது.

அத்துடன் மாவட்ட ரீதியில் யாழ்.மாவட்டம் இரண்டாம் நிலையில் உள்ளதால் அதற்கான வெற்றிக் கேடயம் யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் கே.புஸ்பநாதனிடம் வழங்கப்பட்டது.

அதனைவிட இந்தக் கொடுக்கல் வாங்கல் அகில இலங்கை ரீதியில் உபஅஞ்சலகங்கள் மட்டத்தில் வேலணை சோளவத்தை உபஅஞ்சலகம் முதலிடத்தில் உள்ளது. மற்றும் தபாலக மட்டத்தில் வேலணை அஞ்சலகம் இரண்டாம் நிலையிலும், பண்டத்தரிப்பு தபாலகம் மூன்றாம் நிலையிலும் உள்ளன.

அத்துடன் மொபிற்றல் பற்றுச் சீட்டுக்கான பணம் சேகரிப்பில் பலாலி இராணுவ முகாம் தபாலகம் இரண்டாம் நிலையில் உள்ளது. அதனைவிட வெஸ்ரன் யூனியன் பணப்பரிமாற்றச் சேவையில் யாழ்.அஞ்சலகம் ஐந்தாம் நிலையில் உள்ளது.

அத்துடன் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் தர உத்தியோகத்தருக்கான யாழ்.தபாலக பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த பா.ராகுலன் தெரிவானார். அதனைவிட சிறந்த சாரதியாக யாழ்.அஞ்சல் அத்தியட்சகர் அலுவலக சாரதியான க.இரவிச் சந்திரனும் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.

அகில இலங்கை ரீதியாக சிறந்த அஞ்சலராக புதுக் குடியிருப்பு தபாலக அஞ்சலகர் பி.எம்.அரிய குமாரும் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்தத் தேசிய மட்டத்திலான உலக அஞ்சல் தின நிகழ்வில் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளிலும் வெற்றி பெற்ற தபாலகப் பணியாளர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தபால்மா அதிபர் மற்றும் நாட்டில் உள்ள சகலதர தபால் அதிகாரிகள், பணியாளர்கள் கலந்து கொண்டனர். (ற-17)


HNB

அடகுப் பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

**ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் ஸ்ரான்லிவீதி, சுன்னாகம், மானிப்பாய், கைதடி, திருநெல்வேலி, சங்கானை, கிளிநொச்சி வடக்கு, கிளிநொச்சி தெற்கு, அச்சுவேலி, கொடிகாமம், முள்ளியவளை, மல்லாவி, நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, முல்லைத்தீவு, வேலணை, மன்னார், வவுனியா, நானாட்டான், குருமன்காடு ஆகிய கிளைகளில் 30.09.2014 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவண செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 02.11.2015 தொடக்கம் 05.11.2015 (திங்கள் - வியாழன்) வரை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 04.00 வரை இல. 212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ். கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.**

**ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.**

**ஹற்றன் நஷனல் வங்கி**


## கல்விமாணி பரீட்சை நவம்பர் 7 இல்

யாழ்ப்பாணம், ஒக். 17

ஆசிரியர்களுக்கான இலங்கை கல்விமாணி கற்கை நெறியைத் தொடருவோருக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் 7 ஆம் திகதி ஆரம்பமாகிறது. நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ள இந்தப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் 7,8, 14,15,28,29 ஆகிய திகதிகளில் இடம்பெறவுள்ளது. அதுபற்றிய நேர அட்டவணையும் வெளியிடப்பட்டுள்ளது. (ற-4)

## பிரிவுபசார விழா

சாவகச்சேரி, ஒக்.17

தென்மராட்சி பிரதேச இராமாவில் பிரிவு கிராம அலுவலராகக் கடமை யாற்றி ஓய்வுபெற்ற க.ஞானேஸ்வரனுக்கு பிரிவு பொது அமைப்புகளும் பொது மக்களும் இணைந்து நடத்தும் பிரிவுபசார விழா இன்று பி.ப. 3 மணிக்கு மீசாலை வீர சிங்கம் மத்தியகல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரிவு மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ற-9)


## Director

Home for Human Rights Sri Lanka is looking for a suitable person with academic qualification and experience to the post of Director, particularly with extensive knowledge of Human Rights work and Humanitarian work in North, East and Plantation area in Sri Lanka.

**PURPOSE OF POSITION**

Responsible for managing program personnel, program activity planning and implementation, monitoring &evaluation (M&E) efforts and finance. S/he is also responsible for ensuring the security, feasibility, and sustainability of the implemented by organization.

**KEY RESPONSBILITIES**

- Manage proactive and responsive relationship with grant donor in close collaboration with Home for Human rights staff.
- Research new funding opportunities and develop and write funding proposals, if second phase of the grant or cost extension is planned.
- Supervise a team of HHR staff with skills across a diverse set of technical areas.
- Manage grant/project budget within approved spending levels and ensure accurate and timely financial reports to donors.
- Participate,lead NGO-donor forum to represent HHR, the project and seek cooperation for joint advocacy opportunities.
- Establish clear and frequent communication regarding program progress and oversight management with the donor.

**KNOWLEDGE, SKILLS& ABILIES**

Required:

- Academic Qualifications in Human Rights law, Humanitarian Law or Sociology.
- Minimum of 5 years of Management experience.
- Proven ability to manage technical assistance teams.
- Fluency in English, Tamil and Sinhala

Please forward your C.V with names of two non-related referees to the under mentioned Email address or Chair Person, Board of Trustees, Home for Rights , NO.14 Pentrive Garden, Colombo-03. Closing date: 30.10.2015.

**Email Address:** hhrsrilanka@gmail.com

(64048)(10.15.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதமான வடிவமைப்பில் அறிமுகமாகும் தொடுபேசி




எக்ஸ்சாஓமி நிறுவனம் தொடுபேசி மி5 எனும் தனது புதிய தொடுபேசியை அறிமுகம் செய்யவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தத் தொடுபேசி 5.3 அங்குல அளவுடையதும், கியூ.எச்.டி தொழில்நுட் பத்தைக் கொண்டதுமான தொடு திரையைக் கொண்டுள்ளதாகக் காணப்படுகின்றது.

இவற்றுடன் முதன் முறையாக அதி கூடிய சிப்பை உள்ளடக்கியதாகவும், பிரதான நினைவகமாக 4ஜபி ரம் மைக்கைக் கொண்டதாகவும் அறிமுகம் செய் யப்படவுள்ளது.

மேலும் இதில் 16 மெகாபிக்சல்களை உடைய கமராவும் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை பேசியின் சிறப்பம்சங்கள் தொடர்பில் மேலதிக தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. இதன் விலை 316 அமெரிக்க டொலர்கள் ஆகும்.



# எல்ஜஸ்ரீன் -வி10 தொடுபேசி

முன்னணி தொடுபேசி வடிவமைப்பு நிறுவனங்களுள் ஒன்றான எல்ஜஸ்ரீ வி10 எனும் புதிய தொடுபேசியை அறிமுகம் செய்துள்ளது. 5.7 அங்குல அளவு, 2560 ஒ 1440 பிக்ஸல் உடைய தொடுதிரை, செயலி, பிரதான நினைவகமாக 4ஜஸ்ரீபி ரம் மற்றும் 64ஜஸ்ரீபி சேமிப்பு நினைவகம் என்பவற்றைக் கொண்டுள்ள இந்தத் தொடுபேசி முதற்கட்டமாகத் தென்கொரியாவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் சேமிப்பு நினைவகத்தை மெமரி கார்ட்டின் உதவியுடன் 2ரிபி வரை அதிகரிக்கக்கூடிய வசதி தரப்பட்டுள்ளது. மேலும் 16 மெகாபிக்ஸல்களை உடைய பிரதான கமரா, 5 மெகாபிக்ஸல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா போன்றவற்றுடன் அன்ரோயிட் 5.1.1 லொலிபொப் இயங்கு தளத் தையும் கொண்டதாகக் காணப்படுகின்றது. இதன் விலை 680 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

# ஆடைகளைத் துவைத்து மடிக்கும் உலகின் முதலாவது ரோபோ

ஆடைகளைத் துவைத்து உலர்த்தித் தரும் சலவை ,யந்திரங்கள் பற்றி நன்றாகத் தெரிந்திருப்பீர்கள். ஆனால் ஆடைகளைத் துவைத்து, உலர்த்துவதுடன் மட்டுமன்றி அழுத்தி மடித்தும் தரக்கூடிய ரோபோ ஒன்று ஜப்பானில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பனசொனிக் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட இந்த ரோபோ டோக்கியோவில் இடம்பெற்ற 2015 ஆம் ஆண்டுக்கான கண்காட்சி நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய ரோபோக்களை உருவாக்கிவரும் ஜப்பானின் இந்தப்புதிய ரோபோவும் தொழில்நுட்ப உலகில் ஒரு மைல்கல்லாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை, இந்த வருட ஆரம்பத்தில் ரோபோக்கள் மட்டுமே இயக்கும் அதி நவீன ஹோட்டல் ஒன்றும் ஜப்பானில் நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் 199ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள்









வலி.வடக்கு, ஒக்.17

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் 199ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வும், பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் நினைவு தினமும் நேற்றுமுன்தினம் கல்லூரி மண்டபத்தில் அதிபர் வேகஇரத்தினகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மீள் குடியேற்ற புனர் வாழ்வு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் டி.எம்.சுவாமி நாதனும் கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை கல்விக்கோட்ட கல்விப் பணிப்பாளர் கே.ஈஸ்வரநாதனும் கலந்துகொண்டார்கள்.

விருந்தினர்கள் உட்பட பழைய மாணவர்கள் கல்லூரி பாண்ட் வாத்தியக் குழுவினரின் அணிவகுப்பு மரியாதையுடன் மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து மங்கல விளக்கேற்றப்பட்டதைத் தொடர்ந்து தேசியக் கொடியை மீள்குடியேற்ற அமைச்சர் ஏற்றி வைக்க கல்லூரிக் கொடியை அதிபர் ஏற்றி வைக்க கல்லூரி மாணவிகளின் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலைத் தொடர்ந்து வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

ஆசியுரையை தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் வழங்கினார். கல்லூரியின் சிறப்பு மலரின் அறிமுகவுரையை கலாநிதி ஆறுதிருமுருகன் நிகழ்த்த ஆய்வுரையை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பிரதி அதிபர் வே.சந்திர சேகரம் வழங்கினார். நூலின் முதற் பிரதியை அமைச்சர் வெளியிட்டு வைக்க சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் எஸ்.பாபு பெற்றுக்கொண்டார். (ந-86)

# இலங்கைக் கடற்படை அச்சுறுத்தியது என இந்திய மீனவர்கள் குற்றச்சாட்டு

சென்னை, ஒக். 17

தனுஷ்கோடிப் பகுதியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று ராமேஸ்வரம் மீனவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். தாக்குதல் நடத்தியதுடன் தம்மைத் தொழில் செய்ய விடாது அடித்து விரட்டினர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ராமேஸ்வரத்திருந்து 525 விசை படகுகளில் மீன்பிடி அனுமதிச் சீட்டுப் பெற்று மீனவர்கள் கடந்த புதன் கிழமை இரவு கடலுக்குச் சென்றனர். இரவு 7 மணி அளவில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது 20 இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள் வடிவமைப்புடன் கூடிய அதி நவீன விரைவு ரோந்துப் படகில் இலங்கைக் கடற்படையினர் வந்துள்ளனர்.

அவர்கள் மீனவர்களின் படகுகளிலிருந்த மீன்பிடிச் சாதனங்களை சேதப்படுத்திக் கடலில் வீசி எறிந்துள்ளனர். அத்துடன் ஒரு கணம் நின் றால் உங்களை கைது செய்வோம் என்று கடுமையாக எச்சரித்துமுள்ளனர்.

இதன் காரணமாக ராமேஸ்வரம் மீனவர்கள் உடனடியாகக் கரை திரும்பியுள்ளனர். இந்திய எல்லையில் கூட மீன்பிடிக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாகக் கரை திரும்பிய மீனவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (ந-5)

# தொடரும் கடும் மழையால் பதுளை மாவட்டம் பாதிப்பு



கொழும்பு, ஒக்.17

பதுளை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக மடுல்சீமை தேவால ஆறு நேற்று முன்தினம் பெருக்கெடுத்துள்ளது. அதனால் 12 வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. 46 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இடைவிடாது பெய்து வரும் மழை காரணமாக பதுளை மாவட்டத்தில் மக்கள் பெரும் இன் னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். இதேவேளை மண்சரிவு மற்றும் பாரிய கற் புரள்வுகள் இடம்பெற் றுள்ளதால் பஸர மடுல்சீமை பிரதான வீதியின் 7ஆவது மைல்கல் பகுதியூடான போக்குவரத்து நடவடிக்கை பாதிக்கப்பட்டது. இதனையடுத்து பெக்கோ இயந்திர உதவியுடன் கற்பாறைகள் அகற்றப்பட்டு, தடைப்பட்டிருந்த போக்குவரத்து வழமைக் குக்கொண்டுவரப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேஷியாவில் பாதுகாப்பு அதிகரிப்பு

யாக்ரா, ஒக்.17

இந்தோனேஷியாவின் வடக்கு ஆஸி மாகாணத்தில் உள்ள தேவாலயங்கள் இனந்தெரியாதோரால் தீ வைக்கப்பட்டுள்ளன. அதில் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது. அதனால் அங்கு ஏற்பட்டுள்ள அமைதியின்மையைக் கட்டுப்படுத்த இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 500 பேர் வரையான குழுவினர் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது தீ வைத்ததுடன், கிறிஸ்தவர்களை அச்சுறுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் அந்தக் கும்பலைச் சேர்ந்த 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அங்கு நிலவிய பதற்ற நிலை தற்போது தணிந்துள்ளதாக தேசிய பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார். ஆயிரக்கணக்கானோர் ஆஸி பகுதியிலிருந்து வெளியேறியுள்ளனர் என்று வெளியான செய்திகளை அவர் நிராகரித்துள்ளார்.

உலகின் அதிக முஸ்லிம் மக்களைக் கொண்ட நாடான இந்தோனேஷியாவின் மிகவும் பழைமைவாத மாகாணம் ஆஸி மாகாணமாகும். அது இஸ்லாமிய ஷரியா சட்டத்திற்குக் கட்டுப்பட்ட ஒரே மாகாணமாகக் காணப்படுகின்றது. (ற)



லொஸ் ஏஞ்சல்ஸில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட கடும் மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு கார்கள் பாதைகள் மூடப்பட்டுள்ளன. அதையடுத்து லொஸ் ஏஞ்சல்ஸின் பல பகுதிகளில் தேசிய வானிலை சேவை பெய்து வரும் மழையால் வீதியில் நிரம்பியுள்ள சேற்றின் காரணமாக வாகனங்களில் செல்லும் பல ஓட்டு மீட்கும் பணியில் சுமார் 45 தீயணைப்பு படையினர் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

# மாலைதீவு பாதுகாப்பு அமைச்சர் பதவி நீக்கம்

மாலே, ஒக்.17

மாலைதீவின் பாதுகாப்பு அமைச்சர் மூஸா அலி ஜலீல், ஜனாதிபதி அப்துல்லா யாமினால் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என ஜனாதிபதியின் பேச்சாளர் இப்ராஹிம் அலி அறிவித்துள்ளார். உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்தப் பதவிநீக்கம் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அப்துல்லா யாமினை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்ட குற்றச்சாட்டின் எதிரொலியாகவே இவர் பதவி நீக்கம் செய்யப்பட் டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யாமின் கடந்த சில நாள்களுக்கு முன்பு குடும்பத்துடன் சவூதி அரேபியாவுக்கு ஹஜ் யாத்திரை சென்



றார். பின்னர் சொகுசுப் படகொன்றின் மூலம் நாடு திரும்பிய வேளை அவர் பயணித்த படகில் குண்டு வெடித்தது.

குறித்த அனர்த்தம் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட்டு வந்த நிலையில், இரண்டு இராணுவ அதிகாரிகள் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தனர். அதனைத் தொடர்ந்து தற்போது பாதுகாப்பு அமைச்சரை அவரது பதவியிலிருந்து நீக்குவதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இந்த நிலையில், மேற்படி குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பிலான உள்ளூர் விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ற)

# பிரேஸிலில் கரையொதுங்கும் ஆயிரக்கணக்கான மாடுகள்

## துர்நாற்றத்தால் மக்கள் கடும் சிரமம்

பாகாரேனா, ஒக்.17

பிரேஸிலின் பாகாரேனா பகுதியில் உள்ள கடற்கரையில் ஆயிரக்கணக்கான மாடுகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன. அதனால் அந்தப் பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசி வருகின்றது.

லெபனானைச் சேர்ந்த கப்பல் ஒன்று கடந்த வாரம் பாரா கடலில் மூழ்கியது. அதில் 5 ஆயிரம் மாடுகளும், 750 தொன் எண்ணெயும் ஏற்றப்பட்டிருந்தது.

இந்த விபத்தால் ஆயிரக்கணக்கான மாடுகள் கடலில் மூழ்கின. எண்ணெயும் பெருமளவு கடலில் கலந் தது. அவ்வாறு மூழ்கிய மாடு களே தற்போது பாகாரேனா கடற்கரையில் கரையொதுங்கி வருகின்றன.

அதனால் அந்தப் பகுதி முழுவதும் கடும் துர்நாற்றம் வீசி வருகின்றது. அங்குள்ள மக்கள் அதனால் பெரும் சிரமங்களை எதிர்கொண் டுள்ளனர்.

அதேவேளை, இந்த விபத்தால் அந்தப் பகுதி கடல் உயிரினங்கள் பாதிக்கப்பட்டதோடு, மீனவர்களும் கடும் பாதிப்பை எதிர்கொண் டுள்ளன. (ற)

# ஐ.எஸ். ... ரஷ்யா ...

## 24 மணி நேர...


மொஸ்கோ, ஒக்.17

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நிலைகளை இலக்கு வைத்துக் கடந்த 24 மணி நேரத்தில் தமது நாட்டு விமானப் படையால் 41 தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று ரஷ்ய பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித் துள்ளது.

சிரியாவின் அலப்போ, ஹமா மற்றும் இதிலிப் பிராந்தியத்தில் உள்ள ஐ.எஸ். நிலைகள் மீதே தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அது தொடர்பான காணொலியையும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது.

குறித்த தாக்குதலில் தற்கொலைக் குண்டுதாரிகளுக்கான வெடிபொருள் சாதனங்களைத் தயாரிக்கும் பயிற்சி நிலையம் ஒன்று தகர்க்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சிரியாவில் 41 ஜெட் விமானங்கள் கடந்த 24 மணி நேரமாகக் பல கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன என்றும். அதன் தொடர்ச்சியாகவே இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் குறிப்பிடப்பட் டுள்ளது. (ற)




# கூட்டு நடவடிக்...

டமஸ்கஸ், ஒக்.17

வடமேற்கு சிரியாவில் உள்ள கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக கூட்டு நடவடிக்கை ஒன்றை முன்னெடுப்பது தொடர்பில் சிரிய நாடாளுமன்ற சபாநாயகர் மற்றும் ஈரானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோருக்


கி... குறி... படு... தெ... றின்... வெ... தன...





ஊடகப் படங்களுக்கான விருது வழங்கும் நிகழ்ச்சியில், [illegible] தாக்குதலொன்றின் கோரத்தைப் படம்பிடித்த செர்ஜி லினிட்சக்கி முதலி[illegible] இத்தாலிய கடலில் தத்தளித்த அகதிகளின் புகைப்படத்தை எடுத்த மசிமோ செஸ்தினி இரண்டாம் இடத்தைப் பெற்றார். (ற-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...ட்டு கார்கள் நீரில் மூழ்கின. பல ஓட்டுநர்கள் திசை மாறிச் சென்றமையால் பல ...நிலை சேவையால் வெள்ள எச்சரிக்கை அபாயம் விடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து ...லும் பல ஓட்டுநர்கள் பாதைகளில் உள்ள சேற்றில் சிக்கி வருகின்றனர். அவர்களை (ற-ரி4)

# எம்.எச்.17 மலேசிய விமானத்தை வீழ்த்தியோர் தண்டிக்கப்படுவர்

## ஆஸ்திரேலியப் பிரதமர் உறுதி

மெல்பேர்ன், ஒக்.17

எம்.எச்.17 ரக மலேசிய பயணிகள் விமானத்தை சுட்டு வீழ்த்தியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். அவர்களுக்கான தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்குரிய அனைத்து முயற்சிகளையும் ஆஸ்திரேலியா முன்னெடுக்கும். - இவ்வாறு அந்த நாட்டுப் பிரதமர் மால்கம் டர்ன்புல் தெரிவித்துள்ளார்.

2014ஆம் ஆண்டு 298 பயணிகளுடன் பயணித்த மலேசியன் ஏர்லைன்ஸ் விமானம் கிழக்கு உக்ரைனில் வைத்துச் சுட்டு வீழ்த்தப்பட்டது. இது தொடர்பிலான இறுதி விசாரணை அறிக்கை டச் பாதுகாப்பு குழுவால் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த விமானத்தை உக்ரைன் போர் விமானம் சுட்டு வீழ்த்தியது என ரஷ்யா கூறி வந்த நிலையில் குறித்த இறுதி அறிக்கையில் ரஷ்ய பக் ஏவு கணையால் உக்ரைனின் கிழக்கு பகுதியிலிருந்து இலக்கு வைக்கப்பட்டு இந்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த ஆஸ்திரேலியப் பிரதமர் தெரிவித்துள்ளதாவது:-

விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டமை குறித்த விசாரணைகளுக்காக சர்வதேச விசாரணைக் குழு அமைக்க ஐ.நா. முயற்சித்தது. ஆயினும் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ரஷ்யா அதனைத் தடுத்தமை கண்டனத்திற்குரியது. அதுமட்டுமன்றி, விமானத்திலிருந்த 298 பேரைப் படுகொலை செய்தமை மன்னிக்க முடியாத குற்றமாகும். இதற்குக் காரணமானவர்கள் நிச்சயம் தண்டிக்கப்படுவர். - என்றார். (ற)



# கிளர்ச்சிக் குழுக்களுடன் மியன்மார் போர் நிறுத்தம்

நைபிடோ, ஒக்.17

மியன்மாரில் பல தசாப்தங்களாகத் தொடரும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வரும்வகையில், எட்டு சிறு பான்மைக் கிளர்ச்சிக் குழுக்களுடன் அந்த நாட்டு அரசு போர் நிறுத்த ஒப்பத்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாகக் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பேச்சு நடத்தப்பட்டு வந்தது. ஆயினும் அதில் இணைந்து கொள்ளப் பல ஆயுதக் குழுக்கள் மறுப்புத் தெரிவித்திருந்தன.

எனினும் நடைபெறவுள்ள தேர்தலில் அதிகாரத்தில் உள்ள இராணுவ ஆதரவுக் கட்சியை வீழ்த்தும் பிரதான துருப்பாக ஜனாபதி தீன் சீன் போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பில் பரப்புரை மேற்கொண்டிருந்தார். இந்த நிலையில் தற்போது இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தம் மியன்மார் தலைநகர் நைபிடோவில் கைச்சாத்திடப்பட்டது. அதில் இராணுவத் தளபதி மற்றும் கிளர்ச்சிக் குழுக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற)

# ...ஸ். இலக்குகள் மீது ...ா கடும் தாக்குதல்

## ...நேரத்தில் 41 தாக்குதல்கள்

...ர் நிலை ...ந்த 24 ...விமானப் ...நடத்தப் ...அமைச்

... மற்றும் ...ஐ.எஸ். ...ள் மேற் ...டர்பான ...துகாப்பு

...காலைக் ...பொருள் ... பயிற்சி ...டது என்

...ள் கடந்த ...காணிப்பு ...ண்டிருந் ...யாகவே ...ற்கொள் ...பிடப்பட் (ற)



# 5 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து விழுந்தும் எலும்பு முறியாத மனிதர்

லண்டன், ஒக்.17

பெரு நாட்டில் விமானப்படை வீரர் ஒருவர் 5 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து கிழே விழுந்தும் எலும்பு முறிவு ஏதுமின்றி உயிர் பிழைத்திருப்பது அனைவரையும் அதிசயத்தில் ஆழ்த்தியுள்ளது.

பெரு நாட்டின் தெற்குப் பகுதியில் விமானப்படை வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அமாசிபுயன் கமாரா என்ற 31 வயதுடைய குறித்த நபர், ராணுவ விமானத்தில் இருந்து குதித்தார். அப்போது அவர் தனது பாராசூட்டை விரிக்க முயன்றும் அவரால் அதை விரிக்க முடியாமல் போயுள்ளது.

அதில் இருந்த பட்டி அவரது கழுத்தை இறுக்கியது. இதில் கமாரா சுயநினைவை இழந்து 5 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து விழுந்துள்ளார். தரையில் விழுந்த அவர் உடனே அருகில் உள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் அவரது உடம்பில் ஒரு எலும்பு முறிவோ, உடைவோ ஏற்பட்டிராததைக் கண்டு ஆச்சரியமடைந்தனர்.

இது தொடர்பில் அவர்கள் கருத்துத் தெரிவிக்கும்பொழுது, அவ்வளவு உயரத்தில் இருந்து விழுந்தும் கமாரா எலும்பு முறிவின்றி தப்பித்தமை அதிசயம் தான் என்று தெரிவித்துள்ளனர். (ற)

# சான்ட்விச்சில் செத்த எலி; அமெரிக்காவில் பரபரப்பு



நியூயோர்க், ஒக்.17

அமெரிக்காவின் ஒரிகன் மாகாணத்தில் லிங்கன் நகரத்திலுள்ள பிரபல உணவு நிறுவனமான சப்வேயின் உணவு விடுதியில் சான்ட்விச் உணவில் இறந்த எலி இருந்தது என்று வாடிக்கையாளர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

அதையடுத்து, அங்கு விரைந்த சுகாதார உத்தியோகத்தர்களால் அந்த உணவு விடுதியின் தூய்மைத்தன்மை தொடர்பில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த வாடிக்கையாளர் தமது உணவை குப்பைத் தொட்டியில் வீசி இருந்தமையால் இறந்த எலியை குப்பைக் கூடைக்குள் தேடினர். எனினும் அது அங்கு இருக்கவில்லை.

அதையடுத்து, அந்த உணவு விடுதியில் உணவு உண்[illegible]களுக்கு முன்னர் ஏதேனும் நோய்த் தோற்று ஏற்பட்டுள்[illegible] என்பதை அறிய முனைந்துள்ளனர். சான்ட்விச்சில் [illegible]கப்பட்ட லட்டூஸ் இலையில் [illegible] இருந்திருக்கலாம் என அனுமானிக்கப்பட்டது. ஆனால் சப்வே நிறுவனம் இந்தக் குற்றச்சா[illegible] முழுமையாக நிராகரித்துள்[illegible] எனினும் வாடிக்கையாள[illegible] பணம் திரும்பக்கொடுக்கப்[illegible] இந்த சம்பவம் அங்கு பெரும் பரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ற)

# ...டிக்கை குறித்து சிரியாவும், ஈரானும் பேச்சு

...ள்ள ...கூட்டு ...னடுப் ...மன்ற ...நாடா ...ாருக்

கிடையே பேச்சு நடத்தப்பட்டுள்ளது. குறித்த சந்திப்பைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய கூட்டணி தொடர்பில் ஈரானிய நாடாளுமன்றின் தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை அமைச்சின் தலைவர் விளக்கமளித்தார்.

அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் இந்தப் பிரச்சினையில் தீவிர கவனம் செலுத்துவதாக இல்லை. அதனாலேயே புதிய கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அலப்போவில் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சிரிய இராணுவத் தாக்குதல்களில் இணைந்து கொள்வதற்கு ஈரானிய வீரர்கள் தயாராக இருக்கின்றனர் என்றும் குறித்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாக அவர் கூறினார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும் கவியரசு கண்ணதாசன்

மு. ஈழத்தமிழ்மணி

**இன்று அவரது 34 ஆவது நினைவு தினம்**

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் கூறும் உலகத்தில், தமிழ் இலக்கிய வரலாற்றில், தமிழகம் உருவாக்கிய தத்துவக் கவிஞர் கண்ணதாசனை எவராலும் மறக்கமுடியாது. கவியரசரான கண்ணதாசன் அவர்களது 34 ஆவது நினைவு தினம் இன்றாகும்.

கவியரசர் கண்ணதாசன் தமிழ் நாட்டின் சிறுகூடல்பட்டி என்ற கிராமத்தில் வணிகர் மரபினரான சாத்தப்பனார். விசாலாட்சி தம்பதியினருக்கு மகனாக 1927 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதி பிறந்தார். அவருக்கு பெற்றோர் சூட்டிய பெயர் முத்தையா.

கண்ணதாசன் எட்டாம் வகுப்பு வரையே கல்வி கற்றார். சிறுவயது முதல் தமிழ்மொழியில் தீவிர பற்றுக் கொண்டிருந்தார். கவிதை, கட்டுரைகள் எழுதுவதில் ஆர்வம் கொண்டவராகவும், அதிலேயே மூழ்கியவராகவும் இருந்தார்.

இந்திய நாட்டின் விடுதலை எழுச்சிக்கு சுப்பிரமணிய பாரதியாரும் பாரதிதாசனும் தோன்றி மறைந்தார்கள். கவிஞர் கண்ணதாசனும் அந்த வரிசையில் சேர்ந்து கொண்டார். இந்தியாவின் தமிழ்த்திரைப்பட வரலாற்றுக்கு கண்ணதாசனின் பாடல்கள் உயிரூட்டிக் கொண்டிருந்தன. தமிழ்த் தத்துவஞானியாக தமிழுலகத்துக்கு அவதரித்த கவிஞர் கண்ணதாசன் 1944 ஆம் ஆண்டு முதல் 1981 ஆம் ஆண்டு வரை நாலாயிரத்துக்கு மேற்பட்ட கவிதைகள், ஐயாயிரத்துக்கு மேற்பட்ட திரைப் படப்பாடல்கள், கட்டுரைகள் எனப் பல இலக்கியப் படைப்புக்களைத் தமிழுலகுக்கு வழங்கியிருந்தார்.

தென்னிந்தியாவின் தமிழ்த்திரைப்படங்களுக்காக இவர் எழுதிய பாடல்கள் யாவும் சொல்நயமும் கருத்தாழமும் கொண்டவையாக அமைந்திருந்தமையால் ஒவ்வொரு தமிழ் மக்கள் மத்தியிலும் அவரது பாடல்கள் முணுமுணுக்கப்படுவதையும் இந்திய தமிழ்த் தொலைக்காட்சிகள் பலவற்றிலும்சரி, இலங்கைத் தமிழ் தொலைக்காட்சிகளிலும் சரி பாட்டுக்கான குரல் தேர்வு நிகழ்வுகளில் பங்கு பற்றுகின்றவர்கள் பழைய பாடல்கள் வரிசைகளில் கண்ணதாசனின் பாடல்களையே தெரிவு செய்து பாடுவதையும் காணலாம்.

இவரது தத்துவக் கருத்துக்கள் நிறைந்த தமிழ்ப்பாடல்கள் திரைப்படங்களை வெற்றியின் உச்சத்துக்குக் கொண்டு சென்றன. கண்ணதாசனின் பல தத்துவப் பாடல் கள் எம்.ஜி. ஆர்., சிவாஜி ரசிகர்களைக் கட்டிப் போட வைத்தது.

கவியரசர் கண்ணதாசனை பத்திரிகை ஆசிரியராக, அரசியல்வாதியாக, நடிகராக, படத்தயாரிப்பாளராக, வசனகர்த்தாவாக, எழுத்தாளராக, நல்லபேச்சாளராக, அறிஞனாக எல் லாமே ஒருங்கிணைந்த ஒரு தத்துவ ஞானியாகத் தமிழர்கள் கண்டார்கள்.

இன்றைய தமிழக மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற கவிஞர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள்,பெரும் தலைவர்கள் போற்றிக் கொண்டிருக்கும் மாபெரும் கவிஞர் தனது சொந்த அனுபவங்கள் மற்றும்வாழ்க்கையில் தான் அனுபவித்த இன்ப துன்பங்களை திரையிசைப் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தியிருந்தார் இன்றும் அவரது திரையிசைப் பாடல்களை வானொலி யில், காணொலியில் நாம் கேட்டும், பார்த்தும் மகிழ்கின்றோம்.

எமது வாழ்வில் சோதனையும் வேதனையும் வருகின்றபோது கவியரசரின் தத்துவ பாடல்களே எமக்குத் துன்பங்களை அகற்றுகின்ற மருந்தாக அமைகின்றன. எந்தவொரு மனிதனும் தான் வாழ்க்கையில் விட்ட தவறுகளை ஏற்றுக்கொள்ள மாட்டான். ஆனால் கவியரசர் ஒழிவு மறைவின்றித் தனது திரையிசைப் பாடல்கள் மூலம் தனது தவறுகளையும், உண்மைகளை யும் தெரிவித்திருந்தார். தனது வாழ்க்கையில் பட்ட துன்பங்களையும் பாடல்கள் மூலம், கவிதைகள் மூலம் தெரிவித்த கள்ளங்கபட மற்ற காவியத்தாயின் இளைய மகன் அவர்.

எட்டாம் வகுப்பு வரை கல்விகற்ற கவியரசர், கண்ணனின் அருளால் பெரும் கவிஞனாகி கண்ணனை, தமிழ் அன்னையைப் போற்றிக் காத்து நின்ற அற்புதக் கவிஞர். உலகெங்கும் பரந்து வாழ்கின்ற தமிழ் மக்கள் அவரது இறவாக் கவிதைகளைப் படித்து மகிழ்ந்து அன்றும் இன்றும் என்றுமே போற்றி நிற்கின்றனர். ஒரு சிறந்த கவிஞனது உணர்வுகளுக்கு, சிந்தனைக்கு, எல்லைக்கோடு போட்டுவிட முடியாது. அவை பரந்துபட்டவை, விரிந்தவை. இத்தகு இயல்புகளுக்கு தன்னை உள்ளாக்கி இதன் போக்குகளின்பால் நின்று கண்ணதாசன் உருவாக்கிப் படைத்த கவிதைகள் தமிழ் உணர்வாளர்களின் மனங்களில் என்றும் நீங்கா இடம் பிடித்ததில் ஆச்சரியமில்லை.

கவிஞர் கண்ணதாசன் இந்து மதத்தவராக இருந்தாலும் எந்தவித மத வேறுபாடுமற்றவர். இந்து மதக் கொள்கைகளையும் வாழ்க்கை நெறிமுறைகளையும் ஆராய்ந்து அர்த்தமுள்ள இந்து மதம் என்ற பெயரில் தத்துவ படைப்புக் கொண்ட நூலையும், இயேசு பிரானின் வாழ்க்கை குறித்த ஏசு காவியம் படைத்து அதற்கான நூலையும் வெளியிட்டு சாதனை படைத்திருந்தார். இந்து, கிறிஸ்தவ மக்கள் மத்தியிலே அவர் படைத்த காவிய நூல்கள் வாழ்க்கைக்கு துணைபுரிவனவாக உள்ளன. பல சஞ்சிகைகளின் ஆசிரியராக இலக்கியப் பணி ஆற்றியுள்ளார். இவரது முழுத்திறமை களையும் தமிழகம் அங்கீகரித்திருந்தது. இவரது எந்தத்திறமை களும் எவராலும் குறைத்து மதிப்பிட முடியா தவாறு உயர்ந்திருந்தன. எல்லாவற்றுக்கும் மணி மகுடம் வைத்தது போன்ற அப்போதைய தமிழக முதலமைச்சராக இருந்த எம்.ஜி. இராமச்சந்திரனால் தனது அரசின் அரசவைக் கவிஞராக நியமிக்கப்பட்டு உயர் கௌரவத்தைப் பெற்றுக் கொண்டார்.



கண்ணதாசனின் அரசியல் வாழ்க்கை பேசப்படுகின்ற அளவுக்கு முன்னேற்ற கரமாக இருக்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்திலும், பின்னர் காங்கிரஸ் கட்சியிலும் சேர்ந்திருந்தாலும் தமிழக மக்கள் அவரைப் பெரும் கவிஞராகவே இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மட்டுமே வைத்துக்கொண்ட னர். ஆனாலும் அரசியல் கருத்து வேறுபாடு களின்றி பேறிஞர்அண்ணா, கலைஞர் மு.கருணாநிதி, இன்றைய முதல்வர் ஜெயலலிதா போன்றோர் கண்ணதாசனைப் போற்றிப் பாராட்டியவர்களாவர்.

நாளாந்தம் அவர் புகழைத்தமிழ்த் தொலைக்காட்சிகளில் அவரது சினிமாப்பாடல்கள் மூலமாகக் கேட்கக் கூடியதாகவுள்ளது. கண்ணதாசனால் படைக்கப்பட்ட நூல்கள் யாவும் அவரது மகனான காந்தி கண்ணதாசனால் வெளியிடப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதேபோலவே அவரது மகளான விசாலி கண்ணதாசனும் தந்தையாரின் புகழைக் காத்து நிற்கின்றார்.

கடும்நோயினால் பாதிக்கப்பட்டிருந்த கவியரசு கண்ணதாசன் இறுதிப் பாடலை மூன்றாம் பிறை திரைப்படத்துக்காக எழுதியிருந்தார். மேற்கொண்டு தனது கவிதை, பாடல் களை படைக்க முடியாத நிலையில் அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் இயங்கும் பிரபல மருத்துவமனையில் தமது நோய்க்கான சிகிச்சையைப் பெற்றுவந்த நிலையில் 54 ஆவது வயதில் இந்த உலகை விட்டுமறைந்தார். 1981 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 17 ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்த அவர் கவிஞராக தத்துவாதியாக, அரச வைப் புலவராக உயர்ந்த கௌரவம் பெற்ற புலவராக தமிழ் மக்களை விட்டுப் பிரிந்தாலும் சாகாவரம் பெற்ற கவிஞனாக உலகத்தமிழர்களின் மத்தியில் இன்றும் வாழ்ந்து வருகின்றார். கண்ணதாசன் இல்லையே கவிதை எழுதவே...." என்று தமிழகத்தில் பலராலும் கூறப்படுவது அவர் இறந்தும் இறக்காமல் ஒவ்வொரு பாடலோடும் வசிக்கின்ற அற்புத மனிதர் என்பதைக் காட்டுகின்றது. திரைப்படப் பாடல்களையும், கவிதைகளையும் அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வைத்த சாகாவரம் பெற்ற மனிதர். அவர் என்றென்றும் தமிழர் நெஞ்சங்களில் வீற்றிருப்பார்.

# சூழலுக்கு நட்புறவான செயற்பாடுகளுக்காக களனி கேபிள்ஸ் நிறுவனத்துக்குக் கௌரவம்

நிலையான அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்கின்றமைக்காக களனி கேபிள்ஸ் பிஎல்சிக்கு, தேசிய கிறீன் விருதுகள் வழங்கலில் வெள்ளி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது. தனியார் தொழில் முயற்சியாளர் பிரிவில் களனி கேபிள்ஸ் இந்த விருதைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. இந்த விருதுகள் வழங்கும் வைபவம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வை மஹாவலி அபிவிருத்தி மற்றும் சூழல் அமைச்சு ஏற்பாடு செய்திருந்தது. இதற்கு மத்திய சூழல் அதிகார சபை பங்களிப்பை வழங்கியிருந்தது. இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டார்.

சூழலுக்கு பாதுகாப்பான செயற்பாடுகளை முன்னெடுக்கும் அரச, தனியார் மற்றும் பாடசாலைகள் போன்றவை இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டிருந்தன. இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல்கள் கேபிள் உற்பத்தி பிரிவில் கௌரவிக்கப்பட்ட ஒரே நிறுவனமாக களனி கேபிள்ஸ் திகழ்ந்திருந்தது.

களனி கேபிள்ஸ் பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி மஹிந்த சரணபால கருத்துத் தெரிவிக்கையில், களனி கேபிள்ஸ் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் அர்ப்பணிப்புடன் வழங்கி வரும் சேவைகளுக்கு கிடைத்த மற்றுமொரு கௌரவிப்பாக இந்த கிறீன் விருது அமைந்துள்ளது என்றார்.

2010 ஆம் ஆண்டு, களனி கேபிள்ஸ் நாட்டின் நிலையான அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு பங்களிப்பு வழங்கும் வகையில் மறுசீரமைப்பு செய்யப்பட்டிருந்தது. குறுகிய காலப்பகுதியில், கம்பனியின் மூலமாக பெருமளவு உள்நாட்டு மற்றும் சர்வதேச விருதுகளை பெற்றுக் கொள்ள முடிந்தது. நிறுவனம் எனும் வகையில், நாம் சூழல் பாதுகாப்புக் குறித்து கவனம் செலுத்துகிறோம். வளங்கள் மற்றும் மூலப் பொருள்கள் ஆகியவற்றின் விரயத்தைக் குறைந்த மட்டத்தில் பேணுவது தொடர்பில் கவனம் செலுத்துகிறது. சூழலுக்கு பொறுப்பு வாய்ந்த நிறுவனம் எனும் வகையில், தனது சமூக பொறுப்புணர்வு செயற்பாடாக, பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருந்தது என்றார்.

கம்பனியின் நிலையான அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் களனி கேபிள்ஸ் பிஎல்சி தொழில்நுட்ப சேவைகள் முகாமையாளர் ஷியாமா பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், கம்பனி 3ஆர் கொள்கையைப் பின்பற்றி வருகிறது. மூலப் பொருள்கள், வலு மற்றும் நீர் ஆகியவற்றின் உச்ச பயனைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் கம்பனியின் செயற்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன என்றார்.

எமது ஊழியர்களுக்கு நாம் தொடர்ச்சியாக சூழலுக்கு பாதுகாப்பான தொழில்நுட்பங்கள் பற்றிய விளக்கங்களை வழங்கி வருகின்றோம். சூழல் பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்தும் நிறுவனம் எனும் வகையில், மீள் சுழற்சி தொடர்பில் நாம் அதிக ஈடுபாட்டை காண்பிக்கிறோம். எமது பிரதான மூலப்பொருள்களிலிருந்து கழிவாக வெளியேற்றப்படும் செப்பு மற்றும் அலுமினியம் போன்றவை முழுமையான மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படுகின்றன. இவ்வாறாக வெளியேற்றப்படும் மூலப் பொருள் கழிவுகள், உள் நாட்டு சிறிய மற்றும் மத்திய அளவு நிறுவனங்களுக்குத் தமது உற்பத்திச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவதற்காக வழங்கப்படுகின்றன. எமது உணவகம் மற்றும் சமையலறையில் மீதமாகும் பொருள்கள் எமது கிறீன் காஸ் அலகில் இடப்பட்டு, அதன் மூலம் பச்சை வாயு, உணவு தயாரிப்புக்காக உற்பத்தி செய்யப்படுகிறது. இதிலிருந்து பெறப்படும் திரவ உரம், கம்பனி வளாகத்தில் பயன்படுத்தப்படுவதுடன், ஊழியர்களுக்கு மரக்கறி வகைகள் மற்றும் ஏனைய செய்கைகளை முன்னெடுப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் களனி கேபிள்ஸ், உலக சுற்றுச்சூழல் தினத்தை எமது ஊழியர்களை ஈடுபடுத்தி முன்னெடுத்து வருகிறது என்றார். (த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கங்களை தெளிவாகப் பொறிக்கவும்

காரைநகரிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான சேவையில் ஈடுபடும் பஸ்களில் அவை செல்லுகின்ற வழித்தடங்கள் தொடர்பான இலக்கங்கள் தெளிவில்லாதவாறு காணப்படுவதால் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
குறிப்பாக 782, 785/1 ஆகிய வழித்தடங்களில் பயணிக்கும் பஸ்களின் இலக்கங்கள் வெண்கட்டியால் தெளிவில்லாது எழுதப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதனால் பஸ்ஸுக்குக் காத்திருக்கும் பயணிகள் பஸ்களை இனம்கண்டு மறித்து ஏறிச்செல்வதில் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
குறிப்பாக வயோதிபர்களும் கண் பார்வை மங்கியவர்களும் இலக்கத்தை இனம்காண முடியாத நிலையில் பஸ்களைத் தவற விடுகின்ற சந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளன. சிலர் பஸ்ஸை மறிப்பதில் தாமதம் காட்டுவதால் பஸ் இவர்களைக் கடந்து சென்ற பின்னர் துரத்திச் செல்லுகின்ற அவலத்தையும் எதிர்கொள்கின்றனர்.
ஆகவே வழித்தடங்களின் இலக்கங்களைத் தெளிவாக, அனைவரும் பார்த்துப் புரிந்து கொள்ளும் வகையில் பொறிக்குமாறு பயணிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

*- பாதிக்கப்பட்ட பயணி, மூளாய்.*

## முள்ளியில் பொலிஸ் சோதனைச் சாவடி தேவை

கொடிகாமம் பருத்தித்துறை பிரதான வீதியிலுள்ள முள்ளிப் பகுதியில் மக்களின் நன்மை கருதி பொலிஸ் சோதனைச் சாவடி அவசியம் என பொதுமக்கள் மற்றும் பிரயாணிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.
இந்த வீதி, அடிக்கடி ஆள்களற்ற பிரதேசம் என்பதால் குற்றச்செயல்கள் நடைபெறுவதாக மக்கள் கூறுகின்றனர். மாலை ஆறு மணியுடன் துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள் பயணிகள் தமது பயணத்தை நிறுத்தி வருகின்றனர். அது மட்டுமல்லாது பகல் வேளையிலும் தனிமையில் போக்குவரத்துச் செய்யும் பிரயாணிகள் மிகுந்த அச்சத்துடன் பயணிப்பதையே அவதானிக்க முடிகின்றது. இதே வீதியில் கடந்த காலத்தில் இரண்டு உயிரற்ற உடல்கள் மீட்கப்பட்டன. எனவே இந்த ஆள்களற்ற பிரதேசத்தில் பொதுமக்கள் மற்றும் பிரயாணிகளின் நன்மை கருதி காவல்துறை சோதனைச் சாவடியொன்றை அமைத்து மக்களின் பூரண போக்குவரத்துக்கு ஒத்துழைப்பு வழங்க பொலிஸ் தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
இதேவேளை, வடமராட்சிப் பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் வரணியூடாக தென்மராட்சியின் ஏனைய பகுதிகளுக்குச் செல்வதற்கு இந்த முள்ளிப்பகுதியூடாகவே பயணிக்க வேண்டியுள்ளது. இதைப் போன்றுதான் தென்மராட்சியிலிருந்தும் மக்கள் இந்தப் பகுதியூடாகவும் வடமராட்சிக்குக் செல்கின்றனர்.
நீண்ட காலமாகவே முள்ளிப்பகுதி கள்வர்கள், சமூக விரோதிகள் ஆகியோரின் நடவடிக்கைகளுக்குச் சாதகமானதொரு இடமாக விளங்கி வருகின்றது. ஏராளமான கொள்ளைச் சம்பவங்கள் இந்தப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளன. பெண்களைத் துஷ்பிரயோகம் செய்தல், கடத்திச் செல்லல் ஆகியவை மட்டுமல்லாது, கொலைகள்கூட இடம் பெற்றுள்ளன. இதனால் முள்ளிப்பகுதிக் கூடாகப் பயணம் செய்வதை ஆபத்தான ஒருவிடயமாகவே மக்கள் கருதுகின்றனர்.
ஆகவேதான் இந்தப் பகுதியில் பொலிஸ் சோதனைச் சாவடியொன்று அமைக்கப்படுவதன் அவசியம் வலியுறுத்திக் கூறப்படுகின்றது.

*-மாறன், கரணவாய்.*


## அகற்றப்படுமா இயந்திரக் கழிவுகள்?

ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலய வளாகத்தில் போர்க் காலத்தில் கைப்பற்றப்பட்ட இயந்திரங்களின் பாகங்கள் இறக்கி விடப்பட்டன. தற்போது அவற்றின் முக்கிய பாகங்கள் கழற்றப்பட்ட நிலையில் மிகுதியானவை தேடுவாரற்ற நிலையில் உள்ளன. இவற்றால் பாடசாலைச் சிறுவர்களுக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன. அந்த இடம் புற்கள் வளர்ந்து பற்றைகள் மண்டிக் கிடப்பதால் பாம்புகள் குடிகொண்டுள்ளதுடன் குளவிகள் கூடு கட்டும் இடமாகவும் மாறியுள்ளது. இதனை முற்றாக அகற்றித் தருமாறு ஊடகங்கள் வாயிலாக கோரிக்கை விடப்பட்டமை மட்டுமன்றி, முல்லைத்தீவு அரச அதிபரிடமும் நேரடியாக ஆசிரியர்கள் பெற்றோர்கள் தெரிவித்திருந்தனர். ஆனால் இன்று வரை அவைகள் அகற்றப்படவில்லை. இதனால் சிறார்கள் பயிலும் மற்றும் விளையாடும் இடம் பற்றையாகவும் காடாகவும் காணப்படுகின்றது. இது எந்த வகையிலும் பொருத்தமற்றதாகும். இவைகள் உடனடியாக அகற்றப்பட வேண்டும் எனக்கூறும் பெற்றோர்கள் இந்த விடயம் தொடர்பாக கல்விச் சமூகம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் அவைகளை ஏலத்தில்விட்டு பாடசாலை புனரமைப்புக்காக செலவிட அனுமதி அளிக்க வேண்டும் எனவும் கோரி நிற்கின்றனர்.
இனிவரும் காலம் மழைகாலமாகையால், விஷஜந்துக்கள் பெருகுவதற்கு வாய்ப்பாக இருப்பதுடன் பாடசாலைக் கட்டடங்களுக்குள்ளும் அவைகள் புக வாய்ப்பாக இருக்கும். எனவே இளம் சிறார்களின் நலனைக் கருத்தில் கொண்டு இதனைக் கல்விச் சமூகம் பொறுப்பேற்று அகற்ற நடவடிக்கை எடுப்பார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்.

- பெற்றோர்கள்.
ஒட்டுசுட்டான்




### கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# இதுதானா நல்லாட்சி?

தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினை இன்று நேற்று ஏற்பட்ட பிரச்சினை அல்ல. பல ஆண்டுகளாக நீண்டு நிலைத்திருக்கும் பிரச்சினை. கடந்த ஆட்சிக் காலத்தில் வாக்குறுதிகளை நம்பி ஏமார்ந்து, நம்பிக்கை இழந்து விரக்தி நிலையில் இருந்த தமிழ் அரசியல் கைதிகள் புதிய ஆட்சியில் தமக்கு நீதி கிடைக்கும் என்று நம்பினர். ஆனால் புதிய ஆட்சி ஏற்பட்டு எட்டு மாதங்கள் கடந்த நிலையில் தமது விடுதலையை வலியுறுத்தி மீண்டும் தமது போராட்டத்தை ஆரம் பிக்கவேண்டிய நிலைமை இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. தமிழ் அரசியல் கைதிகள் பிரச்சினைக்கு இம்முறை எப்படியாவது ஒரு தீர்வு காண்பது என்ற திடசங்கற்பம் கைதிகளிடம் மட்டுமல்ல தமிழ் மக்கள் அனைவரிடமும் இருக்கிறது. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் முதல் தடவையாகக் கைதிகளின் உண்ணாவிரதத்துக்கு ஆதரவாகக் கொழும்பிலும் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் மக்கள் எழுச்சியொன்றைக் காணமுடிகிறது. ஜனவரி 8 இல் உதயமான நல்லாட்சியில் தமக்கு விடிவு கிடைக்கும் என்று நம்பியிருந்த கைதிகள் தமது போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதில் இம்முறை மிகவும் உறுதியாக இருக்கின்றனர். ஆகவே இவர்களை விடுதலை செய்து நீதியை நிலைநாட்டுவது அரசாங்கத்தின் கடமையாகும்.
முன்னைய ஆட்சிக்காலத்தில், சுமார் இரண்டரை வருடங்களுக்கு முன்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைதிகள் விடுதலை தொடர்பாக மகிந்தவுடன் பேசியபோது ஒரு மாதத்துக்குள் கைதிகள் பிரச்சினை தொடர்பாக இறுதி முடிவு செய்யப்படும் என்றும், கைதிகள் விடுதலைக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதிலும் ஏமாற்றம் தான் எஞ்சியது. ஜனவரி 8 இல் புதிய ஆட்சி ஏற்பட்ட பின்னர் மன்னார் ஆயர் ஜனாதிபதியைச் சந்தித்து கைதிகளின் விடுதலை குறித்துக் கோரிக்கை விடுத்தார்.
அப்பொழுது ஆறுமாத காலத்துக்குள் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. ஆறு மாதங்கள் கடந்து அதற்குப் பின்பும் இரண்டு மாதங்கள் கடந்த நிலையில் கைதிகள் பிரச்சினைத் தீர்வுக்கு மேலும் இரு வாரங்கள் கேட்கிறது புதிய அரசு.
சாகும் வரையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்று முன் தினம் கொழும்பில் இடம்பெற்ற கண்டனப் பேரணியின் இறுதியில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பதற்காக மனு கையளிக்கப்பட்டபோது ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் ஏ.கே. கொடிக்கார இரண்டு வாரங்களுக்குள் கைதிகள் விவகாரத்துக்கு ஜனாதிபதி தீர்வொன்றைப் பெற்றுத்தருவார் என்று உறுதியளித்துள்ளார். தமிழ் அரசியல் கைதிகள் பிரச்சினை நீண்ட காலமாக இருந்து வரும் பிரச்சினை என்பது ஜனாதிபதிக்குத் தெரியும். ஏற்கனவே ஓர் உறுதிமொழி வழங்கப்பட்ட நிலையில் மீண்டும் இரண்டுவார கால அவகாசம் கோருவது இந்த விடயத்தில் அரசு நீதியாகச் செயற்படுமா என்ற ஐயப்பாட்டைத் தோற்றுவித்துள்ளது.
வாக்குறுதிகளை நம்பி ஏமார்ந்துபோகும் நிலைமை மீண்டும் ஏற்படக்கூடாது. யுத்தத்துக்கு தலைமை தாங்கிய சரத் பொன்சேகாவே தமிழ்க் கைதிகளுக்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருப்பதை அரசு கவனத்தில் எடுக்கவேண்டும். சரத் பொன்சேகா மற்றுமொரு விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். சுறாக்களைத் தப்பவிட்டு நெத்தலிகளைப் பிடித்து வைத்திருப்பதில் என்ன நியாயம் இருக்கிறது என்று கேள்வி எழுப்பியுள்ளார். ஆகவே நெத்தலிகளை விட்டுவிட்டு சுறாக்களைப் பிடிக்க அரசு செயற்படவேண்டும். நீண்டகாலமாக கைதிகள் பிரச்சினை இருப்பது தெரிந்தும் ஜனாதிபதி இரண்டுவார அவகாசம் கேட்பது நியாயமானதாக இருக்கமுடியாது. இந்த வாக்குறுதியை நம்பி கைதிகள் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவார்கள் என்றும் எதிர்பார்க்கவும் முடியாது. ஆகவே கைதிகள் விடுதலை குறித்து அரசு இழுத்தடிக்காது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ததிங்கிண தோம் தாளம் போடும் உள்நோக்கமா...?

பொதுமன்னிப்பு இல்லையேல், உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தாம் கைவிடப்போவதில்லை என்று தமிழ் அரசியல் கைதிகள் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டனர். எந்தக் கடவுள் வந்தாலும், தமது கோரிக்கை நிறைவேற்றப்படும்வரை தாம் போராட்டத்தை நிறுத்தப்போவதில்லை என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஆராய்வதற்கு, உயர்மட்ட விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதால், போராட்டத்தைக் கைவிடுமாறு, அவர்களைச் சந்தித்த நீதி அமைச்சர் தெரிவித்திருந்தார்.

அவ்வேளையே போராட்டக்காரர்கள் மேற்கண்ட தமது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர்.

நீதி அமைச்சர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தமிழ் அரசியல் கைதிகளுடன் நடத்திய சந்திப்பின்போது, உரிய நடவடிக்கை மேற்கொள்ள இவ்வருட இறுதிவரை அவகாசம் கேட்டார். ஆனால் அரசியல் கைதிகள் தமது நிலைப்பாட்டிலிருந்து ஓர் அங்குலம் தானும் அசையவில்லை. வாடி வதங்கிய நிலையிலும் அவர்கள் தமது உண்ணா நோன்பைத் தொடர்கிறார்கள். வாழ்வா, சாவா? என்ற நிலைக்கு அவர்கள் தம்மைத் தாமே தள்ளிக் கொண்டுள்ளனர் என்பதே பொருத்தம். தம்மால் தனித்து முடிவு எடுக்க இயலாது என்றும் அமைச்சரவையைக் கூட்டி, கலந்து ஆலோசித்த பின்னரே தீர்க்கமான முடிவு ஒன்றை மேற்கொள்ள இயலும் என்றும் நீதி அமைச்சர் தமது பக்கத்தைக் காட்டினார்.

அதற்கு ஒரு துளியேனும் அசைந்து கொடுப்பதற்கு, தமிழ் அரசியல் கைதிகள் தயாரில்லை என்ற நிலை இப்போது மேலுயர்ந்து நிற்கிறது.

மறுபுறத்தில்--

அரசியல் கைதிகள் என்று எவரும் நாட்டில் இல்லை. பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புள்ளவர்களே சிறையில் இருக்கிறார்கள் என்று வேண்டாத வகையில் "குழப்பம் காய்ச்சி"ப் பாணியில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்து இருக்கிறார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதம் குறித்து ஆராயப்பட்டதாக ஊடகவியலாளர்களுக்குத் தகவல் தெரிவித்த வேளையில் தமது கெட்டித்தனத்தை அவர் இவ்வாறு விளாசி உள்ளார்.

குற்றச் சாட்டுக்கள் எதுவும் இல்லாத கைதிகள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்படுவர்--

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்பு உடையவர்கள் விசாரிக்கப்படுவதற்கும்--

குற்றம் அற்றவர்கள் விடுவிக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்-- என்றும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருக்கிறார்.

குற்றச் சாட்டுக்கள் இல்லாதவர்களும் உள்ளனர். அவர்களுக்கு தண்டனையும் இல்லை; விடுதலையும் இல்லை!! -- என்கிறார் அமைச்சர்.

உறவுகளைப் பிரிந்து, தடுப்புக் காவலில் வைக்கப்படுவதனை தண்டனை என்று அமைச்சர் அர்த்தப்படுத்துகின்றாரா?

தமது உறவுகளுக்கு உழைத்து உண்ணக் கொடுக்க வேண்டிய நிலையில்,--

தடுப்புக் காவல் கைதிகள் அவல வாழ்வு வாழ்வது--

அவர்கள் மட்டுமன்றி, இரத்த உறவுகளும், அவர்களை நினைந்து, ஏங்கி ஏங்கி எவ்வேளையிலும் பெருமூச்சு விடுவதும்--

கைதிகளுக்கு மட்டுமன்றி அவர்களின் இரத்த உறவுகளுக்கும் சேர்த்து வழங்கப்படும் அதி உச்ச பட்சமான மறைமுகத் தண்டனை என்பதனை அரச பிரகிருதிகளால் சிறிதேனும் பகுத்து உணரமுடியாமல் இருப்பது ஏன்?

மொத்தத்தில் இந்த நிலை மனிதாபிமானத்தை வெட்டிச் சாய்க்கிறது! அதனை நிறுத்த அனைத்துலக தேசங்கள் தலையிடும் நிலை உருவாகக் கூடும் என்பதனை ஆளும் தரப்பு உணர்வது எப்போது....?

அதன் பின்னர், இந்நாட்டு அரசு ததிங்கிண தோம்.... தாளம் போட நேரிடலாம் என்பதனை மறந்துவிடலாமோ...?

# இந்தியாவை சீற்றமுறச் செய்த பாலியல் இலஞ்ச விவகாரம்

● சேரலாதன்

இந்திய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் வீட்டுத் திட்டத்தில் பணியாற்றி வரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பணியாளர்கள் சிலர் பாலியல் இலஞ்சம் கேட்டதாக வெளிவந்த செய்திகள் இலங்கையில் மட்டுமல்லாது இந்தியாவிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

போர் காரணமாக வீடு, வாசல்களை இழந்து இடம் பெயர்ந்து சென்ற மக்களுக்கென வீடுகளை அமைக்கும் நடவடிக்கைகள் வடக்குகிழக்கு மாகாணங்களில் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. இதில் ஒரு பயனாளிக் குடும்பத்துக்கு 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா இந்திய அரசின் சார்பாக வழங்கப்படுகின்றது. பயனாளிகள் மீதித்தொகையைத் தம் கையால் இட்டு வீட்டைக் கட்டி முடிக்க வேண்டும் என்பது நிபந்தனை யாக உள்ளது. இந்திய அரசின் சார்பில் 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒவ்வொரு வீட்டுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டுவரும் நிலையில் தற்போது 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா மாத்திரமே பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. வட மாகாணத்தைப் பொறுத்த வரையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வீடுகள் அமைப்பதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி வருகின்றது. இதற்கென நியமிக்கப்பட்ட அதிகாரிகள் களத்தில் இறங்கிப் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் வீடுகளை அமைப்பதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி வருவதுடன், தேவையான நிதியைக் கட்டம் கட்டமாக வழங்கும் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

> அப்பாவிப் பெண்களிடம் பாலியல் இலஞ்சம் கோரிய அதிகாரிகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அப்போதுதான் இவர்களைப் போன்ற ஏனையவர்கள் எதிர்காலத்தில் இதுபோன்ற செயல்களை நினைத்துக் கூடப் பார்க்கமாட்டார்கள். குறிப்பாக இலங்கை அரசு தாமதிக்காது நடவடிக்கை எடுக்கத் தவறினால் அது இந்தியாவின் வெறுப்பைச் சம்பாதிப்பதுடன் சர்வதேசத்தின் மதிப்பையும் இழக்க வேண்டியதொரு நிலையை உருவாக்கிவிடும்.



போரினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது வன்னிப் பிரதேசம் தான் என்பதை அனைவரும் அறிவார்கள். அங்கும் இந்திய வீட்டுத் திட்டப் பணிகள் செயற்படுத்தப் பட்டு வருகின்றன. இந்த நிலையில் போரின்போது குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களின் தலைமைப் பொறுப்பை பெண்களே ஏற்று நடத்துகின் றனர். மிகவும் வறுமையான சூழலில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படும் நிலையில் இந்திய அரசு வழங்கும் நிதியைக் கொண்டு வீடுகளை அமைக்க வேண்டிய நிர்ப்பந்தமும் இவர் களுக்கு ஏற்பட்டுள்ளது. மீதி நிதியைத் தேடுவது என்பது இவர்களுக்கு இலகுவானதாக இல்லாத சூழ்நிலை. அன்றாட உணவுக்கே அல்லாடிக் கொண்டிருக்கும் இவர்கள் லட்சக்கணக்கான ரூபாய்களைத் திரட்டுவ தென்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாதது. இவர் களின் நிலை குறித்துப் பரிதாபப்பட வேண்டியவர்கள் அவர்களது பலவீனத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைப்பதை எண்ணும்போது அருவருப்புத் தான் ஏற்படுகின்றது.

இந்த நிலையில் கிளிநொச்சி, முழங்காவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இந்திய வீட்டுத் திட்டப் பயனாளிகளான பெண்களிடம் இலங்கைச் செஞ்சிலு வைச் சங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் பாலியல் இலஞ்சம் கோரியதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. வீட்டுத்திட்டத்துக்குரிய நிதியை விடுவிக்க வேண்டுமானால் தமக்குப் பாலியல் இலஞ்சம் தர வேண்டுமெனக் குறிப்பிட்ட பெண்கள் சிலரிடம் அவர்கள் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதாகத் தெரியவருகின்றது.

இது தொடர்பான தகவல்கள் வெளியானதும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் கடும்தொனியில் கருத்து வெளியிட்டதுடன் தமது அரசுக்கு அறிக்கையொன்றையும் அனுப்பி வைத்துள்ளது. மேலும் இலங்கை அரசிடமும் சில கடுமையான கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. அதில் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள அதிகாரிகள் நாட்டைவிட்டுத் தப்பிச் செல்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டு மென்பது முக்கியமானதாகும். இந்திய மத்திய அரசும் இந்த விடயத்தை தீவிரமாகப் பரிசீலித்து வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

ஆனால் இலங்கை அரசின் சார்பில் இதுவரை இந்த விடயம் குறித்து எந்த விதமான கருத்தும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். குற்றவாளிகளைப் பாதுகாப் பதில் இலங்கை நாட்டுக்கு உள்ள அக்கறை இதன் மூலமாகவும் தெளிவாகத் தெரிகின்றது. ஆனால் இந்திய அரசு இதில் மெத்தனப் போக்கைக் கடைப் பிடிக்குமென எவருமே எதிர்பார்க்க முடியாது. பாதிக்கப்பட்ட தமிழ்ப்பெண்களிடம் பாலியல் இலஞ்சம் கோரிய விடயம் தமிழ்நாட்டில் பெரும் சீற்றத்தை ஏற்படுத்திவிடப் போகின்றது. ஏற்கனவே போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பாக அதிருப்தியும், சீற்றமும் கொண்டிருக்கும் இந்தியாவிலுள்ள தமிழ் உணர் வாளர்கள் இந்திய மத்திய அரசுக்கு அழுத்தத்தைப் பிரயோகிப்பர் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

ஆகவே இந்திய அரசு தனது நிதிஉதவியுடன் மேற்கொள்ளப்படும் வீட்டுத்திட்டப் பணிகளில் நேரடியாகக் கவனம் செலுத்தவேண்டிய தேவை தற்போது உருவாகியுள்ளது. ஏற்கனவே இந்த வீட்டுத்திட்டத்துக்கு வழங்கப்படும் நிதி போதாது என்ற முறைப்பாடுகளும் வீட்டுத்திட்டப் பயனாளிகளிடமிருந்து தெரிவிக்கப்பட்டு வருகின்றன. போரால் மோசமாகப் பாதிக்கப்பட்ட தமக்கு வீடுகளை அமைக்கவென இந்திய அரசு நிதி வழங்குவது தொடர்பாக நன்றியைத் தெரிவிக்கும் அவர்கள் அந்த நிதியைக்கொண்டு வீடுகளை முழுமையாக அமைப்பதில் தாம் எதிர்கொள்கின்ற இன்னல்களையும் எடுத்துக் கூறுகின்றனர். வீடுகளை முழுமையாக அமைப்பதற்கு இந்திய அரசு வழங்குகின்ற 5 லட்சத்து 50ஆயிரம் ரூபாயைவிட மேலதிகமாக அதேயளவு நிதி தேவைப்படுவதாகப் பயனாளிகள் தெரிவிக்கின்றனர். மேலும், வறுமைக் கோட்டுக்குள் வாழ்கின்றவர்கள் மட்டுமே இந்திய வீட்டுத் திட்டத்தினுள் உள்வாங்கப் படுவதால் வறுமை நிலையில் உள்ள அவர்களால் இந்தப்பெரும் தொகை நிதியைத் திரட்ட இயலாதுள் ளது. இதன் காரணமாகவே சில வீடுகள் அரைகுறையான நிலையில் உள்ளதை அவதானிக்க முடிகின்றது. ஆனால் வீடுகளை பூர்ததி செய்து முடிக்காதுவிட்டால் காணியுடன் சேர்த்து அரைகுறை நிலையிலுள்ள வீடும் சுவீகரிக் கப்பட்டு விடுமென அதிகாரிகள் அச்சுறுத்தல் விடுவதை யும் காணமுடி கின்றது. இந்திய அரசு இதனைக் கருத்தில் கொண்டு தேவைப்படும் மேலதிக நிதியை வழங்கினால் இந்திய வீட்டுத் திட்டப் பயனாளிகள் பெரும் நன்மை அடைவார்கள்.

இவை ஒருபுறமிருக்க அப்பாவிப் பெண்களிடம் பாலியல் இலஞ்சம் கோரிய அதிகாரிகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அப்போதுதான் இவர்களைப் போன்ற ஏனையவர்கள் எதிர்காலத்தில் இதுபோன்ற செயல்களை நினைத்துக் கூடப் பார்க்கமாட்டார்கள். குறிப்பாக இது விடயத்தில் இலங்கை அரசு தாமதிக்காது நடவடிக்கை எடுக்கத் தவறினால், அது இந்தியாவின் வெறுப்பைச் சம்பாதிப்பதுடன் சர்வதேசத் தின் மதிப்பையும் இலங்கை இழக்க வேண்டியதொரு நிலையை உருவாக்கிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில மூலம்: கொலும் லைன்ச்
தமிழில்: ரஜீபன்

# சிரிய ஜனாதிபதியைக் காப்பதில் புடின் உறுதியாக இருப்பது ஏன்?


கடந்த மூன்று வருடங்களாக ரஷ்யாவின் இராஜதந்திரிகள் தாங்கள் சிரிய ஜனாதிபதி பசார் அல் அசாத்தை ஆதரிக்கவில்லை என சர்வதேச இராஜதந்திரிகளுக்குத் தெரிவித்து வந்துள்ளனர்.

எனினும் சிரிய ஜனாதிபதியைப் பதவி கவிழ்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ள கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிராக ரஷ்யா தனது விமானத் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளமை,மத்திய கிழக்கில் எஞ்சியுள்ள ரஷ்யாவின் ஒரேயொரு நேசநாடான சிரியாவின் ஜனாதிபதியைத் தொடர்ந்தும் ஆட்சியில் வைத்திருப்பதற்கு புடின் எவ்வளவு தூரம் வேண்டுமென்றாலும் முயல்வார் என்பதையே புலப்படுத்தியுள்ளது.

பிராந்தியத்தின் ஏனைய சர்வாதிகாரிகளான கடாபி, ஹொஸ்னி முபாரக் ஆகியவர்களுக்கு நிகழ்ந்த கதி அசாத்துக்கு ஏற்படுவதைத் தவிர்ப்பதே பிராந்தியம் குறித்த ரஷ்யாவின் முக்கிய தந்திரோபாயமாக மாறிவரு கின்றது.

பிராந்தியத்தின் மிக மோசமான தலைவர் ஒருவரைக் காப்பாற்ற முயல்வதன் மூலம் பிராந்தியத்தில் தான் மூர்க்கமாக நடந்து கொள்ளத் தயார் என்ற செய்தியையும்





ரஷ்யா தெரிவித்துள்ளது. மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்காவின் நேசநாடுகள் தங்களைப் பாதுகாப்பற்றவைகளாக உணரத் தொடங்கியுள்ளதுடன், தங்களுடைய எதிர்காலம் குறித்து அமெரிக்கா அளித்த வாக்குறுதிகள் பற்றி சந்தேகம் கொள்ளத் தொடங்கியுள்ள நிலையிலேயே ரஷ்யா இவ்வாறு செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மத்தியகிழக்கு நிலைகுலைந்து வருகின்றது, நாடுகள் கவிழ்கின்றன, ரஷ்யா தனது நலன்களை பாதுகாப்பதற்காக இந்த விவகாரத்தில் தலையிடுவதற்கு தயாராகவுள்ளது, ஆனால் அமெரிக்கா அவ்வாறு செயற்படவில்லை என்கிறார் வொசிங்டனை சேர்ந்த நிறுவகம் ஒன்றின் அராபிய அரசியல் குறித்த நிபுணர் ஆன்றூ டபிளர்.

மத்திய கிழக்கு நாடுகள் உறுதிப்பாட்டையும் தொடர்ச்சியையும் எதிர்பார்க்கின்றன, ஆனால் ஒபாமா நிர்வாகத்திடமிருந்து அவை கிடைக்கவில்லை,சிரியா தொடர்பான ரஷ்யாவின் நிலைப்பாட்டைமத்திய கிழக்கு ஆதரிக்காவிட்டாலும், தனக்கு முக்கியம் எனக் கருதும் இடங்களில் துணிச்சலுடன் ரஷ்யா செயற்படுவது குறித்து மத்திய கிழக்கு மக்கள் மத்தியில் ஒரு வித மரியாதையுள்ளது எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

மத்தியகிழக்கு தொடர்பான ரஷ்யாவின் தந்திரோபாயத்தில் சிரியா ஒரு முக்கிய நாடு என்பது குறித்து என்றும் சந்தேகம் இருந்ததில்லை. கிழக்கு மத்தியதரைக்கடலில் உள்ள ரஷ்யாவின் ஒரேயொரு பெரியகடற்படைத் துறைமுகம் சிரியாவின் கடலோர நகரான டார்டசில் அமைந்துள்ளது.

சிரியாவிலும், ஈராக்கிலும் போராடுவதற்காக ரஷ்யாவிலிருந்து சுமார் 2000 ஜிகாத் தீவிரவாதிகள் இந்த நாடுகளுக்குச் சென்றுள்ளனர் என ரஷ்யாவின் இராணுவ மற்றும் சுயாதீன நிபுணர்கள் மதிப்பிடுகின்றனர்.2011 இல் சிரியாவில் மோதல் ஆரம்பித்தது முதல் ரஷ்யா அசாத் அரசுக்கு மிக பெறுமதியான இராஜதந்திர ஆதரவை வழங்கி வந்துள்ளது. அசாத்தைப் பதவியிலிருந்து அகற்றும் நோக்குடன் கொண்டுவரப்பட்ட ஐ.நா. தீர்மானங்களை நிறைவேறாமல் தடுப்பதற்கு ரஷ்யா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளது.

கடந்த மாதம் அசாத் விடுத்த வேண்டுகோளின் பேரில் ரஷ்யா இராணுவ ரீதியாகத் தலையிட்டது. ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக விமானத்தாக்குதலை மேற்கொள்வதாக அது அறிவித்தது.

எனினும் உண்மையில் அது சிரிய ஜனாதிபதியை அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்காகப் போராடிக்கொண்டிருக்கும் கிளர்ச்சிக்காரர்கள் மீதே தாக்குதல்களை மேற்கொண்டது. தற்போது ரஷ்யா தொண்டர் படையணிகளைப் பயன்படுத்துவது குறித்து சிந்தித்து வருகின்றது. புதன்கிழமை ரஷ்ய விமானங்கள் கடும் தாக்குதலை மேற்கொள்ள சிரியப் படையினர் புதிய தரைத் தாக்குதல்களை மேற்கு சிரியாவில் ஆரம்பித்துள்ளதாக வொசிங்டன்போஸ்ட் தெரிவித்துள்ளது.

ரஷ்யா தான் ஐ.எஸ். மற்றும் அல்ஹைடா உட்பட்ட தீவிரவாத அமைப்புகளுக்கு எதிராகப் போராடுவதாகத் தெரிவித்துள்ளது. அசாத்தை அகற்றுவதற்கு அமெரிக்காவும், அதன் சகாக்களும் மேற்கொண்டுள்ள முயற்சிகளை அது கடுமையாகச் சாடுகின்றது.

மத்திய கிழக்கில் தன்னுடன் இணங்கிப் போகாத அரசுகளைப் பதவி கவிழ்க்கும் அமெரிக்காவின் நடவடிக்கை காரணமாக பிராந்தியம் எதிர்காலத்தில் குழப்பநிலைக்குள் தள்ளப்படும் என்கிறது ரஷ்யா.

சதாம் தூக்கிலிடப்பட்டார் அதனால் ஈராக் பாதுகாப்பான நாடாக மாறிவிட்டதா? என கடந்த மாதம் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்கிலவ்ரோவ் ஐ.நாவில் செய்தியாளர்களிடம் கேள்வி எழுப்பினார். பலர் பார்த்துக் கொண்டிருக்க கடாபி படுகொலை செய்யப்பட்டார். இது உங்களுக்குத் தெரியும், லிபியா தற்போது சிறந்த நாடா? தற்போது அசாத்தை ஆபத்தானவராகச் சித்திரிக்க முற்படுகின்றனர், நாங்கள் பாடங்களை கற்க முயல வேண்டாமா என அவர் கேள்வி எழுப்பினார்.

புடின் நாட்டில் தனது அரசியல் செல் வாக்கை அதிகரிக்க முயல்கின்றார். பிராந்தியத்தில் ரஷ்யாவின் செல்வாக்கை அதிகரிக்க முயல்கின்றார், மத்திய கிழக்கில் இராணுவத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக அவதானமான, நிதானமான கொள்கையை பின்பற்றும் ஒபாமாவை அவமானப்படுத்த, தர்ம சங்கடத்துக்குள்ளாக்க முயல்கின்றார் என அமெரிக்க கொள்கை வகுப்பாளர்கள் கருதுகின்றனர்.

கடந்த நான்கரை வருடங்களில் 250,000 ற்கும் மேற்பட்டவர்கள் பலியாவதற்கும், இரண்டாம் உலக போருக்குப் பின்னர் உலகின் மிகமோசமான அகதிகள் நெருக்கடிக்கும் காரணமாக அமைந்துள்ளதுமான சிரிய நெருக்கடிக்கு எதிர்காலத்தில் அரசியல் தீர்வொன் றைக் காணவேண்டிய நிலை ஏற்படும்போது சிரிய ஜனாதிபதியின் நிலை பலமாகக் காணப் படுவதை உறுதிசெய்யவும் புடின் விரும்பு கின்றார் எனவும் அமெரிக்கா கருதுகின்றது. உள்நாட்டு போரில் ஏற்பட்ட உயிரிழப்பு களுக்கு ஜனாதிபதி அசாத் அரசே முக்கிய காரணம் எனக் குற்றம் சாட்டப்படுகின்றது, அவருடைய படையினர் பெரிய அழிவை ஏற்படுத்தக் கூடிய பீப்பாய்க் குண்டுகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

சிரிய ஜனாதிபதியைத் தொடர்ந்தும் அதிகாரத்தில் வைத்திருப்பதற்கான முயற்சியில் ரஷ்யா தோல்வியடையும் கட்டத்தில், அவரைப் பதவியிலிருந்து அகற்றுவதுதான் அங்கிருந்து வெளியேறுவதற்கான வழி என்பதைப் புடின் உணர்வார் என அமெரிக்க மேற்குலக அதிகாரிகள் கருதுகின்றனர்.

புடினின் இராணுவ தந்திரோபாயத்தை விரக்தியின் வெளிப்பாடு என ஏளனம் செய்துள்ள ஒபாமா, இது ரஷ்யாவை பெரிய மத்திய கிழக்கு நெருக்கடிக்குள் தள்ளும் என எச்சரித்துள்ளார். ரஷ்யா, மக்கள் ஆதரவற்ற தலைவர் ஒருவரைப் பலப்படுத்தும் பிழையான நடவடிக்கையை தான் மேற்கொண்டுள்ளதை உணரவேண்டும், இதனால் அந்த நாடு சுனி உலகம் முழுவதையும் பகைத்துக்கொள்கின்றது என்றார் ஒபாமா.

புடின் தனது பலம் காரணமாக சிரியாவுக் குள் செல்லவில்லை. மாறாக தனது பலவீனம் காரணமாக, தனது வாடிக்கையாளர் வீழ்ச்சியடைந்து கொண்டிருப்பதால் அங்கு சென்றுள்ளார்,அசாத்தை எதிர்ப்பவர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் என்ற புடினினுடைய கருத்தை நிராகரிக்கின்றோம், இது சுய தோல்விக்கு வழிவகுக்கும்,வெளிநாட்டு தீவிரவாதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கவும் காரணமாக அமைந்துவிடும் என்றார் ஒபாமா.

எனினும் ரஷ்யா முடிந்தவரை அசாத்தைப் பதவியில் வைத்திருக்க முயல்கின்றது. 2012 ஜூன் மாதம் ஐக்கிய நாடுகளுக்கான ரஷ்யத் தூதுவர் விட்டர்லி சர்கின், அசாத் அரசுடன் மொஸ்கோவுக்கு ஆழமான உறவில்லை என உறுதிமொழி வழங்கியிருந்தார். எனினும் அசாத்தின் தலைவிதி காரணமான எந்தத் தீர்மானத்தையும் அவரது அரசே எடுக்க வேண்டும்,மொஸ்கோ சிரியத் தலைவரின் எதிர்காலம் குறித்தோ அல்லது அவரது தலைவிதி குறித்தோ எந்தவித அழுத்தங்களையும் கொடுக்காது எனவும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

அதே காலப் பகுதியில் ஐக்கிய நாடுகளுக்கான ரஷ்யத் தூதுவர் விட்டர்லி சர்கினுடன் மேற்கொண்ட உரையாடலில் அசாத் அரசை ரஷ்யா ஆதரிப்பதற்கு என்ன காரணம் எனக் கேட்டேன். அசாத் அரசு பதவி கவிழ்க்கப்பட்டால் பயங்கரவாதம் ரஷ்யா வரை வந்துவிடும் என்ற அச்சமா அல்லது அவர் பதவி கவிழ்க்கப்பட்டால் சிரியாவில் உள்ள ரஷ்ய கடற்படைத் தளம் பாதிக்கப்படும் என்ற கவலையா எனவும் நான் கேள்வி எழுப்பினேன்.

அதற்கு பதிலளித்த சர்கின் ரஷ்யாவின் நலன்கள் குறித்து மதிப்பிடும் பணியை மொஸ்கோவிடமே விட்டுவிடுகிறேன் என்றார்.

எனினும் தனிப்பட்ட ரீதியில் ரஷ்யா தனது நண்பர்களுக்கு உதவுவது ஒரு கௌரவமான விடயம் என அவர் தெரிவித்தார். ஏனையவர்களை விட நாங்கள் எங்கள் நண்பர்கள் குறித்து உறுதியாகவுள்ளோம், இது சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம், ரஷ்ய இராஜதந்திரிகளைப் பொறுத்தவரை நீங்கள் ஒரு நாட்டு அரசுடன், தசாப்தகால உறவைக் கொண்டிருந்தால். பின்னர் அரசியல் காரணங்களுக்காக அவர்களை சுலபமாகக் கைவிட்டுவிட முடியாது என நாங்கள் கருதுகின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகளுக்கான ரஷ்யத் தூதுவரின் இந்தக் கருத்துக்கள்,அமெரிக்காவை இலக்கு வைத்தவையாகவே காணப்பட்டன.

லிபியா மீது தலையிடுவதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை ஆதரவுவழங்கிய வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாத ரஷ்யா, தன்னுடன் இணங்கிப்போகாத அரசுகளைக் கவிழ்ப்பதற்காக மேற்குலகம் மனித உரிமை விவகாரத்தை பயன்படுத்துகின்றது என்பதற்கு கடாபியின் வீழ்ச்சி ஓர் உதாரணம் எனக் குற்றம் சாட்டியது.

எகிப்திய ஜனாதிபதி அப்தெல் சிசி அதிகாரத்துக்கு வந்த பின்னர், நான்கு தடவைகள் அவர் மொஸ்கோவுக்குச் சென்றுள்ளார். சிசியின் சதிப் புரட்சிக்கு பின்னர் எகிப்துக்கு வருகை தந்த முதல் உலகத் தலைவர் புடின். ரஸ்யத் தலைவருக்கு அங்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.


மேலும் சிரிய அரசுக்கான ரஷ்யாவின் ஆதரவைக் கடுமையாக எதிர்க்கும் சவுதி அரேபியா போன்ற நாடுகளும் புடின் அரசுடன் நட்புறவைக் கட்டியெழுப்பி வருகின்றன. ரஷ்ய அரசுடனான மத்திய கிழக்கு நாடுகளின் உறவுகள் ஆழமற்றவை, அமெரிக்காவுடனான உறவில் நெருக்கடி ஏற்படும்போது அவர்கள் ரஷ்யாவுடன் இணைந்து நன்மைகளை பெற முயல்வார்கள், மொஸ்கோ மனித உரிமைகள், ஜனநாயகம், தேர்தல்கள் குறித்து எந்தக் கேள்வியையும் எழுப்பாததும் அவர்களுக்கு இலகுவாக அமைந்து விடுகின்றது என எகிப்து குறித்த நிபுணர் மைக்கல் ஹனா தெரிவிக்கின்றார்.

எனினும் அமெரிக்காவுடன் ஒப்பிடும்போது ரஷ்யா வெளிப்படுத்தும் தீர்க்கமான நிலைப்பாடுகள் குறித்து அராபிய உலகில் விருப்பமற்ற மரியாதை காணப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

**சதாம் தூக்கிலிடப்பட்டார். அதனால் ஈராக் பாதுகாப்பான நாடாக மாறிவிட்டதா? என கடந்த மாதம் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்கிலவ்ரோவ் ஐ.நாவில் செய்தியாளர்களிடம் கேள்வி எழுப்பினார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்பத்தைக் கட்டுப்படுத்த எளிய வழிகள்



உடலில் காற்றின் அளவு அதிகமாக இருந்தால் தான் ஏப்பம் வரும். அதுவும் காற்றானது இரைப்பையில் இருந்தால் அவை ஏப்பமாக வெளியேறும். அதுவே இரைப்பையைத் தாண்டி குடலை அடைந்துவிட்டால், அபானவாயு வாக மல வாயில் ஊடாக வெளியேறும். ஆனால் சிலருக்கு தொடர்ச்சியாக ஏப்பம் வந்து கொண்டே இருக்கும். அலுவலகத்தில் இருக்கும் போது இப்படி அடிக்கடி ஏப்பம் வந்தால், அது மற்றவர்களுக்கு எரிச் சலை ஏற்படுத்தி, எம்மீது கெட்ட அபிப்பிராயத்தை ஏற்படுத்திவிடும். இதோ அதனைச் சரிசெய்வதற்கு சில வழிகள்:-

குளிர்ச்சியான தண்ணீரைக் குடித்து வந்தால், ஏப்பத்தில் இருந்து விடுபடலாம். அமிலத்தன்மை உள்ள பானங்களான சோடா போன்றவற்றை ஒரு சிப் குடித்தாலும், அடிக்கடி ஏப்பம் வருவதைத் தடுக்கலாம். ஒரு கப் வெதுவெதுப்பான தேநீர் குடித்தால் ஏப்பத்திலிருந்து நிவாரணம் பெறலாம். சோம்பைத் தினமும் சிறிது சாப்பிட்டு வந்தால், அடிக்கடி ஏப்பம் ஏற்படாமல் இருக்கும். இந்த முறையால் உடனே ஏப்பம் நிற்காவிட்டாலும், தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், ஏப்பப் பிரச்சினையில் இருந்து முழுமையாக விடுபடலாம். ஒரு கப் ஏலக்காய்த் தேநீர் குடித்தால், செரிமானப் பிரச்சினை நீங்கி, அடிக்கடி ஏப்பம் வருவது உடனே நின்று விடும். ஒரு துண்டு இஞ்சியை வாயில் போட்டுமென்றாலோ அல்லது இஞ் சித் தேநீர் குடித்தாலோ, தொடர் ஏப்பம் வராமல் இருக்கும். தோடம் பழம் மற்றும் எலுமிச்சையைச் சாப்பிட்டால், அது வயிற்றில் உள்ள காற்றை உடனே வெளியேற்றி, அடிக்கடி ஏப்பம் வருவதைத் தடுக்கும். தினமும் ஒரு கப் சீனி சேர்க்காத எலு மிச்சை ஜூஸ் குடியுங்கள். இதனால் செரிமானப் பிரச்சினையுடன், ஏப்பப் பிரச்சினையும் குணமாகும்.

இதில் ஏதாவது ஒற்றைத் தினமும் பின்பற்றி வந்தால் ஏப்பம் வரும் போது மற்றவர்களது எதிரில் அசிங்கப்படாமல் தப்பிக்கலாம்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### எம்மைத் தொடர்வது எமது நல்லொழுக்கமே

சுடுகாட்டுக்கு அப்பாலும் எம்மைத் தொடர்ந்து வருகின்ற ஒரே நண்பன் நல்லொழுக்கமே. மற்றவை யாவும் சாவுடன் முடிந்து விடும். ஓ மனிதா! இதை நம்பு. உள்ளத்தில் இதை ஊன்றச் செய். மாண்டவர் மீள்வதில்லை. கழிந்த இரவு மீண்டு வருவதில்லை. வீழ்ந்த அலை எழுவதில்லை. ஒரு முறை பெற்ற உடலை மீண்டும் மனிதன் பெறுவதில்லை. எனவே, ஓ மனிதா, இறந்து போன பழங்கதையை வணங்காதே! வா. இங்கு வாழும் நிகழ்காலத்தை வணங்கு. சென்றதை நினைத்துப் புலம்பாதே.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 700 | 600 | – |
| நண்டு | 300 | 400 | 400 | 300 | 100 | 400 |
| கணவாய் | 500 | 600 | 600 | 500 | 600 | – |
| பாரை | 500 | 300 | 500 | 450 | 450 | 300 |
| சுறா | 600 | 400 | 600 | 500 | – | 400 |
| சீலா | 250 | 300 | 400 | 300 | 350 | – |
| விளை | 600 | 400 | 400 | 350 | 400 | 300 |
| முரல் | 350 | 300 | 400 | 300 | 350 | 250 |
| கும்பிளா | 400 | 300 | 400 | 300 | 200 | – |
| கிழாக்கன் | 400 | 800 | 300 | 400 | – | – |
| ஒரா | 350 | 300 | 350 | 350 | – | 200 |
| திரளி | 250 | 200 | 250 | 300 | 100 | – |
| நகரை | 200 | 200 | 200 | 300 | 100 | 250 |
| சூடை | 150 | 100 | 100 | 120 | 50 | – |
| ஓட்டி | 300 | 150 | 250 | 300 | 150 | 200 |
| திருக்கை | 150 | 200 | 250 | 280 | 150 | 100 |
| பாலை | 200 | 200 | – | 200 | 100 | – |
| வாளை | 100 | 100 | | 100 | 100 | – |
| கொய் | 100 | 100 | 60 | 120 | 50 | – |
| மதனம் | 200 | 200 | 200 | 250 | – | 150 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 40 | 60 | 40 | 40 | 60 | 35 |
| கத்தரி | 70 | 60 | 80 | 80 | 70 | 60 | 80 | 35 |
| கரட் | 70 | 80–120 | 40–60 | 70 | 80–100 | 120 | 100 | 120 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 35–40 | 60 | 50 | 30 |
| பயிற்றை | 120 | 100 | 100 | 80 | 120 | 140 | 100 | 20 |
| பாகல் | 200 | 180 | 200 | 200 | 120 | 120 | 110 | 100–120 |
| கருணைக்கிழங்கு | 70 | 50 | 80 | 60 | 60 | 80 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 100 | 120 | 120 | 120 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 100 | 100 | 120 | 80 | 120 | 100 | 100 |
| பூசணி | 40 | 50 | 40 | 40 | 40 | 60 | 50 | 30–40 |
| தக்காளி | 120 | 120 | 100 | 100 | 90–100 | 140 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 40 | 60–70 | 40 | 60 | 35 |
| கீரை | 40 | 40 | 40 | 10 | 40 | 40 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 240 | 200 | 220 | 200 | 200 | 200 | 100 |
| புடோல் | 50 | 80 | 50 | 60 | 70 | 60 | 60 | 40 |
| கோவா | 80 | 80 | 80 | 70 | 50–60 | 120 | 100 | 45–50 |
| வெண்டி | 70 | 60 | 80 | 80 | 80 | 60 | 50 | 40 |
| போஞ்சி | 160 | 160 | 160 | 160 | 150–160 | 200 | 160 | 140 |
| லீக்ஸ் | 100 | 80 | 80 | 70 | 60–70 | 80 | 80 | 70 |
| தேங்காய் | 50 | 60 | 50 | 50–60 | 55–60 | 50 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 130 | 100 | 100–120 | 100 | 100 | 100–120 |
| தேசிக்காய் | 300 | 280 | 250 | 280 | 240 | 800 | 160 | 250 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 10 | 30 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 120 | 140 | 120 | 120 | 160 | 100 | 120 | 80 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | – |
| முருங்கைக்காய் | 120 | 80 | 60 | 30 | 120 | 100 | 120 | 60–70 |

## நாளை

**ஐப்பசி- 01**
**ஞாயிற்றுக்கிழமை**
**18.10.2015**

திதி: பஞ்சமி
மு.ப.11.16
நட்சத்திரம்:
கேட்டை
மு.ப.11.09 வரை
சுபநேரம்:
09.02-10.32 வரை
இராகு காலம்:
04.32-06.02 வரை
ஷஷ்டி விரதம்

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 7 | | | | 8 | |
| | | | | | | 5 | 9 | 1 |
| | 6 | 2 | 8 | | 9 | | | |
| | | | | | 6 | | | |
| | | | | 2 | | | | |
| | 5 | | | 1 | | | | |
| | 9 | | 6 | 8 | | | | |
| | | 4 | | | | 3 | | |
| 2 | 3 | | 9 | | | 8 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | 6 | 9 | 2 | 3 | 7 | 4 | 1 |
| 4 | 1 | 3 | 5 | 7 | 6 | 2 | 9 | 8 |
| 7 | 2 | 9 | 8 | 1 | 4 | 5 | 6 | 3 |
| 3 | 9 | 1 | 6 | 5 | 8 | 4 | 7 | 2 |
| 2 | 8 | 4 | 1 | 9 | 7 | 3 | 5 | 6 |
| 6 | 7 | 5 | 3 | 4 | 2 | 8 | 1 | 9 |
| 9 | 3 | 2 | 7 | 6 | 5 | 1 | 8 | 4 |
| 1 | 4 | 7 | 2 | 8 | 9 | 6 | 3 | 5 |
| 5 | 6 | 8 | 4 | 3 | 1 | 9 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகை யில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக் கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலகை அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உண்மையான மகிழ்ச்சி சிறப்பான குடும்ப வாழ்க்கையில்

தனது திருமண நாளில், ஒவ்வொரு பெண்ணும் ஒரு புதிய ஆரம்பத்துக்குள், ஒரு புதிய வாழ்க்கைக்குள், புதிய சந்தோஷத்துக்குள், புதிய சூழ்நிலைக்குள், புதிய உறவுகளுக்குள் கொண்டு போகப்படுகிறாள்.

ஒவ்வொரு மனிதனும் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்வதற்காகவே இறைவன் குடும்ப வாழ்க்கையை ஏற்படுத்தி காணப்படுகிறது. இதற்குகாரணம் சந்தேகம், தனது குடும்பத்தை பற்றிய பெருமை, பெண்களிடையே காணப்படும் பண ஆசை, எதற்கெடுத்தாலும் சண்டை போடுதல், வாக்குவாதம் செய்தல், முணுமுணுத்தல் போன்ற குணங்கள் குடும்ப வாழ்க்கையை நரகமாக்கி விடுகின்றன.

குடும்பம் என்பது எல்லோருடைய நடத்தையைப் பொறுத்தே இருக்கிறது. கணவன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? மனைவி எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? மாமியார் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? பெற்றோர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்? பிள்ளைகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? என்று ஆராய்ந்து, ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, வாழ்க்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்து நடந்துக் கொண்டால் மட்டுமே, குடும்பம் மகிழ்ச்சியான, அழகான பூந்தோட்டமாய் காணப்படும். திருமண வாழ்க்கை என்பது மகிழ்ச்சியை மட்டும் தான் தாங்கியது என நினைத்து குடும்ப வாழ்க்கைக்கு வருபவர்கள். திருமணத்துக்குப் பிறகு, குடும்பத்தில் உருவாகும் தட்டுப்பாடுகள், வியாதிகள், வருத்தங்கள், வேதனையான சூழ்நிலைகள், பிள்ளைகளினால் வரும் போராட் டங்கள் என்று பல்வேறு பிரச் சினைகள் சந்திக்கும் போது, 'இப் படித் தெரிந்து இருந்தால், திருமணமே செய்திருக்கமாட்டேனே' என்று புலம்பும் பெண்கள் அநேகம் உண்டு. ஆனால், பெண்ணே.. வாழ்க்கை என்பது, இன்பமும், துன்பமும் இணைந்ததுதான். அதனால், இன்பம் வரும் போது சந்தோமாக இருக்கவும், துன்பம் என்று வரும்போது, பொறுமையாக இருக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும்.





குடும்பத்தில் கணவனும், மனைவியும் சரியான அன்பிலும், ஐக்கியத்திலும் நிலைத்திருந்தால் மட்டுமே அந்தக் குடும்பம் மகிழ்ச்சியான குடும்பமாக இருக்க முடியும். அநேக கணவன்–மனைவியா, வெளியே பார்ப்பதற்கு அன்பாக. ஐக்கியமாக இருப்பது போன்று காட்டிக்கொள்கிறார்கள். ஆனால், அவர்களது அந்தரங்க வாழ்க்கையோ, ஒற்றுமை இல்லாமல் காணப்படுகிறது, வெளி உலகிற்கு அன்பாக இருப்பது போல் காட்டிக்கொள்கிறார்கள். ஆனால் வீட்டுக்குள் வெறுப்போடும், சண்டைபோட்டுக்கொண்டும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம், சில பெண்கள், தங்களுடைய கணவர்மாரை 'முதல் நிலை'ப் படுத்தாமல் இருப்பதுதான். ஒரு வீட்டைக் கட்டுவதும் பெண்தான். அதனை குலைப்பதும் பெண்தான். 'எனது கணவரும் படித்திருக்கிறார்., நானும் படித்திருக்கிறேன். அவரும் சம்பாதிக்கிறார். நானும் சம்பாதிக்கிறேன். நான் ஏன் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் ? என்று கேள்வி கேட்கும் பெண்கள், கணவரை மதிக்காமலும், அவர்களது குடும்பத்தினரையும் மதிக்காமல் இருப்பதனால் தான், குடும்பம் குலைக்கப்படுகிறது. எனவே உனக்குக் கொடுக்கப்பட்ட குடும்ப வாழ்க்கையைக் கட்டி காக்க வேண்டியது உனது கரத்தில்தான் இருக்கிறது பெண்ணே...

# ஐப்பசி மாத ராசி பலன்கள்

## துலாம்



உடுத்தும் உடையையும், உள்ளிருக்கும் மனதையும் வெள்ளையாக வைத்துக் கொள்ளும் நீங்கள் எவருக்கும் தீங்கு நினைக்க மாட்டீர்கள். பிரச்சினைகளைத் தந்த சூரியன் இப்போது இலாப வீட்டில் வந்தமர்ந்திருப்பதால் பண வருமானம் கிடைக்கும். மூத்த சகோதரர்கள் நன்மை செய்வர். அரச காரியங்கள் விரைவாக நிறைவேறும். வழக்குகள் சாதகமாகும். தைரியமாக சில முடிவுகளை எடுப்பீர்கள். அதிகாரப் பதவிகளில் இருப்பவர்கள் அறி முகமாவார்கள். புதன் வலுவாக இருப்பதால் பணப் புழக்கத்தில் கஷ்டம் ஏற்படாது. எதிர்பார்த்து ஏமார்ந்து கொடுத்த பணம் கைக்கு வரும். நண்பர்களின் சந் திப்பால் உற்சாகமடைவீர்கள். சிலர் உதவி செய்வர். தந்தை வழியில் மதிப்பு, மரியாதை கூடும். வீட்டை அழகுபடுத்துவீர்கள். அவ்வப்போது தலைச்சுற்றல், தூக்கமின்மை, வாந்தி வருவது போல் ஒரு நிலை ஏற்படும். மறதியால் விலை உயர்ந்தப் பொருள்களை இழக்க வேண்டாம். குருபகவான் இலாப வீட்டில் நீடிப்பதால் செல்வாக்குக் கூடும். சிலருக்கு பெரிய பதவிகளும், பொறுப்புகளும் தேடி வரும். வீடு, காணி வாங்குவீர்கள். அரசியல் கட்சியின் மூத்த நிர்வாகிகளைச் சந்தித்துப் பேசுவீர்கள். கன்னிப் பெண்களுக்குக் காதல் கனியும். உயர்கல்வியிலும் வெற்றி கிட்டும். பெற்றோரின் எண்ணங்களைப் பூர்த்தி செய் வீர்கள். மாணவர்கள் கடைசி நேரத்தில் படிக்கும் பழக் கத்தைக் கைவிடுங்கள். புதியவர்கள் நண்பர் களாவார்கள். பொது விழாக்கள், கல்யாணம் போன்ற சுப நிகழ்ச்சிகளில் முதல் மரியாதை கிடைக்கும். சொந்த ஊரில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். விலை உயர்ந்த ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். அநாவசியச் செலவுகளைக் கட்டுப்படுத்துவீர்கள். வியாபாரத்தில் சில தந்திரங் களைக் கற்றுக் கொள்வீர்கள். வேலையாள்களின் ஒத்துழைப்பால் கணிசமாக இலாபம் உயரும். உத்தியோகத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வு உண்டு. நீங்கள் எதிர்பார்த்த இடத்துக்கே மாற்றம் கிடைக்கும். சகஊழியர்கள் மத்தியில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். கலைத்துறையினர் களுக்கு உங்களின் படைப்புத் திறன் வளரும். விவசாயிகளின் வாய்க்கால், வரப்புச் சண்டைகளுக்கெல்லாம் சுமுகமான தீர்வு கிடைக்கும். அடகு வைத்திருந்த பத்திரத்தை மீட்பீர்கள். பணப் புழக்கமும் கௌரவமும் கூடும் மாதமிது.



**ராசியான திகதிகள்:** ஒக்ரோபர் 15, 16, 22, 24, 25, 27, நவம்பர் 1, 2, 3, 4, 5, 10, 11, 13, 14.

**சந்திராஷ்டமம்:** ஒக்ரோபர் 24, 28 வரை சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமை அதிகரிக்கும்.

**பரிகாரம்:** ஸ்ரீராமரைத் தரிசித்து வாருங்கள். முதியவர்களுக்கு உதவுங்கள்.

## விருச்சிகம்

நியாயமாகத் தனக்கு கிடைக்க வேண்டியதைக்கூட சில நேரங்களில் விட்டுக் கொடுக்கும் நீங்கள் மற்றவர்களின்மீது அதிக பாசம் வைப்பீர்கள். 27 ஆம் திகதி முதல் புதன் 12 ஆம் வீட்டில் மறைந்திருப்பதால் திட்டமிட்டபடி பயணங்கள் அமையும். பேசாமலிருந்த நண்பர்கள், உறவினர்கள் மீண்டும் வந்து பேசுவார்கள். திடீர் பணவரவு உண்டு. சூரியன் 12 இல் மறைந்து நிற்பதால் தந்தையின் உடல்நலம் பாதிக்கப்படும். 3 ஆம் திகதி முதல் சுக்கிரன் இலாப வீட்டில் வந்து அமர்வதால் வாகனம் புதிதாக வாங்குவீர்கள். வீட்டை விரிவுபடுத்திக் கட்டுவீர்கள். வாகனத்தை மாற்றுவீர்கள். வீடு கட்ட கடன் வசதி கிடைக்கும். புது ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள். ராசிநாதன் செவ்வாய் சாதகமான வீடுகளில் செல்வதால் திடீர் உதவிகள் கிடைக்கும். சகோதர, சகோதரிகள் உங்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பார்கள். ஒரு சொத்தைக் காப்பாற்ற மற்றொரு சொத்தை விற்க வேண்டி வரும். கௌரவப் பதவிகள் தேடிவரும். அதிகாரிகளின் அறிமுகம் கிடைக்கும். வீடு, மனை பிரச்சினைகளை சுமுகமாக முடியும். ஜென்மச் சனி நடைபெறுவதால் பல், காது மற்றும் கழுத்து வலி வரக்கூடும். மருத்துவரின் ஆலோசனையின்றி எந்த மருந்தையும் உட்கொள்ள வேண்டாம். சில நேரங்களில் தவறான மருந்து, மாத்திரைகளால் கூட பாதிப்புகள் வரக்கூடும். குரு 10 இல் தொடர்வதால் எவரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம். அநாவசிய மாக எவருக்காகவும் எந்த உறுதிமொழியும் தர வேண்டாம். அரசியல்வாதிகளே! உட்கட்சிப் பூசல் வெடிக்கும். கன்னிப் பெண்களே! யதார்த்தமாக நீங்கள் பேசுவதைக்கூட சிலர் தவறாகப் புரிந்து கொள்வார்கள். பெற்றோர் ஆதரிப்பார்கள். மாண வர்களே! காலநேரத்தை வீணடிக் காமல் பாடத்தில் கவனம் செலுத் துங்கள். வகுப்பறையில் கேள்வி கேட்கத் தயக்கம் வேண்டாம். வியாபாரத்தில் பெரிய முதலீடுகளால் போட்டிகள் ஒருபுறமிருந்தாலும் ராஜதந்திரத்தால் இலாபத்தை பெருக்குவீர்கள். பழைய சரக்குகளை கொஞ்சம் போராடி விற்பீர்கள். கொடுக்கல்–வாங்கல் திருப்திகரமாக இருக்கும். வேலையாள்களிடம் கண்டிப்புக் காட்ட வேண்டாம். இரும்பு, பதிப்பகம், சிமென்ட் வகைகளால் இலாபம் கிடைக்கும். பங்குதாரர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகளை எடுப்பார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் சொந்த விடயங்களை உங்களிடம் சொல்லி ஆறுதல் அடைவார்கள். சகஊழியர்களின் ஒத்துழைப்பால் முடங்கிக் கிடந்த வேலைகளை முடிப்பீர்கள். எதிர்பார்த்த இடமாற்றம் வந்து சேரும். கலைத்துறையினரே! உங்களின் மாறுபட்ட அணுகு முறையால் படைப்புகள் பல ராலும் பாராட்டப்படும். விவசாயி களே! தரிசு நிலங்களையும் இயற்கை உரத்தால் பக்குவப்படுத்தி விளையச் செய்வீர்கள். உணர்ச்சி வசப் படாமல் காரியம் சாதிக்க வேண்டிய மாதமிது.



**ராசியான திகதிகள்:** ஒக்டோபர் 19, 20, 21, 22, 27, 28, 30, நவம்பர் 5, 6, 7, 8, 15, 16.


**சந்திராஷ்டமம்:** ஒக்டோபர் 31 காலை 9:30 மணி முதல் நவம்பர் 1,2 மாலை 4 மணி வரை இருப்பதால் பயணங்களின் போது கவனம் தேவை.

**பரிகாரம்:** பசுவுக்கு அகத்திக்கீரை கொடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வர்ணம் தீட்டலாம் வாங்க



# முட்டாள் வேலைக்காரன்



ஓர் ஊரில், வணிகன் ஒருவன் இருந்தான். பணக்காரனான அவன் சரியான கஞ்சன். எனவே, முட்டாளான ஒருவனை வேலைக்காரனாக வைத்திருந்தான்.

ஒருநாள் வேலைக்காரனை அழைத்து, 'நமது வண்டியை எடுத்துக்கொண்டு பனங்காட்டுக்குப் போ... அங்கே பலர் பனைமரங்களை வெட்டி வண்டியில் ஏற்றிக்கொண்டு இருப்பர். அதேபோல் நீயும் மரங்களை வெட்டிக்கொண்டு வா!' என்றான்.

அப்படியே அவனும் வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றான். அங்கே சிலர் மரங்களை வெட்டி வீழ்த்திக் கொண்டு இருந்தனர். சிலர், கீழே கிடக்கும் மரங்களை முயன்று வண்டியில் தூக்கிப் போட்டுக்கொண்டிருந்தனர். இதைப் பார்த்ததும் வேலைக்காரனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. 'என்ன இவர்கள் எல்லோரும் முட்டாள்களாகஇருக்கின்றனரே? மரம்வெட்டும் போதே அதற்குக் கீழாக வண்டியை நிறுத்தி வைத்தால் மரம் வண்டிக்குள் சரியாக விழும். வீணாக ஒரு முறை நிலத்தில் கிடக்கும் மரத்தை வண்டியில் ஏற்ற வேண்டாமே!' என்று நினைத்தான். 'எனது திட்டத்தை இவர்கள் கண் முன்னாலேயே செய்து காட்டி, நான் எத்தகைய அறிவாளி என்பதைப் புரிய வைப்பேன்' என்ற எண்ணத்தில், தான் வெட்ட வேண்டிய பெரிய மரத்தைத் தேர்ந்தெடுத்தான். கோடரியால் அந்தப் பனை மரத்தின் அடிப்பகுதியைப் பாதி அளவு வெட்டி முடித்தான். பிறகு, அந்த மரம் விழக்கூடிய இடத்துக்கு நேராக வண்டியில் மாடுகள் பிணைக்கப்பட்ட நிலையில் வண்டியை நிறுத்தினான். மரம் வெட்டிக்கொண்டிருந்த மற்றவர்கள், 'ஏன் இவன் இப்படிப் பைத்தியக்கார வேலை செய்கிறான்!' என்று நினைத்தனர். சிறிது நேரத்தில் அந்த மரம், 'சடசட' வென்ற சத்தத்துடன் வண்டியின் மீது வேகமாக விழுந்தது. அவ்வளவு தான், வண்டி தூள் தூளானது. கால் உடைந்து குற்றுயிரும் குலை உயிரு மாக மாடுகள் துடித்துக் கொண்டிருந்தன. இதைக்கண்டு அவன் திகைத்து விட்டான். தனது திட்டத்தில் என்ன குறை நேர்ந்தது என்பதை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

'எனது திட்டம் நல்ல திட்டம் தான். வண்டிக்குத்தான் வலிமை இல்லாமல் போய் விட்டது' என்ற முடிவுடன் வீடு திரும்பினான்.

நடந்ததை அறிந்த வணிகன், முட்டாளாக இருக்கிறாயே! இப்படிச் செய்யலாமா ? என்று வேலைக்காரனைத் திட்டினான்.

சில நாள்கள் சென்றன. திடீரென்று அந்த ஊரில் மண்ணெண்ணெய்க்குப் பஞ்சம் வந்துவிட்டது. தன்னிடம் இருக்கும் இருபத்தைந்து பீப்பாய் எண்ணெயைப் பதுக்கி வைத்தால் நிறைய இலாபம் கிடைக்கும்! என்று நினைத்தான் வணிகன். உடனே வேலைக்காரனை அழைத்து, 'கடையில் இருக்கும் மண்ணெண்ணெய் எல்லாவற்றையும் இன்றிரவு எமது தோட்டத்தில் பள்ளம் தோண்டிப் புதைத்துவிடு. யாருக்கும் தெரியக் கூடாது!' என்றான். வணிகன் சொன்னபடியே, நள்ளிரவில் பெரிய பள்ளம் தோண்டினான் வேலைக்காரன். ஒவ்வொரு பீப்பாயாக உருட்டிச் சென்று அதிலுள்ள எண்ணெயைப் பள்ளத்தில் ஊற்றினான். இப்படியே எல்லாப் பீப்பாய்களில் உள்ள எண்ணெயையும் ஊற்றி முடித்தான். இப்போது அவன் உள்ளத்தில், 'இந்தக் காலிப் பீப்பாய்களை என்ன செய்வது? இது குறித்து முதலாளி ஒன்றும் சொல்லவில்லையே!' என்ற சிந்தனை எழுந்தது.

'சரி, அவரையே கேட்டு விடுவோம்' என்ற எண்ணத்தில் வீட்டில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த வணிகனை எழுப்பினான்.

'ஐயா! நீங்கள் சொன்னபடி மண்ணெண்ணெயைப் பள்ளம் தோண்டிப் புதைத்து விட்டேன். வெற்றுப் பீப்பாய்களை என்ன செய்வது என்று கேட்டான். வணிகனுக்குச் சிறிது சிறிதாக உண்மை புலப்படத் தொடங்கியது. ஐயோ, 'மண்ணெண்ணெய் எல்லாம் போச்சே!' என்று அலறிய வணிகன், அன்றே அவனை வேலையிலிருந்து நீக்கி விட்டான்.

## அறிவோம் தெளிவோம்

(நேற்றைய தொடர்ச்சி)

- நெருப்புக் கோழியால் மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் ஓட முடியும்.
- ஒட்டகங்களால் உமிழ் நீரைத் துப்ப முடியும்.
- ஆமைகளுக்குப் பற்கள் கிடையாது. கடல் ஆமைகளில் ஆயிரத்தில் ஒன்று தான் குஞ்சு பொரித்தபின் உயிர் வாழும்.
- மாகரெல் என்ற மீன் வகை ஒரே நேரத்தில் ஐந்து லட்சம் முட்டைகளை இடும்.
- ஒரு மரம் கொத்தியால் ஒரு நொடியில் இருபது முறை மரத்தைக் கொத்த முடியும்.
- இறால்மீனின் இதயம் அதன் தலையில் இருக்கிறது.



**சிறுவர், இளவல்கள் வட்டம் பகுதிகளுக்கான கதை, கவிதை, பல்சுவைத் தகவல்கள் குறித்த உங்களது ஆக்கங்களை இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். சிறப்பான ஆக்கங்களுக்குப் பரிசுகளும் உண்டு.**

# எமக்கு எப்போதும் கை கொடுப்பது நம்பிக்கையே!




எதை வேண்டுமானாலும் அடைய ஆசைப் படுங்கள். ஆனால், அந்த ஆசை நியாயமானதாக இருக்க வேண்டும். அதைச் சாதிக்க திறமை வேண்டும். திட்டமிட வேண்டும், விடாமுயற்சி வேண்டும், கடின உழைப்பு வேண்டும். இவைகளிருந்தால் எதையும் சாதிக்கலாம். செயல் என்பது உயிரின் இசை என்றொரு பழமொழி உண்டு. அதைச் செயற்படுத்துங்கள்.

இன்ப வாழ்க்கை வாழ மனிதனுக்குச் சிந்தனை எவ்வளவு அவசியமாகத் தேவையோ, அந்த அளவுக்கு செயலாற்றலும் தேவை.

நம்பிக்கை எமது துணிச்சலைத் தட்டி எழுப்புகிறது. நம்பிக்கை மனித இதயத்தில்துணிச்சலை ஊட்டக்கூடியது. தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதனவா. இவை அனைத்துக்கும் மேலாக அன்பு வேண்டும் என்றார் விவேகானந்தர். வயதைக் கூட்டுவதல்ல எமது வாழ்க்கையின் நோக்கம். வயதுக்கு உயிர் ஊட்டுவதுதான் எமது வாழ்க்கையின் நோக்கம். எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்றில்லாமல், இப்படித்தான் வாழ வேண்டும் எனும் கொள்கையுடன் வாழ் நாளெல்லாம் ஒவ்வொரு நொடியையும் செலவிடுங்கள். இந்த இலட் சியத்தை அடைய முடியும் என்று மனதார நம்புவதே தன்னம்பிக்கை. எதை இழந்தாலும் இழக்கலாம். ஆனால் இழக்கக்கூடாத ஒன்று தன்னம்பிக் கைதான். தேவையற்ற பொருள்களை வாங்காமல் இருப்பதே ஒருவகை வருமானம்தான். உங்களது அயலவர்களதோ, அல்லது அலுவலக நண்பர்களதோ அல்லது நீங்கள் இருக்கும் எந்த இடத்திலும் சுற்றியிருப்பவர்களதோ நட்பை ஒரு போதும் இழந்து விடாதீர்கள். உங்கள் வார்த்தைகள் எப்போதும் மென்மையாகவும், இனிமை கலந்ததாகவும் இருக்கட்டும்.

மற் றவர்கள் [illegible] வியைப் பெற [illegible] அவர்களுக்கு உதவ வேண்டும்.

உங்களிடமுள்ள குறைகளைக் குறைத்து நிறைவானவைகளைப் பெற எப்போதும் முயலுங்கள்.

உங்களுக்கு ஒரு பிரச்சினை ஏற்பட்டால் அது உங்கள் திறமைக்கு விடப்பட்ட சவால் என்று நினைத்து அந்தப் பிரச்சினையை அணுகுங்கள். படிக்கப் படிக்க மனம் விரிவடையும், திறந்த மனம் வெற்றியின் விளை நிலம்.

பள்ளம்தான் மேட்டை நிர்ணயிக்கிறது. குள்ளம்தான் உயர்வை வடிவமைக்கிறது. இல்லாததுதான் இருப்பதைக் காட்டுகிறது. தவறு செய்வது பிழையல்ல. திருத்திக் கொள்ள மறுப்பதுதான் பிழை. ஒரு பக்கம் நீங்கள் கை கொடுத்தால் இன்னொரு பக்கம் உங்களுக்குக் கை கொடுக்கப்படும்.

வெற்றி ஓர் அனுபவம் என்றால், தோல்வியும் ஓர் அனுபவமே. தோல்வி எனப்படுவது வெற்றிக்காகச் செலுத்தும் காணிக்கை தான். அதற்காக உற்சாகம் இழக்கத் தேவையில்லை.

உழைப்பதில் மகிழ்ச்சி வேண்டும். உழைக்கத் தயங்கிக் கொண்டேயிருந்தால் தோல்வியைத் தழுவ நேரிடும்.

முயற்சி, பயிற்சி, உழைப்பு, மகிழ்ச்சி, நம்பிக்கை, இவையனைத்தும் வெற்றியின் ரகசியங்கள். எதில் ஈடுபட்டாலும் மன உறுதியோடு ஈடுபடவேண்டும். விட்டுக்கொடுத்தால் மன நிம்மதியோடு விட்டுக் கொடுக்க வேண்டும்.

முயற்சி, கூடக்கூடத்தான் அதன் பலனும் கூடிக்கொண் டேயிருக்கும். முடியும் என்றால் முடிகிறது. தயங்கினால் சரிகிறது. எமக்கு எப்போதும் கை கொடுப்பது நம்பிக்கையே. எப்போதும் ஒருவருடைய இதயம் ஈரமாகவே இருக்கட்டும். அப்போது தான் குடும்ப இதயம் ஈரமாக இருக்கும். குடும்ப இதயயே ஈரமாக இருந்தால் சமுதாய இதயம் ஈரமாக இருக்கும்.

நமது உடலும் உயிரும் போல நமது எண்ணமும் செயலும் இருக்கட்டும். எப்படியாவது வாழ்ந்து விடுவோம் என்று எண்ணுவதல்ல வாழ்க்கை. இப்படித்தான் வாழ வேண்டும் என்ற குறிக்கோளுடன் வாழ்வதே வாழ்க்கை. எப்போதும் புன்சிரிப்போடு இருப்பது நல்லது.

உங்கள் வாழ்க்கையில் எது செய்தாலும் ஒருபோதும் மற்றவர்களைப் பின்பற்றாதீர்கள். பிரதியெடுப்பது தவறு. புதுமையாக சிந்தனை செய்து வாழ்பவனுக்கு என்றும் எதிர் காலம் பிரகாசமாக அமையும். உலாசத்தை மட்டுமே தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வரும் ஒருவன் உண்மையான மகிழ்ச்சி உள்ளவனாக இருக்கு முடியாது.

அதிர்ஷ்டம், துரதிஷ்டம், என்னால் முடியாது போன்ற வார்த்தைகளை வாழ்க்கையின் அடிமட் டத்திலேயே தூக்கி எறிய வேண்டும். அப் போதுதான் வெற்றி வரும்.



(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சித் தலைவரின் கடமையை நிறைவேற்றவில்லையாம் சம்பந்தன்

## உதய கம்மன்பில நேற்றுக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 17
எதிர்க்கட்சித் தலைவருக்குரிய கடமைகளை எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் நிறைவேற்றவில்லை எனக் குற்றஞ்சாட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, எதிர்க்கட்சியிலுள்ள சிறு தரப்பினராகிய தாமே இரவு, பகல் பாராமல் உண்மையான எதிர்க்கட்சியின் கடமையைச் செய்துவருகின்றதாகவும் குறிப்பிட்டார்.

பிவிதுரு ஹெல உறுமய கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டிக் கருத்து வெளியிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அன்னம்படையணி வெற்றிபெற்று அதன் பின்னர் அது இரண்டாகப் பிளவடைந்து, அரசாகவும், எதிர்க்கட்சியாகவும் செயற்பட நடவடிக்கை எடுத்தது. இன்று ஜனாதிபதி பதவி வகிப்பது அன்னம்; பிரதமர் பதவி வகிப்பது அன்னம்; சபாநாயகர் பதவி வகிப்பதும் அன்னம் ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் பதவி வகிப்பதும் அன்னம் எதிர்க்கட்சியின் பிரதான கொறடாவும் அன்னம். அதனால், இன்று எதிர்க்கட்சித் தலைவரின் பொறுப்புகள், எதிர்க்கட்சிப் பிரதம கொறடாவின் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுவதில்லை.

அரசுக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையில் இரகசியத் தொடர்புள்ளது. எதிர்க்கட்சியால் அரசுக்கு நட்புறவு பந்து வீசப்படுகிறது. அரசுக்கு ஆறு ஓட்டங்கள் அடிக்கக்கூடிய வகையில்தான் எதிர்க்கட்சி பந்து வீசுகின்றது. அதனால், எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சிக் கொறடா ஆகியோரிடம் அவர்களது பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுவதில்லை. வடக்கு – கிழக்கில் மட்டும்தான் மக்கள் இருக்கிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் நினைக்கின்றார். வடக்கு, கிழக்குக்கு வெளியே ஒரு பிரச்சினையைப் பற்றிக்கூட எதிர்க்கட்சித் தலைவர் பேசவில்லை. பேசுவதற்கு எதிர்பார்ப்பும் இல்லை எனத் தெரிகிறது.

எதிர்க்கட்சி பிரதம கொறடா, இந்திய மீனவர் பிரச்சினை, எவன்கார்ட் பிரச்சினை என செத்துப்போன, சட்டமா அதிபர் கூட பிரச்சினை இல்லை என அறிவித்த தவற்றை எடுத்துக்கூறி, நாட்டின் உண்மையான பிரச்சினையை மூடிமறைக்கும் கூட்டுமுயற்சியில் இருக்கிறார்.

சட்டரீதியான எதிர்க்கட்சி இன்று பெயரளவுடனான எதிர்க்கட்சியாக மட்டுமே இருப்பதால், எதிர்க்கட்சியிலுள்ள சிறு தரப்பினராகிய நாம் இரவு, பகல் உண்மையான எதிர்க்கட்சியின் கடமையைச் செதுவருகின்றோம். வீதியில் போராடுகின்றோம், ஊடகச் சந்திப்பை நடத்திப் போராடுகின்றோம். நாடாளுமன்றத்திலும் போராடுகின்றோம் எனத் தெரிவித்துள்ளார். (த–சி)

# புதிய முறையிலேயே உள்ளூராட்சித் தேர்தல்

## அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவிப்பு

கொழும்பு, ஒக் .17
உள்ளூராட்சி சபைத் தேர்தல் எக்காரணம்கொண்டும் பிற்போடப்பட மாட்டாது என்பதுடன், புதிய முறைமையிலேயே தேர்தல் நடைபெறும் என்று மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகச் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் கூறுகையில்,

22 உள்ளூராட்சி சபைகளில் கால எல்லை எதிர்வரும் டிசெம்பர் 21ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. செயலாளராகக் காணப்பட்டவர்களின் கட்டுப்பாட்டில்தான் தற்போது உள்ளூராட்சிச் சபைகள் காணப்படுகின்றன.

2012ஆம் அப்போதை உள்ளூராட்சி, மாகாண அமைச்சராக இருந்த அதாவுல்லா எல்லைநிர்ணயம் தொடர்பில் முறையாக பரிசீலனை மேற்கொள்ளாமல் சட்டம் கொண்டு வந்து வர்த்தமானியிலும் பிரசுரித்திருந்தார்.

எல்லை நிர்ணயம் முறையாக மேற்கொள்ளப்படாமையால்தான் தேர்தல் தாமதமடைந்தது. 100 நாள்கள் அரசில் கரு ஜயசூரியதான் ஜனாதிபதியிடம் இவ்விடயம் சம்பந்தமாகக் கலந்துரையாடி, மீண்டும் எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டது. வர்த்தமானி யில் பிரசுரிக்கப்பட்ட எல்லைநிர்ண யம் தொடர்பில் சில பிரச்சினைகள் நிலவுகின்றன.

குறிப்பாக, நுவரெலியா மாவட்டம் மற்றும் கிழக்கு மாகாணத்தில் எல்லை நிர்ணயம் தொடர்பில் கோரிக்கைகளை மனோ கணேசன், ஹக்கீம் உள்ளிட்டவர்கள் முன்வைத்துள்ளனர். அவை தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு இறுதி எல்லைநிர்ணய அறிக்கை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

மார்ச் மாதம் நடைபெறும் தேர்தல் கண்டிப்பாக புதிய முறையின்கீழ்தான் நடைபெறும். ஜனாதிபதியும், பிரதமரும் வாக்குறுதி கொடுத்ததுபோல் ஊழல், இலஞ்சத்திற்கு உட்பட்டிருக்கும் விருப்பு வாக்குமுறையை நீக்கிய புதிய தேர்தல் முறையாக அது அமையும். இம்முறையில் ஏற்கனவே குறிப்பிட்டது போல்70 சதவீதம் தொகுதிவாரி முறையிலும் 30 வீதம் விகிதாசார முறையிலும் நடைபெறும்– என்றார். (த)

# மோட்டார் சைக்கிள் தீப்பற்றி இளைஞருக்குக் காயம்

கரணவாய், ஒக். 17
ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் திடீரெனதீப்பற்றிஎரிந்ததனால் இளைஞர் ஒருவர் தீக்காயங்களுக்கு உள்ளாகிசிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உப்புவல்லை – வீதியில் சோனப்புர பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கரவெட்டி, மத்தொனியைச் சேர்ந்த குமாரசாமி நிரோஜன் (வயது – 25) என்பவரே இவ்வாறு தீக்காயங்களுக்கு உள்ளாகியவராவார்.

கப்பூது வீதியூடாக வந்து கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிள் தீப்பற்றி எரிந்ததால் உடல் முழுவதும் தீ பரவியதை அடுத்து மோட்டார் சைக்கிளைப் போட்டுவிட்டு ஓடிச் சென்று உதவி கேட்டுள்ளார். அப்போது வீதியால் வந்தவர்களால் இவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு பின்னர் அங்கிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவ இடத்தில் முற்றாக எரிந்த நிலை யில் மோட்டார் சைக்கிள் காணப்பட்டதுடன், தலைக்கவசம் மற்றும் உடைகளும் எரிந்த நிலையில் காணப் பட்டன. (த–108)


### வாழ்த்துகின்றோம்



எமது ஆலயத்தின் மீது பல்வேறு பக்திப் பாடல்களைப் பாடிய
**அன்பர் ச. தங்கமாமயிலோன்**
அவர்களின் வணங்கற்பாக்கள் என்னும் பக்திப்பனுவல் வெளியீட்டுவிழா நாளை (18.10.2015) ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றது.

மரபுவழிப் புலமையாளரான தங்கமாமயிலோன் அவர்களது பணிகள் சிறக்கவும் மக்கள் பக்தி நெறியைப் பின்பற்றி வாழவேண்டுமெனவும் வாழ்த்துகின்றோம்

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தினர்
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

### மணமகன் தேவை
1987இல் பிறந்த விவாகரத்தான அழகிய மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை. வெளிநாட்டு மணமகன் விரும்பத்தக்கது.
தொடர்பு thayakam2015.11.27@gmail.com

### வீடு வாடகைக்குத் தேவை
யாழ்.நகரிலிருந்து 5km இற்கு உட்பட்ட பகுதியில் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு:
076 879 6288

### காணி விற்பனைக்கு
பலாலி வீதி, தபால்பெட்டிச் சந்திக்கருகில் 1¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 977 3375

### வீடு வாடகைக்குத் தேவை
யாழ் நகரில் இருந்து 8 Km தூரத்துக்குட்பட்ட அனெக்ஸ் வீடு வாடகைக்குத் தேவை.
K.K.S. வீதி விரும்பத்தக்கது.
தொடர்பு: 076 672 4867 (64059) (14.15.17)

### தேவை
1. விற்பனை உதவியாளர் (ஆண்) கல்வித் தகைமை A/L., சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
2. மேற்பார்வையாளர் (ஆண்) ஓய்வு பெற்ற அரச அலுவர்கள்
3. பில் கிளார்க் (ஆண்) அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
திருநெல்வேலியிலிருந்து 10km இற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: (64069) (10.17)
021 205 2200, 077 9789 223

### நியத்த ஜய
02 06 17 46 W
14,373,120/-

### இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 2015-10-16 | வெற்றி வாரம் 1890 | சிவப்பு
வெற்றி இலக்கங்கள்
09 16 21 38
ஞாயிறுக்கிழமை வெற்றி மொதி 2,404,160/-

### பதவி வெற்றிடங்கள்
077 4458 134, 076 7280492
இவ்விலக்கங்களுக்கு அழைத்து உங்கள் பதிவுகளை உடன் பதிவு செய்க.
30 பேருக்கு முன்னுரிமை Granton Company யின் பின்வரும் பதவிகளுக்கான வேலையாள்கள் தேவை. ஆர்வமும் கடின உழைப்பும் கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.
❖ நிர்வாக அதிகாரி ❖ செயற்திட்ட அதிகாரி
❖ அலுவலக உதவியாளர் ❖ மேற்பார்வையாளர்
தகைமை : O/L, A/L
வயதெல்லை :18 - 35
அனுபவம் இல்லையா? பயிற்சி வழங்கப்படும்
பயிற்சிக்காலம் Earn 12000/= - 15000/=
பின்னர் : 45000/= குறைந்தது (64078)(10.17)
இல. 225 வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

உ
ஓம் சக்தி துணை
யா/அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோயில்
### கோயில் உதவியாளர் தேவை
மேற்படி கோயிலுக்கு மாதச்சம்பள அடிப்படையில் சேவையாற்ற கோயில் உதவியாளர் தேவை. சேவை விவரமும், சம்பளமும் நேரில் பேசித்தீர்மானிக்கலாம். முழு விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் மாலை 4.00 மணி தொடக்கம் 6.00 மணிக்கிடையில் நேரில் வரவும்.
85, இலந்தைக்குளம் வீதி, அரியாலை. (64077) (10.17)
பரிபாலனசபை யா/அ.பி.ம.அ.கோ

### விற்பனைக்கு
நல்ல நிலையிலுள்ள HAxxxx Japan Super Cub 50 Honda Motor Bike (Blue Colour) விற்பனைக்கு உண்டு. (64079) (10.17)
021 221 7500, 077 853 6808

### விற்பனைக்கு
ஊர்க் கோழிக்குஞ்சு விற்பனைக்கு உண்டு தொடர்புகளுக்கு
077 999 4655, திருநெல்வேலி. (64056)

### இணையத்தள வடிவமைப்பு
பாடசாலைகள், கிராமங்கள் ஆலயங்கள் மற்றும் ஏனைய தேவைகளுக்கான இணையத்தளங்களை சிறந்த தரத்துடன் 7000 ரூபாய் முதல் வடிவமைத்துக்கொள்ள தொடர்பு கொள்ளவும்:
T.P: 077 0333 663 (64073) (10.17)

### பெண் பராமரிப்பாளர் தேவை
அரசாங்க உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றும் தம்பதியினரின் ஒரு வயதான இரட்டைக் குழந்தைகளைப் பரா மரிப்பதற்கு, முன் அனுபவமுள்ள பெண் பராமரிப்பாளர் தேவை. நிறைவான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு -
021 225 0037/ 0777 075 057

### விற்பனைப் பிரதிநிதி ( Sales Rep )
உணவுப் பொருள்களை விநியோகம் செய்வதற்கு அனுபவமும் தகைமையும் உடைய விற்பனைப் பிரதிநிதி தேவை.
பொருள்கள் விநியோகம் செய்வதற்கு உதவியாளர்கள் தேவை.
அனுபவம் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்
தொடர்பு : 021 222 7904


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வு இன்று

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வு சுன்னாகம் வாழ்வகத்தில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. சர்வதேச லயன்ஸ் கழகம் 306 பி1 இன் சுன்னாகம் கிளை ஏற்பாடு செய்து, அதன் தலைவர் லயன் என்.தியாரூபன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக பிராந்தியம் 8 இன் தலைவர் லயன் எஸ்.ஹரிகரன் கலந்து கொள்ளவுள்ளார். கௌரவ விருந்தினராக நீர்கொழும்பு ஹோல்டன் ஸ்ரார் பீச் ஹோட்டலின் நிர்வாக இயக்குநர் லயன் தேவபீற்றரும், கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரும் வாழ்வகத்தலைவருமான ஏ.ரவீந்திரனும்கலந்து கொள்ளவுள்ளனர். விசேட விருந்தினராக சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துஷ்மந்தவும் கலந்து கொள்ளவுள்ளார். (த-4)

# கைதிகளை விடுவித்து நல்லெண்ணம் காட்டுக

### அரசிடம் கோருகிறது தென்னாபிரிக்கா

கொழும்பு, ஒக். 17

இலங்கை அரசு அரசியல் கைதிகளை விடுதலைசெய்வது தமிழ் மக்களுக்கும் பாதிக்கப்பட்ட ஏனைய சமூகங்களுக்கும் சிறந்த நல்லெண்ண சமிக்ஞையாக அமையும். அரசு கடந்த காலத்தில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் முன்னோக்கிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளதென்பதை காண்பிப்பதற்கான சிறந்த நல்லெண்ணச் சமிக்ஞையாகவும் இது அமையும். இவ்வாறு இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவர் ஜெவ் டொயிட்ஜ் தெரிவித்தார்.

'உதய'னுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலின்போது அரசியல் கைதிகள் தொடர்பாக எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியல் கைதிகள் விடயத்தில் தென்னாபிரிக்கா தொடர்ச்சியாக அரசிடம் கேள்வியெழுப்பி வருவதாகவும், இது விடயத்தில் முன்னோக்கிய செயன்முறையைக் கடைப்பிடிப்பதாகவும், வழக்குகளை ஆராய்ந்துவருவதாகவும், இலங்கை அரசு தமக்கு உத்தரவாதம் வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

அரசியல் கைதிகள் என அழைக்கப்படுகின்றவர்கள் அன்றேல் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் குறித்து நாம் அரசிடம் கேட்டுள்ளோம். தென்னாபிரிக்கா இந்த விடயத்தில் கரிசனை கொண்டுள்ளமையால் ஒரு முன்னோக்கிய செயன்முறை, இவ்விடயத்தில் இடம்பெறுவதாக அரசு எமக்கு உறுதியளித்துள்ளது. தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் வழக்குகள் தொடர்பாக அவர்கள் கவனம்செலுத்தி வருகின்றனர். தற்போதைய நிலையில் அவர்களை விடுவிப்பதாக அரசு எம்மிடம் கூறவில்லை. ஆனால், தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் விடுவிக்கப்படுவர் எனச் சில நேரங்களில் ஊடகங்களில் அறிக்கையிடப்படுவதைப் பார்த்திருக்கின்றோம். தென்னாபிரிக்கா இவ்விடயம் தொடர்பில் இலங்கை அரசுடன் தொடர்ச்சியாகக் கலந்துரையாடி வருகின்றது. இவ்விடயம் தொடர்பாக முன்னோக்கிய செயன்முறை இடம்பெறுவதாக இலங்கை அரசு எமக்கு உறுதியளித்துள்ளமையாலும், அவர்களது வழக்குகள் தொடர்பாக ஆராய்ந்து வருவதாலும் சிலர் விடுவிக்கப்படுவதற்கான ஏது நிலை உருவாகும் என நான் நினைக்கின்றேன்.

எவருடைய வழக்குகள் தொடர்பில் அரசு ஆராய்கின்றது என எனக்குத் தெரியாது. எத்தனை பேர் விடுவிக்கப்படவுள்ளனர் என்றும் தெரியாது. ஆனால், இவ்விடயம் தொடர்பில் நாம் அரசிடம் கேள்வியெழுப்பியுள்ளோம். அதற்குதாம் இவ்விடயத்தைகவனத்தில் எடுத்துச் செயற்படுவதாக உறுதியளித்துள்ளனர். இது ஒரு சிறந்த நல்லெண்ணச் சமிக்ஞையாக அமையும். சிலர் விடுவிக்கப்படுமிடத்து அரசியல் ரீதியாக அது சிறந்த விடயமாக அமையும். சிலர் விடுவிக்கப்படுவார்களாயின், தென்னாபிரிக்கா நிச்சயமாக மகிழ்ச்சியடையும் ஊக்கம்கொள்ளும். அது தமிழ் மக்களுக்கும் பாதிக்கப்பட்ட ஏனைய சமூகங்களுக்கும் சிறந்த செதியை எடுத்துச்செல்வதாக அமையும். ஏனெனில், அரசானது கடந்த காலத்தில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் முன்னோக்கிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளது என்பதை காண்பிப்பதற்கு அரசியல் கைதிகளின் விடுதலையானது மிகச் சிறந்த நல்லெண்ணச்சமிக்ஞையாகும். அதனைச் செயுமாறு நாம் அரசை ஊக்குவிக்கின்றோம்-என்றார். (த-சி)

## கண்ணீர் அஞ்சலி

உடுவில் பிரதேச செயலகத்தில் மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் எ.ரஞ்சித்ராஜ் அவர்களின் அன்புத் தந்தை

**கஸ்பாறு எசக்கியேல்**

அவர்கள் 15.10.2015 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு துயரடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்**
**யாழ். மாவட்டம்.**

(64066) (10.17)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் நீண்ட காலம் சேவையாற்றி இளைப்பாறிய ஆசிரியையான

**திருமதி செல்வராணி அந்தோனிப்பிள்ளை**

அவர்கள் 12.10.2015 இறைபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்**

(64081) (10.17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 1942 ★ 02 ★ 29



உதிர்வு 2015 ★ 09 ★ 17

**அமரர் தெய்வானைப்பிள்ளை இராசதுரை**

அம்மா!
மாதம் ஒன்று ஆகிவிட்டாலும்
அன்புருவம் நினைவில் பதிந்தேயுள்ளது.
அம்மா எங்கும் தேடுகின்றோம்
பாதடிகளை காண ஏங்குகின்றோம்
மீண்டும் எம்மோடு சேர்ந்து இருக்க
எண்ணிக் காத்திருக்கின்றோம். அம்மா.

எமது குடும்பத்தின் குலவிளக்கு அணைந்த செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசிமூலமும் ஆறுதல் கூறி, பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (17.10. 2015) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத் தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**கோப்பாய் வடக்கு,**
**கோப்பாய்**

**குடும்பத்தினர்.**

# கடைக்குள் புகுந்து தாலிக்கொடி அறுப்பு

### பெண் வைத்தியசாலையில்

பண்டத்தரிப்பு பிரான்பற்றில் கடையொன்றினுள் புகுந்த கொள்ளையர் கடைக்காரப் பெண்ணைத் தாக்கி அவர் அணிந்திருந்த 11பவுண் தாலிக்கொடியைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். காயமடைந்த பெண் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றசம்பவத்தில் ஜெகநாதன் சுதாயினி என்பவரே காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நால்வரில் 2 பேர் தூரத்தில் நின்றவாறு நோட்டம்பார்க்க இருவர் குறித்த கடையில் இறங்கிக் குளிர்பானமும் சிகரெட்டும் வாங்கியுள்ளனர். அங்கேயே நீண்ட நேரம் நின்று குளிர்பானம் அருந்தியவாறு நோட்டமிட்டுள்ளனர். பின்னர் பணத்தைச் செலுத்தியபோது மிகுதிப் பணத் தைக் குறித்த பெண் வழங்கியபோது மீண்டும் எண்ணும்படி கூறியுள்ளனர். அவரும் பணத்தை எண்ணும்போது தாலிக் கொடியை அறுத்துக்கொண்டு தப்பியோட முற்பட்டபோது குறித்த பெண்ணும் அவர்களின் சேட்டில் பிடித்தவாறு சிறிது தூரம் ஓடியுள்ளார். இதனால் கொள்ளையர்கள் அந்தப் பெண்ணை அருகிலுள்ள மதிலுடன் தலையைப் பிடித்து அடித்துவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பி யோடியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் காயமடைந்த பெண் மயக்கமடைந்த நிலையில் சங்கானை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

பட்டப்பகலில் போக்குவரத்து அதிகமான நாற்சந்தியொன்றில் நடைபெற்ற இச்சம்பவம் அப்பகுதி மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது. அது தொடர்பில் விசாரணை இடம்பெறுகிறது. எவ ரும் கைது செய்யப்படவில்லை என்று இளவாலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மஞ்சுள டீ சில்வா தெரிவித்தார். (த-4)

## சிப்பாய் நேற்று சடலமாக மீட்பு

வடமராட்சி வல்வெட்டித்துறை ஊரிக்காடு இராணுவ முகாமில் கடமையாற்றிய இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.


அம்பாறை திகாமடுல்ல பகுதியைச் சேர்ந்த எஸ்.திஸாநாயக்க (வயது - 27) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு தமது கடமைகளை நிறைவு செய்தபின் படுக்கைக்குச் சென்றவர் நேற்று படுக்கையில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார்.

இது தொடர்பாக வல்வெட்டித்துறைப்பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த-108)

## நீங்கா நினைவினிலே



அன்னை மடியில்: 15-03-1939
இறைவன் அடியில்: 17-09-2012

**அமரர்**
**வேலுப்பிள்ளை குழந்தைவேல்**



அன்னை மடியில்: 10-09-1939
இறைவன் அடியில்: 28-09-2014

**அமரர்**
**குழந்தைவேல் பாக்கியவதி**

திதி: துதியை 17-10-2015 சனிக்கிழமை

ஆண்டு ஒன்று, மூன்று ஓடிவிட்டன
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு நீங்கவில்லை நித்தம்
உங்கள் நினைவுகள் எம்நெஞ்சில் ஊஞ்சலாடுகின்றன
என்றென்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்..
உங்கள் பிரிவால் துயருறும் .....

மருமக்கள், மகளமார், பேரப்பிள்ளைகள்,
திரு. திருமதி ஜீவகாந்தன் குடும்பம்
திரு. திருமதி சிவகாந்தன் குடும்பம்

கண்டி வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை.

(59371) (10.17)

## மாணவர் போசாக்குத் திட்டத்தை மேம்படுத்த ஜப்பான் நிதியுதவி

இலங்கையின்பாடசாலைமாணவர்களுக்கு போசாக்கு உணவு வழங்கும் திட்டத்தை மேம்படுத்துவதற்கு உலக உணவுத் திட்டத்தின் ஊடாக ஜப்பானிய அரசு 240 மில்லியன் யென்களை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் கல்வி வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு மேலதிகமாகப் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் செயற்றிட்டத்தை மேம்படுத்த இந்த நிதியுதவியை வழங்குவதற்கு ஜப்பானிய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

நீர் விநியோகம் உள்ளிட்ட சமூக அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும், யாழ்.பல்கலைக் கழகத்தின் விவசாய பீடத்துக்கான வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாகவும் ஆய்வொன்றை மேற்கொள்வதற்கும் ஜப்பான் தொடர்ச்சியான ஒத்துழைப்பைவழங்கும் என ஜப்பானியப் பிரதமர் சின்சோ அபே இலங்கை அரசுக்கு உறுதியளித்துள்ளார்.

அண்மையில் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வபயணமொன்றை மேற்கொண்டிருந்த பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவுடனான இருதரப்பு பேச்சுக்களின் போதே ஜப்பானிய பிரதமர் சின்சோ அபே இவற்றைத் தெரிவித்துள்ளார். (வ-22)

## சாராயம் அருந்தியவர் மோதிரத்தை இழந்தார்

நண்பர்களுடன்சாராயம் குடித்தவர் பெறுமதியுடைய மோதிரத்தை இழந்த நிலையில் வீடு திரும்பியுள்ளார். மோதிரத்துக்கு என்ன நடந்தது என்றோ, எப்படிக் காணாமற் போனது என்றோ அவருக்கு இது வரை ஞாபகம் இல்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கல்வியங்காட்டில்கடந்தபுதன்கிழமை இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

அன்றையதினம் மாலை 6.30 மணியளவில் அவரும் மேலும் 3 பேரும் சாராயக் கடைக்குச் சென்று சாரா யம் அருந்தியுள்ளனர். போதை யேறிய நிலையில் தானாக வீடுசென்றதாக மோதிரத்தை இழந்த நபர் கூறியுள்ளார். எனினும் அவர் வீடு சென்றபோது கையில் இருந்த மோதிரத்தைக்காணாததை அவரது பிள்ளைகள் கண்டுகேட்டபோதே அது காணாமற்போனது அந்த நபருக்கே தெரியவந்தது. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. தீர்மானம் தொடர்பில் ஆராயச் சர்வகட்சிக் கூட்டம்

## ஜனாதிபதி தலைமையில் 22ஆம் திகதி

கொழும்பு, ஒக். 17

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து ஆலோ சனை நடத்துவதற்காக, சர்வகட்சிக் கூட்டத்தை நடத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி மாலை 5 மணிய ளவில், இந்தக் கூட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு, பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் தலை வர்களுக்கு, ஜனாதி பதி செயலகம் அழைப்பு விடுத் துள்ளது.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத் தில், இலங்கையில் இடம் பெற்ற மீறல்கள் தொடர்பாக, பொது நல வாய மற்றும் வெளிநாட்டு நீதி பதிகள், வழக்குத் தொடுநர்கள், சட்டவாளர்களின் பங்களிப்புடன் நம்பகரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட் டுள்ளது.

இந்த தீர்மானத்துக்கு இலங்கை அரசும் அனுசரணை வழங்கியுள்ள நிலையில், விசாரணைப் பொறி முறையை உருவாக்குவது தொடர் பாக கலந்துரையாடவே, இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடியே, விசாரணைப் பொறிமுறை குறித்து தீர்மானிக்



கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

# வெலிக்கடைச் சிறைக்கு முன்னால் போராட்டம்

தமிழ் அரசியல் கைதிகளின் விடு தலையை வலியுறுத்தி கொழும்பு வெலிக்கடை, மகஸின் சிறைச் சாலைக்கு முன்னால் நேற்றுப் போராட்டமொன்று முன்னெடுக் கப்பட்டது.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு, கைதிகளை விடுதலைசெய்வதற் கான குழு, தேசிய சமாதானப் பேரவை ஆகியன உள்ளிட்ட அமைப்புகள் இணைந்து போராட் டத்தை முன்னெடுத்தன.

அரசியல் கைதிகளுக்கான தீர் வைப் பெற்றுக்கொடுக்கும் வரை போராட்டம் தொடருமென அதன் ஏற்பாட்டாளர் சுந்தரம் மகேந் திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை 12 ஆம் திகதி ஆரம்பமான தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டம் இன்று ஐந்தாவது நாளாகவும் தொடர் கின்றது.

அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை. பயங்கரவாதத்தில் ஈடு பட்டவர்களேசிறைச்சாலைகளில் உள்ளார்கள் என அரசு கூறிவரு வதை வன்மையாகக் கண்டிப் பதாகஅரசியல்கைதிகளைவிடுதலை செய்வதற்கான அமைப்பின் ஏற்பாட்டாளர்சுந்தரம்மகேந்திரன் குறிப்பிட்டார்.

தமிழ் அரசியல் தலைவர்களும் விசேட நீதிமன்றங்கள் ஊடாக இத னைத் தீர்ப்பதாகக் கூறிவருவதை யும் வன்மையாகக் கண்டிப்பதாக வும், தமிழ்அரசியல்கைதிகளுடன் விடுதலைசெய்யப்பட வேண்டும் என்பதே தமது கோரிக்கை என வும், இவ்வாறு விடுதலைசெய்யப்ப டாத பட்சத்தில் இவ்வாறான போராட்டங்கள் நாடு தழுவிய ரீதி யில் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த-சி)

# தீபாவளிக்கு முன்னர் கைதிகளை விடுவிக்குக

## இந்துமா மன்றம் ஜனாதிபதியிடம் கோரிக்கை

சிறைச்சாலைகளில் தடுத்துவைக் கப் பட்டுள்ளதமிழ்க்கைதிகளை தீபாவளிபண் டிகைக்கு முன்னர் விடுதலை செய்வ தற்கு நடவடிக்கை எடுக்குமாறு அகில இலங்கை இந்து மா மன்றம் ஜனாதிபதி யிடம் கோரிக்கை விடுத் துள்ளது.

இலங்கையில்வாழும்அனைத்து இந்துக் கள் சார்பாக கடந்த ஜன வரி 10ஆம் தி கதி ஜனாதிபதிக்கு அனுப் பி வைத்த வாழ்த்துக் கடிதத்தில்கூட தமிழ்க் கைதிகளின் விட யத்தை எடுத்துக் கூறி யி ருந்ததாகஅகிலஇலங்கை இந்துமா மன்றம் சுட்டிக் காட்டியுள்ளது.

தமிழ்க் கைதிகளின் விடு தலைதொடர்பில்ஜனாதி பதி மைத்திரிபால சிறி சேனவுக்கு அனுப்பி யுள்ளகடிதத்தில்இந்துமா மன்றம் இந்த விடயங் களைக் கூறியுள்ளது.

வற்புறுத்த லின்பே ரில் ஒப்புதல் வாக்கு மூலம் அளிப்பதற்குத் தம்மை நிர்ப்பந்தித் ததாக இந்து மதகுரு ஒருவர் கூறியி ருந்த நிலையிலும், அவ ருக்கு சிறைத்தண் டனை விதிக்கப்பட் டிருக்கிறது.

இதுதொடர்பில் 2002 ஆம் ஆண்டில் சட்ட வைத்திய அதிகாரியால் வழங்கப்பட்ட அறிக்கை யின்பிரதியொன்றையும் இணைத் துள்ளதாகத் தெரிவித்துள்ளஇந்துமா மன் றம், அந்த மதகுரு தடுப் புக் காவலில் இருந்த போதுமனிதாபிமானமற்ற முறையில் எவ் வாறு தாக்கப்பட்டார் என்பதை அது எடுத்துக் காட்டுவ தாகவும் சுட்டிக்காட்டி யுள்ளது.

அந்தவகையில் இந்து மதகுருமார் விடயத்தில் கருணை காட்டப்பட வேண்டும் என்பதுடன், ஏனைய கைதிகளும் நீதி மற்றும் நியாயமான முறையில் நடத்தப்பட வேண்டுமெனவும் அகில இலங்கை இந்துமா மன் றம் ஜனாதிபதிக்கு அனுப் பியுள்ளகடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (த-சி)

# மகிந்த நேற்று வாக்குமூலம்

பெரும்ஊழல், மோசடிகள் தொடர் பில் விசாரணைசெயும் ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்பில் மகிந்த தரப்பால் முன்வைக்கப்பட்ட ஆட் சேபனை மனு நேற்று நிராகரிக்கப் பட்டதுடன், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட நால் வரிடமும் வாக்குமூலங்கள் பதிவு செயப்பட்டன.

முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி செயலாளர் லலித் வீர துங்க, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த மற் றும் சுயாதீன தொலைக்காட்சி கணக்காளர் ஆகியோரிடமே வாக்கு மூலங்கள் பெறப்பட் டுள்ளன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சுயாதீன தொலைக் காட் சியில் மகிந்தவுக்கு ஆதரவாக பிரசுரிக்கப்பட்ட விளம்பரங்க ளுக்கு கட்டணம் செலுத்தாமல் நிறுவனத்துக்கு நட்டம் ஏற்படுத்தி யமை, விளம்பர ஒப்பந்தம் செய் தும் எதிரணியின் பொதுவேட் பாளர்மைத்திரிபாலசிறிசேனவின் விளம்பரங்களைப் பிரசுரிக்காது தடுத்தமை, அதனால் நிறுவனத் துக்குக் கிடைக்கவேண்டிய நிதி இல்லாமல்போனமை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு, முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்சவுக்கு நேற்று முன்தினம் ஆணைக்குழு முன் முன்னிலையா குமாறு அழைப்பாணை பிறப்பித்தி ருந்தது.

எனினும், நேற்று முன்தினம் அங்கு முன்னிலையாகியிருந்த அவர், மேல் நீதிமன்ற நீதிபதிகள் ஆணைக்குழுவில் நியமிக்கப் பட் டமைக்கு எதிர்ப்பைத் தெரி வித்தி ருந்ததுடன், தனது சட்டத்தரணிகள் ஊடாக ஆட்சேபனை மனு ஒன் றையும் சமர்பித்தார். இதனால், விசாரணைகள் நேற்றுவரை ஒத்தி வைக்கப்பட்டதுடன், ஆணை க்கு அதிகாரபூர்வமானதா? அல்லது இல்லையா? என்பது தொடர்பில் நாளை (நேற்று) தீர்ப்பு வழங்கு வதாகவும் ஆணைக்குழு அறிவித் திருந்தது.

இதற்கமைய, மகிந்த தரப்பால் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனை மனு நிராகரிக்கப்பட்டுள்ளதாக நேற் றையதினம் மீண்டும் ஆணைக் குழுவில் முன்னிலையான மகிந்த ராஜபக்சவுக்கு தெரிவிக்கப்பட்டுள் ளதுடன், விசாரணைகளை நியாய மான வகையில் முன்னெ டுத்துச் செல்ல ஒத்துழைப்பு வழங்குமாறு வலியுறுத் தப்பட்டுள்ளது.

பின்னர், மகிந்த ராஜபக்ச உள் ளிட்ட நால்வரிடமும் நேற்று வாக்குமூலங்களை ஜனாதிபதி ஆணைக்குழு பதிவு செய்துள்ளது. (த-சி)

## மரண அறிவித்தல்கள்

### தாமோதரம்பிள்ளை விஜயரெத்தினம்

புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் இணை வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை விஜயரெத்தினம் 12.10.2015 திங்கட்கிழமை சுவிஸ்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-விசாலாட்சி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான துரையப்பா-முத்தம்மா தம்பதியரின் மருமகனும், குணசுந்தரியின் அன்புக் கணவரும், அன்ரன்ராஜ் (ரொனி) இன் பாசமிகு தந்தையும், சரஸ்வதி (பிரான்ஸ்), கமலாம்பிகை (கனடா), இராசலக்சுமி (ஜேர்மனி) காலஞ்சென்றவர்களான கனகரெத் தினம், பார்வதி (கனடா) ஆகியோரின் சகோதரரும், சாந்தலிங்கம் (கனடா), மங்கையர்க்கரசி, இராஜேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான வசந்த குமார் (அப்பு வாத்தியார்), நடராசா, சுந்தரலிங்கம், தர்மலிங்கம் ஆகியோ ரின் மைத்துனரும் மேரித்திரேசாவின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.10.2015 திங்கட்கிழமை சுவிஸ்லாந் தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: +414617313706(சுவிஸ்), 021 221 9038.

தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி ஜெயசுந்தரி தனபதி



யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வவுனியா குட்செட் வீதியை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி ஜெயசுந்தரி தனபதி நேற்று (16.10. 2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற எதிர்வீரசிங்கம்-சிவகாம சுந்தரி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம்-பத்மாவதி தம்பதியரின் அன்பு மரு மகளும், தனபதியின் அன்பு மனைவியும், தர் சினி, தனுயா, தாரணி, தபோதி, நிகேதன் ஆகியோ ரின் அன்புத் தாயும், ஜெயவீரசிங்கம் (கனடா), ஜெயரட்ணசிங்கம், ஜெயராணி (லண்டன்), ஜெயகுமார் அமரர் ஜெயசூரிய, ஜெயகுமாரி (கனடா), ஜெய நேசன் (கனடா), ஜெயசங்கர் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோ தரியும், அமரர் குணநாயகி, திலகநாயகி, ஜீவலட்சுமி, அமரர் பரமநாயகம், நேசநாயகம், அமரர் சூரியகுமாரன், ரேவதி, கயிலைநாதன், துரைசிங்கம், ஜெயலிங்கம் (டென்மார்க்), போஜலிங்கம், கந்தகௌரி, அமரர் இந்திர குமார், சந்திரகுமார் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும், சுதர்சன் (லண் டன்), தர்சன், செந்தூரன் ஆகியோரின் மாமியும் நிரோன், சாயிவர்ஸா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.10.2015 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.172/1, குட்செட் வீதி, தோணிக்கல், வவுனியா.

தகவல்: குடும்பத்தினர். 077 0733719

(C/15941) (10.17)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் பாலேந்திரன் (சிறாப்பர்)

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர்-இராமநாதன் கல்லூரி, இணக்க சபை உறுப்பினரும்)



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் பாலேந்திரன் (சிறாப்பர்) ஓய்வுபெற்ற இராமநாதன் கல்லூரி பிரதி அதிபரும் இணக்க சபை உறுப்பினரும்) நேற்று (16.10.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சுவாமி நாதப்பிள்ளை மற்றும் இராசமணி தம்பதியரின் மருமகனும், இரஞ்சனா தேவியின் (தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம்-முகாமையாளர்) அன்புக் கணவரும், Dr. கார்த்திகா(கொழும்பு) ஜனகன் (பொறியியலாளர் சிங்கப்பூர்) ஆகியோரின் தந்தையும், தெய்வநாயகி இரத்தின கோபால் (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (கல்வி அதிகாரி) பாஸ்கரன் (கப்பற்துறை கூட்டுத்தாபனம்) காலஞ்சென்ற பராசக்தி செல்வரத்தினம் காலஞ்சென்ற பாலகிஷ்ணன் (மொடன் ரேட்ஸ் உரிமையாளர்), விமல நாயகி குமாரகுலசிங்கம் காலஞ்சென்ற பாலச்சந்திரன் ஆகியோரின் சகோ தரனும், இராசமனோகரன் தேவமனோகரன் கிருபாகரன், செல்வாகரன், ஐங்கரன், திருக்குமரன், செல்வரத்தினம், குமாரகுலசிங்கம், யுவராஜா, உதயகுமார், பரமானந்தன் ஆகியோரின் மைத்துனரும், இராசதேவி, இராச மலர், சுலோசனா தனலக்சுமி, தனேஸ்வரி அம்மா, சிதம்பரேஸ்வரி இந்தி ராணி ஸ்ரீபதி, துஷ்யந்தி, மதுரா, றஜிதா, சந்திரி, புகழினி ஆகியோரின் மைத்துனரும், செந்தூரன், கஸ்தூரி, சர்மிலன், சாமந்தி, மாதுமை, ஜய பவன், சயன், கிருசாத், மதுசாந்த், சேயோன், நனேஸ், சுபிச்சா ஆகி யோரின் மாமனும், சுவாதி, சரிகா, யுவேந்திகா, சுவேந்திகா, அனு, பானு, அனந்தன், பாரி, யதுர்ஷா, விக்னேஸ், கரிஸ், கருணி, கேதுஷன், கேதுஷா, யாழினி, பாலினி, விசாகன், பானுஷா ரமணன் காலஞ்சென்ற தனுஷா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அங்களப்பாய், இணுவில் கிழக்கு.

(64083)(10.17)

த. குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதிகளை உடனடியாக விடுவிப்பதே நல்லாட்சி

## நீதி, சமாதான ஆணைக்குழு சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக். 17

மனிதர்களை வேட்டையாடும் சுறாக்களும் – முதலைகளும் சுதந்திரமாக நடமாடும்போது, நெத்தலி போன்ற சிறிய மீன்களைப் பிடித்து அடைத்து வைத்திருப்பது போல், தமிழ் அரசியல் கைதிகளும் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். நல்லாட்சி அரசு அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று, யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழு கோரியுள்ளது.

இது தொடர்பில் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் அந்த அமைப்பின் தலைவர் அருட்திரு. எஸ்.வி.பி. மங்களராஜா மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் அரசியல் கைதிகள் மேற்கொண்டு வரும் உணவு தவிர்ப்புப் போராட்டம் நீதியானது என்று நாம் ஏற்றுக்கொள்கின்றோம். இவர்களில் சிலரது நிலை கவலைக்கிடமாக உள்ளது. எமக்கு மிகவும் வேதனையளிக்கின்றது. இவர்கள் உடனடியாக நிபந்தனையின்றி விடுவிக்கப்பட வேண்டுமென்பதை நாம் வலியுறுத்துகின்றோம்.

கடந்த ஜனவரி மாதம் நல்லாட்சி வரும் என்று நம்பித் தமிழ் மக்களின் காத்திரமான பங்களிப்புடன் இடம்பெற்ற ஆட்சி மாற்றம் பல்வேறு வழிகளில் நொந்துபோன தமிழ் மக்களுக்கு வேண்டிய நிவாரணத்தைப் பெற்றுத்தரவில்லை என்பதற்கு ஆண், பெண் மற்றும் வயது வேறுபாடின்றி தொடர்ந்து சிறைகளில் தடுத்து வைத்திருக்கின்றமை ஒரு உதாரணமாகும்.

இவர்களுள் கணிசமான தொகையினர் 1015 வருடங்களுக்கு மேலாகச் சிறையில் வாடுகின்றனர். கணிசமான தொகையினருக்கு எதிராக முறைப்படியான குற்றச்சாட்டுகள் முதலாக முன்வைக்கப்படவில்லை. வருடக்கணக்காக இவர்கள் சிறைகளில் அடைபட்டிருப்பதால் ஆதரவற்ற நிலையிலும் வாழ்வாதாரமற்ற நிலையிலும் பாதுகாப்பற்ற நிலையிலும் வாடுகின்ற இவர்களது மனைவியர், கணவன்மார், பெற்றோர், பிள்ளைகள் ஆகியோரது நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது.

கொலை, சித்திரவதை, ஆள்கடத்தல், கப்பம் கோருதல் போன்ற பெரும் குற்றசெயல்களின் சூத்திரதாரிகள் வெளியே சுதந்திரமாக நடமாடித் திரிவதையும் மறுபுறத்தில் முறையாகக் குற்றஞ்சாட்டப்பட முடியாமல் வெறுமனே சந்தேகத்தின் பேரில் சிறையிலடைக்கப்பட்ட, இந்த அரசியல் கைதிகளையும் பார்க்கும்போது மனிதர்களை வேட்டையாடும் பெரிய சுறாக்களும் – முதலைகளும் சுதந்திரமாக நடமாடும் போது நெத்தலி போன்ற சிறிய மீன்கள் பிடித்து அடைக்கப்பட்டுள்ளது போலவும் உள்ளது.

ஒரு நல்லாட்சியில் நிலவ வேண்டிய நீதி வழுவாமையின் அடிப்படையிலும், மனித நேயத்தின் அடிப்படையிலும் இவர்களை விடுவிக்குமாறு நாம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம். இவர்களை நிபந்தனையின்றி விடுவிக்க ஜனாதிபதிக்கு முழு அதிகாரமும் உள்ளமையால் ஜனாதிபதி இந்த விடயத்துக்கு முன்னுரிமை கொடுத்து பல்வேறு வேதனைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் இவர்களை உடனடியாக விடுவிக்கும்படி வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம் – என்று தெரிவித்துள்ளார்.(த-5)

## ரவிராஜ் கொலை குறித்து கருணாவிடம் விசாரணை

கொழும்பு, ஒக்.17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை தொடர்பாக முன்னாள் பிரதி அமைச்சர் கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

ரவிராஜ் படுகொலை தொடர்பாக கருணாவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விசாரணை நடத்தியுள்ளனர். குற்றப் புலனாய்வுத் திணைக்கள வட்டாரங்கள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளன.

ரவிராஜ் படுகொலை தொடர்பாக கருணா அறிந்திருந்தார் என்று கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இந்த விசாரணை நடத்தப்பட்டுள்ளது. அவரிடம் மீண்டும் விசாரணை நடத்தப்படலாம் என்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள வட்டாரங்கள் கூறின.

(த-வ)

### விநாயகத்தின்

காணாமற்போயிருந்த அவர்களைத் திடீரென ஒரு தரப்பினர் கொண்டு வந்து இறக்கி விட்டுச் சென்றிருக்கின்றனர் என்றும் –

இந்தத் தகவல் அறிந்து அவர்களிடம் விசாரணை நடத்தச் சென்ற பொலிஸார் மற்றும் இராணுவத்தினரிடம் அவர்கள் ஒரு கடிதத்தைக் காட்டி அவர்களிடம் அனுமதி பெற்றால் தாங்கள் பேசத் தயார் என்று கூறுகிறார்கள் என்றும் –

கடற்படையினரே அவர்களைக் கொண்டு வந்து இறக்கி விட்டார்கள் என்றும் –

பல்வேறு கதைகள் நேற்று யாழ். குடாநாடு முழுவதும் பெரும் பரபரப்பாக அடிபட்டன. எனினும் இவற்றில் எவையும் பக்கச் சார்பற்ற தரப்புகள் மூலமாக உறுதிப்படுத்தப்படவில்லை.

நீண்ட காலத்தின் பின்னர் விநாயகத்தின் மனைவியும் பிள்ளைகளும் அவர்களது தாயார் வீட்டுக்குத் திரும்பி இருக்கிறார்கள் என்பது உண்மை என்றபோதும் அவர்கள் புனர்வாழ்வின் பின்னர் திரும்பியிருக்கிறார்கள் என்றே ஊரவர்களுக்கும் உறவினர்களுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்றும் உதயன் பத்திரிகைக்கு நம்பகமாகத் தெரியவந்தது. (உ-101,5)

### கைதிகளுக்கு

காலை இந்த அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டங்கள் இடம்பெற்றன.

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் முனியப்பர் கோயில் முன்பாக நடைபெற்ற அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று காலை 7 மணியளவில் ஆரம்பமாகியது.

இந்தப் போராட்டத்தில் பதவிக்கு வரமுன் அரசியல் கைதிகளை விடுவிக்கப் போராடுவோம் என்றீர்களே. பதவிக்கு வந்த பின் அரச குழுவுடன் வந்து ஒரு வருட அவகாசம் கோருகிறீரே. இது நியாயமா?, அரசே! தமிழர்களுக்கு எப்போது சுதந்திரம், அரசியல் கைதிகள் அனைவரையும் உடனே விடுதலை செய், அரசே உலகுக்கு நல்லாட்சி தமிழருக்குக் கொடுங்கொல் ஆட்சியா? பதவிக்கு வரமுன் வாக்குறுதிகள் வந்தபின் மௌனமா?, சிறை வாழ்வுதான் தமிழருக்கு நிரந்தரமா? போன்ற பதாகைகளை ஏந்தியவாறு அரசியல் கைதிகளின் உறவினர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மன்னார் பிரசைகள் குழு உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், கன்னியாஸ்திரிகள், அரசியல் கைதிகளின் உறவினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட பிரசைகள் குழு மற்றும் சிவில் அமைப்புக்களின் ஏற்பாட்டில் நேற்று காலை ஏழு மணியளவில் வவுனியா நகர சபை மைதானத்திலும் இவ் அடையாள உணவு தவிர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு, எமது பிள்ளைகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கு, ஜனாதிபதியே எமது பிள்ளைகளை விடுதலை செய்யுங்கள், தமிழனுக்குச் சிறை கூடமா வாழ்விடம் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்தியவாறு அரசியல் கைதிகளின் உறவினர் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரஜைகள் குழுவின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், அரசியல் கைதிகளின் உறவினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சியில் நடைபெற்ற போராட்டம் கிளிநொச்சி பழைய கச்சேரிக்கு முன்னால் ஆரம்பமாகி கிளிநொச்சி மாவட்டச் செயலகம் வரை சென்று முடிவடைந்தது.

இந்தப் போராட்டத்தில் அரசியல் கைதிகளை விடுலை செய்யவேண்டும், அவர்களுக்கு இரக்கம் காட்டுக, சிறையில் வாழ்வைத் தொலைக்கும் அரசியல் கைதிகளை நல்லாட்சி அரசே விடுதலை செய், எல்லோர் வாழ்விலும் ஒளி.எங்கள் வாழ்வில் ஏன் இருள் போன்ற பதாகைகளை ஏந்தியவாறு அரசியல் கைதிகளின் உறவினர்கள் கலந்து கொண்டனர்.

கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனின் ஏற்பாட்டில் முல்லைத்தீவில் எதிர்வரும் 19ஆம் திகதி கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (த-21-ரி3-106-10ரி)

### பல்கலைச்

வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு பிரதான வாயில்வரை ஊர்வலமாகச் சென்று அங்கு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடளாவிய ரீதியில் உள்ள 14 சிறைச் சாலைகளில் உள்ள 217 அரசியல் கைதிகள் தம்மை விடுவிக்குமாறுகோரி உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுவரும் நிலையில், அவர்களுக்கு ஆதரவாகவே யாழ்.பல்கலைச் சமூகத்தினரும் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கருத்துத் தெரிவிக்கையில்,

நீண்ட காலமாக முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் அனைவரும் எந்தவித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். பேரம் பேசுகின்ற விடயத்துக்கு அப்பால் அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரான இரா.சம்பந்தன் அரசியல் கைதிகள் விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இரா. சம்பந்தன், அரசியல் கைதிகளின் விடுதலைக்காக முன்னெடுக்கும் போராட்டத்துக் கும்பல்கலைச் சமூகத்தின் ஆதரவு இருக்கும்– என்றார்.

மாணவர் பிரதிநிதிகள் தெரிவிக்கையில்,

அசியல் கைதிகள் நீண்டகாலமாக விசாரணைகள்கூட இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எனவே எந்தவித அடிப்படையுமின்றி இன மத பேதமின்றி அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும்.

கடந்த காலங்களில் சிங்கள இளைஞர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கியது போன்று தமிழ் அரசியல் கைதிகளையும் எந்தவித நிபந்தனையுமின்றி பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என்று பல்கலைச் சமூகம் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம்.

கைதிகள் விடுதலையைக் கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர் போராட்டத்தை நடத்தினால் அவர்களுக்கு எமது ஆதரவை வழங்குவோம். இனங்களுக்கிடையே புரிந்துணர்வு, ஒற்றுமை, இணக்கம் காணப்பட வேண்டுமாயின் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தனர். (த-4)

### மனித

போது அவர்கள் கொலைசெய்யப்பட்ட பின்னர் அங்கு புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

மண்ணில் புதைக்கப்பட்டிருந்த மண்டை ஓடு உள்ளிட்ட அந்தப் பொருள்கள் மணல் அகழும் போதே வெளிப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரியாலைக்கும் செம்மணிக்கும் இடைப்பட்ட பகுதியில் ஏ -9 வீதியிலிருந்து செல்லும்போது வீதியில் ரயில் கடவை உள்ளது. அந்த இடத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் எலும்புக் கூடுகள் காணப்படுகின்றன.

சிறு வடலிகளும் பற்றைகளுமாக அந்த இடம் காணப்படுகின்றது. அங்கு மனித மண்டை ஓடு உள்ளிட்ட எலும்புக்கூடுகள் காணப்படுகின்றன. அத்துடன் பெண்களின் வெளி, உள் ஆடைகள், 2 கைப்பைகள், 2 விதமான செருப்புக்கள், பெண் பிள்ளைகள் பாவிக்கும் சிறியபேஸ் என்பன காணப்படுகின்றன. அந்த பேசினுள் பென்சில், பேனா, சில்லறைப் பணம் என்பன காணப்படுகின்றன. அதனடிப்படையில் 2 பெண்கள் அந்த இடத்தில் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

திருட்டு மணல் அகழ்வது சட்டவிரோதமாக இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. நேற்றையதினமும் அந்த இடத்தில் டிராக்டர்கள் சென்று வந்ததற்கான தடயங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் திருட்டு மணல் அகழ்பவர்கள் மணல் அகழும் போது அந்த எலும்புக் கூடுகள் வெளிப்பட்டிருக்கலாம் என்றும், அவர்கள் அவற்றை வெளியே எடுத்துப் போட்டுவிட்டுச் சட்டவிரோத மணல் அகழ்வைத் தொடர்வதாகக் கருதமுடிகிறதென்றும் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் அங்கு அநாதரவாக எலும்புக்கூடுகள் இருப்பது பற்றித் தகவல் பரவியுள்ளது.

முன்னர் அந்த இடம் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்ததாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். அந்த விடயம் தொடர்பாகத் தனக்குத் தெரிவிக்கப்பட்டது. இதனடிப்படையில் அங்கு சென்று பார்த்தபோது எலும்புக்கூடுகளைக் கண்டதாகவும் அவர் கூறினார்.

சூழமைவுகளைப் பார்க்கும்போது, அந்த இடம் மயானம் அல்ல என்பதனாலும், மண்டை ஓட்டில் ஓட்டை காணப்படுவதாலும் அவர்கள் கொல்லப்பட்டார்களா? என்ற சந்தேகம் ஏற்படுவதாகவும் கூறிய சுரேஷ் பிரேமச்சந்திரன், அங்கு மேலும் சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதா என்ற கேள்வியும் எழுவதாக அவர் தெரிவித்தார். அதுதொடர்பில் உரியவர்களுக்கு அறிவிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-4-105)

### கைதிகள்

ஆகியோர், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவைச் சந்தித்துப் பேசினர்.

சுமார் ஒரு மணி நேரம் வரையில் நீதி அமைச்சருடன் பேச்சுக்கள் தொடர்ந்தன. அதன் பின்னர், நீதி அமைச்சர் தொலைபேசியூடாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுடன் பேச்சு நடத்தியுள்ளார். அதனைத் தொடர்ந்து, எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் பேசியுள்ளார்.

இதன்போது ஜனாதிபதி, இந்த மாத இறுதியிலிருந்து அடுத்த மாதம் 7 ஆம் திகதிக்குள் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் முறைமை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார். அமைச்சரவையிலேயே முடிவுகளை எடுக்க முடியும் என்றும் ஜனாதிபதி இதன் போது குறிப்பிட்டுள்ளார். (த-5)

### நாடாளுமன்றத்தின்

சந்தித்து வாக்குறுதிகளையும் வழங்கியிருந்தார்.

இருப்பினும் தமிழ் அரசியல் கைதிகள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. விடுவிக்கப்படும் வரை தொடர்ந்து போராட்டம் முன்னெடுப்பதில் உறுதியாக உள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில், தமிழ் அரசியல் கைதிகள் தமது உறவினர்கள் ஊடாக வேண்டுகோள் விடுத்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாடாளுமன்றத்தின் முன்பாக, தமது விடுதலையை வலியுறுத்திப் போராட்டம் நடத்த வேண்டும். இதற்குரிய நடவடிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விரைந்து எடுக்க வேண்டும் என்று அரசியல் கைதிகள் தமது உறவினர்கள் ஊடாக வலியுறுத்தியுள்ளனர். (த-5)

### நேற்றும்

35 அரசியல் கைதிகள் மோசமான உடல் நிலை காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் தமிழ் அரசியல் கைதிகள் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள், அரசு சார்பில் இது வரை வழங்கிய எந்தவொரு வாக்குறுதியையும் ஏற்றுக்கொள்ளவில்லை. தமது விடுதலையை உறுதிப்படுத்தினால் மாத்திரமே உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிடுவோம் என்பதில் தீவிரமாக உள்ளனர்.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்தது. நேற்று முன்தினம் வியாழக் கிழமை வரையில் 21 பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று 14 பேர் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### எம்பிள்ளைகளை

கிடையில் பார்க்கவேண்டும் என்று ஆசையாக உள்ளது. நான் ஒருவருக்கும் ஒரு துரோகமும் செய்யவில்லை. எல்லோரையும் எனது பிள்ளை போல்தான் பார்ப்பேன். உங்களுடைய சகோதரங்களாகப்பார்த்துஎங்களுடையபிள்ளைகளை விட்டுவிடுங்கள். உங்களுக்கு கோடி புண்ணியம். எங்களுடைய பிள்ளைகளுக்கு ஒரு முடிவு இல்லையேல் இலங்கை எரியும். எங்களுடைய கண்ணீர் உங்களைச் சும்மாவிடாது. நாங்கள் சாப்பிடாமல் இருந்து எங்களுடைய வயிறு எரிந்துவிடும். போராட்டத்தில் ஈடுபட்ட தாய் ஒருவர் கண்ணீர் விட்டுக் கதறி அழுதார்.

எனது கணவரைச் சிறையில் இருந்த மீட்டு தரும்படி எத்தனையோ பேரிடம் கடிதம் கொடுத்தோம். காலில் விழுந்தோம். ஆனால் எதுவுமே பயனற்றதாகப் போய்விட்டது. என் பிள்ளை எனது வயிற்றில் இருக்கும்போது போனவர் ஐந்து வருடமாக இன்னும் வரவில்லை. இந்த பிள்ளையின் முகத்தை என்றாலும் பாருங்கோ. உங்களுக்கு இரக்கமே இல்லையா. பிள்ளை அப்பா அப்பா என்று கேட்கும்போது, நான் எத்தனை தடவை தான் இப்போது வருவார், பிறகு வருவார் என்று கூறமுடியும் கேட்பதற்கு ஆள்கள் இல்லை என்று தானே இவர்களைப் பிடித்து வைத்துள்ளது இந்த அரசு என்று அரசியல் கைதி ஒருவருடைய மனைவியும் மனம் வெதும்பினார். (த-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. தீர்மானம்; நாடாளுமன்றத்தில் இரு நாள் விவாதம்

## அரச தரப்பிலிருந்து ஏற்பாடு

கொழும்பு, ஒக் 17

ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் இரு நாள்கள் விவாதம் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் மேற்படி விவாதம் நடத்தப்படும் என்றும், இதற்கான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை அரச தரப்பிலிருந்து கொண்டு வரப்படும் என்றும் ஆளுங்கட்சிப் பிரதம கொறடாவும் ஊடகத் துறை அமைச்சருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை அரசு மூடிமறைக்கிறது என்று ஒருங்கிணைந்த எதிர்க்கட்சி எனத் தம்மை அடையாளப் படுத்திக் கொள்ளும் சிலர் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். இது விடயத்தில் ஒளிப்பதற்கு ஒன்றுமே இல்லை.

ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் எதிர்வரும் வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெறும். இதற்கான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை அரசே கொண்டு வரவுள்ளது. ஆகவே, மூடிமறைத்து அரசியல் செய்யும் நோக்கம் எமக்கு இல்லை. முன்கூட்டியே நாம் விவாதத்துக்கு திகதி வழங்கியிருக்கலாம். ஆனால், பிரதமர் ஜப்பான் சென்றதாலேயே சற்று தாமதம் ஏற்பட்டுள்ளது - என்றார்.

அதேவேளை, உடலகம ஆணைக் குழு, பரணகம ஆணைக்குழு ஆகிய ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. அன்றைய தினமே ஐ.நா. அறிக்கையும் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (த-வ)

## அஸ்பெஸ்டஸ் உற்பத்திகளுக்கு பதிலாக மாற்றீடுகள் வேண்டும்

*ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு*



கொழும்பு, ஒக். 17

தடை செய்யப்படவுள்ள அஸ்பெஸ்டஸ் உற்பத்திப் பொருள்களுக்குப் பதிலாக, மாற்றுப் பொருள்களைப் பொதுமக்களுக்கு அறிமுகப் படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அஸ்பெஸ்டஸ் உற்பத்திப் பொருள்களுக்குப் பதிலாக மாற்றுப் பாவனை முறைகளை ஒழுங்கு படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபதி தலைமையில் கடந்த புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடை பெற்றது.

2018 ஆம் ஆண்டு முதல் அஸ்பெஸ்டஸ் பாவனையைத் தடை செய்வதற்கு அரசு ஏற்கனவே தீர்மானித்துள்ளது. இதனால் அதற்குப் பதிலாக மாற்று ஏற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றன. கட்டுபடியான விலைகளில் தரமான மாற்றீடுகளை உருவாக்கி அபிவிருத்தி செய்வது தொடர்பிலும் அந்த மாற்றீடுகளைப் பயன்படுத்துவதற்குப் பொதுமக்களை ஊக்குவிப்பது தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய அரச கட்டடங்களுக்கு அஸ்பெஸ்டஸ் அல்லாத கூரைத்தகடுகள் மற்றும் நிர்மாணத்துறைப் பொருள்களைப் பயன்படுத்துவது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், வாகனங்களின் பிரேக், கிளச், கெஸ்கட் மற்றும் அஸ்பெஸ்டஸ் கயிறுகள் போன்ற அஸ்பெஸ்டஸ் தொடர்புடைய சகல உற்பத்திகளையும் தடை செய்வது குறித்தும் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள் ளது.

அஸ்பெஸ்டஸ் பாவனையின் அபாயங்கள் குறித்து பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அஸ்பெஸ்டஸ் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த-5)

## சட்டவிரோதமாகக் 'கள்' விற்றோருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஒக்.17

சட்டவிரோதமாக வீட்டில் வைத்துக் கள் விற்ற மூவருக்கும், மேலதிகமாக வீட்டில் கள் வைத்திருந்த மூவருக்கும் மல்லாகம் நீதிவான் ரூபா 24 ஆயிரம் அபராதம் விதித்துள்ளார்.

சங்கானை மதுவரித் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி என்.கிருபாகரன் தலைமையில் சென்ற திணைக்கள உத்தியோகத்தர்கள் வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் சுழிபுரம், வட்டுக்கோட்டை, சங்கரத்தை ஆகிய இடங்களில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது சட்ட விரோதமாக வீட்டில் வைத்து கள் விற்ற மூவரும் - வீட்டில் மேலதிகமாக கள் வைத்திருந்த மூவரும் வகையாக மாட்டிக் கொண்டனர்.

கள்ளைக் கைப்பற்றிய திணைக்கள அதிகாரிகள், இவர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ஆறு பேரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து, மல்லாகம் நீதிவான் சட்ட விரோதமாக வீட்டில் வைத்துக் கள் விற்பனை செய்த மூவருக்கும் தலா 5ஆயிரம் ரூபாவும், மேலதிகமாக வீட்டில் கள் வைத்திருந்த மூவருக்கும் தலா 3ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்துள் ளார். (த-115)

# 'பட்ஜெட்' விவாதம் 28 நாள்கள் நடக்கும்

## டிசெ. 22 இல் இறுதி வாக்கெடுப்பு

கொழும்பு, ஒக் .17

2016ஆம் நிதியாண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க எதிர்வரும் நவம்பர் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றவுள்ளார்.

இதன் முன்னோடியாக இந்த மாதம் 23ஆம் திகதி நிதி ஒதுக்கீட்டு சட்டவரைவு சபையில் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

இது முதலாம் வாசிப்பாகக் கருதப்படும். இதில் ஒவ்வொரு அமைச்சுக்குமான நிதி ஒதுக்கீடு பற்றிய தரவுகள் இடம்பெற்றிருக்கும்.

அதன் பின்னர் நவம்பர் 20ஆம் திகதி நிதி அமைச்சரின் வரவு-செலவுத்திட்ட உரை இடம்பெறும். இது இரண்டாம் வாசிப்பாகக் கருதப்படும். இதன்போதே வரி அதிகரிப்பு, குறைப்பு, பொருள்கள் விலை அதிகரிப்பு, குறைப்பு உள்ளிட்ட அறிவிப்புகள் வெளியிடப்படும்.

அத்துடன், அரசின் மொத்த வருமானம், மொத்த செலவினம், துண்டுவிழும் தொகை உள்ளிட்ட தரவுகளும் புள்ளிவிவர ரீதியாக வழங்கப்படும்.

மறுநாள் முதல் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் ஆரம்பமாகும். இவ்வாறு 14 நாள்கள் விவாதம் நடத்தப்பட்டு டிசெம்பர் 8ஆம் திகதி இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடத்தப்படும்.

அதன்பின்னர் குழுநிலை விவாதம் நடத்தப்படும். இதற்காக 12 நாள்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. குழுநிலை விவாதத்தின்போது திருத்தங்களையும், யோசனைகளையும் முன்வைக்க முடியும். இது மூன்றாம் வாசிப்புமீதான விவாதமாகக் கருதப்படும்.

இறுதியில் மூன்றாம் வாசிப்புமீதான வாக்கெடுப்பு டிசெம்பர் 22 ஆம் திகதி இடம்பெறும். (த)

## சிரேஷ்ட பிரசைகளுக்கு நலன் பேணும் அமைப்பு

யாழ்ப்பாணம், ஒக் .15

யாழில்,சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு, முதியோர்களுக்கான சிரேஷ்ட பிரசைகள் நலன் பேணும் அமைப்பு அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வு கடந்த 14ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த .கனகராஜின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு,பிரதம விருந்தினராக் யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார்.

கடந்த ஒரு வருட காலமாக, முதியோரிடம் நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுசரணையுடன், சிரேஷ்ட பிரசைகள் நலன் பேணும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக அதன் நிர்வாக உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன்,

இந்த முயற்சி பாராட்டுக்குரியது. யாழ்.மாவட்டத்தில் இவ்வாறன தொரு அமைப்பின் உருவாக்கம் மகிழ்ச்சியளிக்கிறது. குறித்த அமைப்புக்கு எமது ஆதரவை வழங்குவோம்-என்றார்.

இந்த நிகழ்வுக்கு, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்ட னர். (வ-ரி4-ரி6)

# சர்வதேச அழுத்தத்துக்குக் கூட்டமைப்பே காரணம்

*சாடுகின்றார் வாசுதேவ.*

கொழும்பு, ஒக்.17

இலங்கைக்கு எதிரான சர்வதேச அழுத்தங்கள் வலுப்பெற்றதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அத்துடன் போர்க்குற்ற விவகாரத்தைக் கூட்டமைப்பு சர்வதேசமயப்படுத்திவிட்டதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாரஹன்பிட்டியவில் உள்ள அபேராம விகாரையில், மகிந்த ராஜபக்ச ஆதரவு அணியினர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது தொடர்ந்து அவர் கருத்து வெளியிடுகையில்,

இலங்கையின் தற்போதைய அரசு அமெரிக்காவின் நாய்க்குட்டி போன்று செயற்படுகின்றது. அவர்கள் தூக்கிப்போடும் எலும்புத் துண்டுகளைக் கவ்விக்கொண்டு நாட்டையும் இராணுவத்தையும் காட்டிக் கொடுக்கும் வேலையை மட்டுமே இந்த அரசு மேற்கொள் கின்றது.

இப்போது இலங்கைக்கு எதிரான சர்வதேச அழுத்தங்கள் பலமடையத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே முதல் காரணம். போர்க்குற்றச் சாட்டுக்களைக் கூட்டமைப்பு சர்வதேச மட்டத்துக்கு கொண்டு சென்று விட்டது.

ஐ.நாவைத் தூண்டிவிடும் வகையில் அமெரிக்காவிடம் சென்று



முறையிட்டதும், மனித உரிமை மீறல்கள் என்ற கதையை நாட்டுக்கு வெளியில் கொண்டு சென்றதும் கூட்டமைப்புத் தான். அதனால் தான் நாட்டில் ஏற்படவிருந்த நல்லிணக்கமும் தடைப்பட்டது.

எமது ஆட்சியில் தமிழ் மக்களின் உரிமைகளைக் கவனத்தில் கொண்டு பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம். இந்த நாட்டில் சிங்கள மக்களே பெரும்பான்மையாக வாழ்கின்றனர். ஆகவே அவர்களைச் சார்ந்தே நாம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும்.

அரசியல் பிரச்சினைக்கான தீர்வு காண்பதில் ஒரு கட்டம் வரையில் தான் எம்மால் செயற்பட முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம் பத்தில் வலியுறுத்திய விடயங்கள் எமது அரசினால் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இவர்கள் எம்மைப் பயன்படுத்தி நாட்டில் பிரிவினையை ஏற்படுத்தவே முயற்சித்தனர். நாம் இணக்கப்பாட்டுடன் செயற்படுவதைத் தெரிந்துகொண்டே கூட்டமைப்பு மாகாண சபை அதிகாரத்தையும் தாண்டிய அதிகார எல்லைக்குப் பயணித்தனர். ஆகவே இந்தப் போர்க்குற்றச் சாட்டுகள் அனைத்தினதும் பின்னணியில் அதிகாரப் பகிர்வே உள்ளது.

இப்போதும் கூட்டமைப்பின் இலக்கு வெற்றிகரமாக அமைய வில்லை. எமது அரசினால் வழங்கிய எதையும் தற்போதைய அரசு தமிழ் மக்களுக்கு வழங்கவில்லை. அத்துடன் சர்வதேச சக்திகளும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள அரசையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் பயன்படுத்துகின்றன. இந்த அரசிலும் இனப் பிரச்சினைக்கு முழுமையாகத் தீர்வு எட்டப்படாது என்பதை எம்மால் உறுதியாகக் கூறமுடியும். ஒரு அளவு வரைக்குமே இவர்களின் செயற்பாடுகளும் அமையும் என்றும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (த-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவஜீவன்ஸ், யங்கம்பன்ஸ் அணிகள் லீக்கிலிருந்து மாவட்டச் சுற்றுக்கு தகுதி

கரணவாய், ஒக். 17
யாழ். மாவட்டச் செயலக விளையாட்டுத் திணைக்களம் மைலோ கிண்ணத்துக்காக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் வடமராட்சி லீக்கில் இருந்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன மாவட்ட சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளன.

***நவஜீவன்ஸ் எதிர் சிறிஅம்பாள்***

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த தகுதிகாண் ஆட்டங்களில் நாச்சிமார் கோயிலடி சிறிஅம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. லீக்கில் இருந்து மாவட்டமட்ட சுற்றுக்கு தெரிவுசெய்வதற்கான ஆட்டம் என்பதனால் வெற்றிபெற்றேயாக வேண்டும் என்ற கட்டாயத்தில் இரு அணிகளும் களமிறங்கின. ஆட்டம் ஆரம்பமாகின வேளை முதல் குறிப்பிட்ட நிமிடங்கள்வரை கோல்கள் எவையும் பதிவு செய்யப்படவில்லை. 16 ஆவது நிமிடத்தில் சிறிஅம்பாளின் கௌசிகன் கோல் கணக்கை ஆரம்பித்து வைக்க ஆட்டம் கண்டது நவஜீவன்ஸ். சிறி அம்பாளின் கோலே முற்பாதியின் இறுதிக்கோலுமாக 1:0 என முடிவடைந்தன ஆட்டத்தில் முதல் 45 நிமிடங்களும்.

பழி தீர்த் தேயாக வேண்டும் என்ற கட்டாயத்தில் நவஜீவன்ஸ். ஆதிக்கத்தை தொடர்ந்தும் தக்கவைக்கும் முனைப்பில் சிறிஅம்பாள். அனல் பறந்தது ஆட்டத்தின் இறுதிப்பாதி. ஆட்டம் நிறைவடைய சிலநிமிடங்களே இருந்தபொழுது திரில் கோல் ஒன்றை போட்டு ஆட்டத்தை சமநிலைப்படுத்தியது நவஜீவன்ஸ் அணி. சமநிலைத் தவிர்ப்பிலும் இரு அணிகளும் விடுவதாக இல்லை. இழுபறிப்பட்டு ஒருவாறு 9:8 என்ற கோல்கணக்கில் தட்டுத்தடுமாறி வெற்றிபெற்றது நவஜீவன்ஸ் அணி.


நவஜீவன்ஸ்


யங்கம்பன்ஸ்

***டயமன்ஸ் எதிர் யங்கம்பன்ஸ்***

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு தகுதிகாண் ஆட்டத்தில்வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. முதல் பாதியின் முடிவுவரை பந்து அங்கும் இங்கும் அலைந்து திரிந்தது தான் மிச்சம். கோல்கள் எவையும் பதியப்படவில்லை. இரண்டாம் பாதி யிலும் இதேநிலைமைதான். ஆட்டம் நிறைவடைவதற்கு ஒருசில நிமிடங்கள் இருக்கும் பொழுது டயமன்ஸ் அணியின் வீரர் பீமா தமது கோல் பிரதேசத்தில் வைத்து முறை தவறிய ஆட்டத்தை வெளிப்படுத்த எதிரணிக்கு இலகுவாக கோல்பெறும் சந்தர்ப்பம் தானாகத் தேடி வந்தது. வாய்ப்பு கோலாக மாற்றம்பெற 1:0 என்ற கோல் கணக்கில் மாவட்ட மட்ட சுற்றுக்கு தகுதி பெற்றது யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம். (ம-108)

## துடுப்பாட்டத் தொடர்

கொழும்புத்துறை சென். றொசாறியன் சனசமூக நிலையத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் துடுப்பாட்டத் தொடரொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

6 வீரர்கள் கலந்து கொள்ளும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்தத் தொடர் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் மு.ப. 10 மணிக்கு இடம்பெறும். அதேவேளை, மாவட்ட ரீதியிலான 60 கிலோ மீற்றர் சைக்கிளோட்டப் போட்டி இன்று காலை நடைபெறவுள்ளது. (ம-135)

## ஞானமுருகனிடம் வீழ்ந்தது கலைமதி

யாழ்ப்பாணம், ஒக். 17
வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதிக் கொண்டது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## வடதாரகை அபாரவெற்றி

வவுனியா உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் முன்னெடுக்கப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அல்மதினா அணியை எதிர்த்து வடதாரகை அணி மோதிக்கொண்டது. இதில் வடதாரகை அணி 7:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## மைக்கல் வி.கழகத் தொடர் இன்று முதல் ஆரம்பம்

மாங்குளம், ஒக். 17
மாலுசந்தி மைக்கல் வி.கழகத்தினால் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே வடமாகாண ரீதியாக நடத்தத்திட்டமிடப்பட்ட உதைபந்தாட்டத் தொடர் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது.

ஆரம்ப நாளான இன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணியும், மாலை 4 மணிக்கு மன்னார் தோட்டவெளி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வடமராட்சி கருணாகரன் விளையாட்டுக் கழகமும் மோதும் ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன.

குறித்த தொடருக்காக மன்னார் மாவட்டத்திலிருந்து 10 கழகங்களும், கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 6 அணிகளும், முல்லைத்தீவிலிருந்து 2 அணிகளும் யாழ்ப்பாணம், வலிகாமம், பருத்தித்துறை லீக்குகளிலிருந்து தலா 4 அணிகளும், வடமராட்சி லீக்கிலிருந்து 13 அணிகளும் கலந்து கொள்ளவுள்ளன. (ம-422)

# இன்றைய மோதல்கள்

***பாடசாலைகளுக்கு இடையிலான ரி-20 தொடர்***

யாழ். மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் 19 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான ரி-20 துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

காலை 8.30மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 2மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யாழ். இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது.

***வவுனியா உதைபந்தாட்டத் தொடர்***

வவுனியா உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் முன்னெடுக்கப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் முஸ்லிம் மகா வித்தியாலய [illegible] இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் 786 அணியை எதிர்த்து நியூ வைட் அணி மோதவுள்ளது. (ம-23)

***நியூட்டன் வி.கழகத் தொடர்***

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடர், குறித்த கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகிறது.

இந்தத்தொடரில்; இன்று சனிக்கிழமை இரவு 7மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும், 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ம-108)

***மத்தியின் கூடைப்பந்தாட்டத் தொடர்***

யாழ். மத்திய கல்லூரியின் மாணவர் [illegible] பாடசாலைகளுக்கிடையில் பொ.விபுலானந்தன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்படும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் லீக் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

பி.ப. 1 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ். இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. பி.ப. 2 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. பி.ப. 3 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் மன்னார் அடம்பன் மத்தியமகாவித்தியாலயஅணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் மல்லாகம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி மோதவுள்ளது. (ம-23)


இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டிகளில் 17வயதுக்கு உட்பட்ட நீளம் பாய்தலில் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் எஸ்.ஏனோக்ராஜ் 6.4 மீற்றர் நீளம் பாய்ந்து வர்ணச் சான்றிதழைப் பெற்றுள்ளார். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவிப்பு நிகழ்வு



முல்லைத்தீவு, ஒக். 17
தேசிய மட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தலில் 15வயதுக்கு உட்பட்ட பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி மாணவன் சுஜீவன் கல்லூரி சமூகத்தினரால் கடந்த செவ்வாய்க்கிழமைவிழாஎடுத்துக்கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கல்லூரியின் அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் அரசரெட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம விருத்தினராக முல்லைத்தீவுகல்விவலயஉடற்கல்வி உதவிப்பணிப்பாளர் மைக்கல், கௌரவ விருத்தினராக உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் டிலான் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-102-23)

# தத்தளிக்கிறது தீவுகள்

## வெற்றியின் விளிம்பில் இலங்கை



இலங்கை – மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்று தீவுகள் முதல் இன்னிங்ஸிற்காக சகல இலக்குகளையும் இழந்து 251 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதனால் தொடர்ந்து களத்தடுப்பில் ஈடுபட தகுதி அல்லாத நிலையில் இரண்டாவது இன்னிங் ஸிற்காக தொடர்ந்து துடுப்பெடுத்தாடி வருகிறது. நாள் முடிவில் தீவுகள் 67–2 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானிக்க கருணாரத்ன, சந்திமல் இருவரின் சதத்தின் உதவியுடன் சகல இலக்குகளையும் இழந்து 484 ஓட்டங்ளைக் குவித்தது. பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக பிஸ்கு 4 இலக்குக ளையும் ரெய்லர் 2 இலக்குகளையும் றோச், கோல்டர், கபிரியேல், சாமுவேல்ஸ் நால்வரும் தலா ஓர் இலக்கை கைப் பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த தீவுகளுக்கு ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. இரண்டாம் நாள் முடிவில் அந்த அணி 66–2 என்ற நிலையில் இருந்தது. பிராவோ 15 ஓட்டங்களுடனும் சாமுவேல்ஸ் 7 ஓட்டங்களுடனும் தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடக் களமிறங்கினர். வழக்கம் போல் காலி மைதானத்தில் அசத்தினார் கேரத். கேரத் எதிர் தீவுகள் என்று சொல்லும் அளவுக்கு பந்துவீச்சு அற்புதமாக அமைந்தது. பிராவோ மட்டும் நிலைத்து நின்று அரைச்சதம் கடந்தார். வேறு எவரும் நிலைப்பதாக இல்லை. சாமுவேல்ஸ் 11 ஓட்டங் களுடனும் பிளக்வுட் 11 ஓட்டங்களுடனும் ரம்தின் 23 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க தற்பொழுது தீவுகள் 171–7. எதிர்பார்ப்புக்கு அதிகமாகவே தீவுகளின் பின்வரிசை துடுப்பாட்டத்தில் பிரமிக்க வைத்தது. றோச் 22, ரெய்லர் 31, பிஸ்கூ 23 என்று சுமாரான பங்களிப்பை வழங்க ஒருவாறு 251 ஓட்டங்கள் வரை சென்றது அந்த அணி. பந்து வீச்சில் கேரத் 6 இலக்குகளை வீழ்த்தினார்.

இருப்பினும் இலங்கையை துடுப்பெடுத்தாட அழைக்க தகுதியற்ற நிலையில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடியது தீவுகள். 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கோப். சகஆரம்ப வீரரான பிரீத் வைட்டை வெளி யேற்றினார் கேரத். நாள் முடிவில் தீவுகள் 67–2. (ம)



காலியில் நடைபெற்றுவரும் தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் 6 இலக்குகளை வீழ்த்தியதன் மூலம் குறிப்பிட்ட ஒரு மைதானத்தில் அதிக தடவைகள் ஐந்து இலக்குகளை கைப்பற்றிய வீரர் என்ற பொத்தமின் சாதனையை (8 தடவைகள், லோட்ஸ் மைதானம்) சமன் செய்துள்ளார் கேரத்.

# ஆவரங்கால் மத்தி, இளவாலை மத்தி இறுதி ஆட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 17
அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 8ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த கழகத்தால் யாழ். மாவட்ட ரீதியாக முன்னெடுக்கப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து இளவாலை மத்திய அணி மோதியது. 5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் இளவாலை மத்திய அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது. (ம-23)


# சம்பியனானது கலாநிதி இளைஞர் அணி



காரைநகர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் இளைஞர் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரில் கலாநிதி இளைஞர் கழக அணி சம்பியனானது.

கடந்தஞாயிற்றுக்கிழமைகாரைநகர் தியாகராஜா மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் அம்பாள் இளைஞர் கழக அணியை எதிர்த்து கலாநிதி இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட முடிவில் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலைத் தகர்ப்பு உதை வரை நீடித்தது. சமநிலைத் தகர்ப்பு உதைகளில்கலாநிதி இளைஞர் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)

# கிண்ணம் திருக்குடும்ப கன்னியரிடம்



யாழ்ப்பாணம், ஒக். 17 மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் 17 வயதுக்கு உட்பட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் திருக்குடும்ப கன்னியர் மட அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நேற்று பிற்பகல் 3.15 மணிக்கு இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து மோதிய திருக்குடும்ப கன்னியர் மட அணி 78:55 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. (ம-23)

# அரையிறுதிக்கு சென்றது யங்கென்றிஸ் வி.கழகம்

கரணவாய், ஒக். 17
சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில் சென். அன்ரனிஸ் அணியை வீழ்த்திய யங்கென்றிஸ் அணி அரையிறுதிக்கான வாய்ப்பை உறுதிப்படுத்தியது. இளைஞர், விண்மீன் அணிகள் மோதிய மற்றொரு ஆட்டம் சமநிலையில் முடிவடைந்ததால் இந்த இரண்டு அணிகளும் தமக்கான வாய்ப்பை தொடர்ந்தும் தக்க வைத்துள்ளன.

**இளைஞர் எதிர் விண்மீன்**

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டங்களில் முதலாவத[illegible] பெற்ற ஆட்டத்தில் பலாலி [illegible] விளையாட்டுக் கழகமும் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதின. இந்த ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டும் என்ற கட்டாயத்தில் இரண்டு அணிகளும் களமிறங்கின. ஆட்டத்தின் 12 ஆவது விண்மீன் அணியின் டேமியனால் பதியப்பட்டது முதலாவது கோல். முதல் பாதி [illegible] இரண்டாம் பாதியும் இழுபறிதான். இருப்பினும் பழிதீர்த்தது இளைஞர் அணி. தற்பொழுது ஆட்டம் சமநிலையில். மேலும் ஒரு கோல் இளைஞர் சார்பாக பதியப்பட இளைஞர் அணியின் ஆதிக்கம் மேலோங்கியது. இறுதி நிமிடத்தில் பதில் கோலை விளாசியது விண்மீன். சமநிலையில் முடிவடைந்தது ஆட்டம். இதனால் இரண்டு அணிகளும் தமக்கான அரையிறுதி வாய்ப்பை தொடர்ந்தும் தக்க வைத்துள்ளன.

**சென்.அன்ரனீஸ் எதிர் யங்கென்றிஸ்**

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. இதில் அன்ரனிஸ் அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி தனது அரையிறுதி வாய்ப்பை உறுதி செய்தது யங்கென்றிஸ். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Job Vacancies

*Admin Secretory
*Educational Counselors

Send your CV to below address on or before 23-10-2015

iCS Study Overseas
77,Clock Tower Road, Jaffna
sutha@icssrilanka.com
021-4926222,021-7306000



**2016 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கும் பெற்றோருக்குமான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு (தற்பொழுது தரம் 4)**

இடம் : ராஜா ராணி சேவை இல்லம்
4ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை.
காலம் : 18.10.2015
நேரம் : பி.ப 4.00 - 6.00

வளவாளர்கள் :
1. N. சுந்தா (Din.in Teaching Primary Spl.)
(DVD ஊடாக தரம் 5 மாணவர்களுக்கு கற்கை விளக்கம் வழங்கும் இலங்கையின் ஒரே ஒரு ஆசிரியர், 2013 புலமைப்பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் முதலிடம் பெறச்செய்த சாதனை ஆசிரியர்)
2. T. பிரஜாபதி (Din.in Teaching Primary Spl.)
(2015ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் முதலிடம் பெறச்செய்த சாதனை ஆசிரியர்)
3. S. நிஷாந்தன் (Din.in Teaching Primary Spl.)
(வடமராட்சியின் முன்னணி ஆசிரியர்)
(64065) (10.17)


# குக் இரட்டைச் சதம் விளாசல் ஆட்டம் சமநிலையில் முடியலாம்



பாகிஸ்தான் – இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதல் டெஸ்ட்டின் நான்காம்நாளானநேற்றையதினத்தில்இங்கிலாந்து 569–8(பாகிஸ்தான்523–8)என்றவலுவான நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான்முதலில்துடுப்பெடுத்தாடத்தீர்மானித்தது. மலிக்இரட்டைச்சதத்தையும்சபிக்சதத்தையும் விளாச 523–8 என்ற நிலையில் இருந்த பொழுது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது பாகிஸ்தான். பதிலுக்கு முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து மூன்றாம் நாள் முடிவில் 290–3 என்ற நிலையில் இருந்தது.

குக் 168 ஓட்டங்களுடனும் ரூட் 3 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக களமிறங்கினர். இந்த இருவரினதும் இணைப்பாட்டத்தில் அப்படியே சரணடைந்தது. இரட்டைச்சதம் கடந்தார் குக். அரைச்சதம் கடந்து அற்புதமாக ஆடிக்கொண்டிருந்தார் ரூட். 15 ஓட்டங்களால் சத்தைத் தவறவிட்டார் ரூட். மீண்டும் ஒரு அரைச்சதம் ஸ்டோக்ஸால் பதியப்பட்டது. குக்கின் ஓட்ட எண்ணிக்கை 250ஆக உயர்ந்தது. 263 ஓட்டங்களில் வைத்து குக்கை வீழ்தினார் மற்றொரு இரட்டைச்சத நாயகனான மலிக். பட்லரும் 23 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப –நான்காம் நாளின் முடிவில் இங்கிலாந்து 569–8. ரசிட் 6 ஓட்டங்களுடனும் புரோட் ஓட்டங்கள் எதனையும் பெறாமலும் களத்தில் உள்ளனர். ஆட்டத்தின் இறுதிநாள் இன்றாகும். இன்னமும் முதல் இன்னிங்ஸே முழுமையாக நிறைவடையாத காரணத்தால் ஆட்டம் சமநிலையில் நிறைவடையவே வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன.

ஆட்ட நாயகனாக சகல துறைகளிலும் அசத்திய மலிக் தெரிவு செய்யப்படலாம்.

(ம)


## அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்
இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
பங்களாதேஷ், இந்தியா,பாகிஸ்தான் போன்ற சனத்தொகை கூடிய நாடுகள் இவ்வருடம் விண்ணப்பிக்க தகுதி இல்லாதமையால் ஆசியாவில் இலங்கையர்களுக்கான வாய்ப்புக்கள் அதிகம்
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
இன்னும் ஒரு சில தினங்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்
அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு தினங்களில் பதிவுகள் மேற்கொள்ளப்படும்

யாழ்ப்பாணம் 0768226241
கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892
வல்வெட்டித்துறை 0776697960
V2 TRAVELS



## பாமசிக்கு பணியாளர்கள் தேவை

யாழ்.நகரத்திற்கு அண்மையில் புதிதாக அமைய இருக்கும் பாமசி ஒன்றிற்கு பணியாளர்கள் உடன் தேவைப்படுகின்றனர்.

1. பாமசிஸ்ட் (Pharmacists)
2. பாமசி வேலையில் அனுபவ முள்ளவர்கள் ஆண், பெண்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக் கப்படும்.

தொடர்புகளுக்கு
077 125 8025
Email-
akshayasupplies@gmail.com



## கணினி கல்வி

* Typing (தமிழ்/ஆங்கிலம்/சிங்களம்)
* MS Office (Word/Ex/P.P/ACC)
* Photoshop/Pagemaker/Coreldraw)
* சிங்களம்
* ஆங்கிலம்
* Internet & Email Etc...

ஆரம்பம்

SKY 89, கண்டி வீதி, யாழ். கச்சேரி.
222 1417
(C/15939) (10.17)



## வீட்டு சமையலாளர் தேவை(பெண்)

கச்சேரிக்கு அருகில் உள்ள சிறிய குடும்பமொன்றுக்கு பகுதி நேர (3 மணித்தியாலங்கள்) சமையலாள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். (64064) (10.17)

தொடர்புகளுக்கு: 077 5131 669



## குறைந்தளவான கட்டணங்களுடன் சுயதொழில் வாய்ப்புகளை கொண்ட கற்கைநெறிகள்

New Gateway Tech இடமிருந்து....



AUTODESK AUTOCAD

**கட்டட நிர்மாணத்துறை மற்றும் பொறியியல் துறைகளில் மிக முக்கியமான மென்பொருள்**

விரும்பிய நேரசூசியுடன் ஆரம்பத்திலிருந்து மென்பொருளை முழுமையாக கையாளக்கூடிய நிலை வரை பயிற்சிகள் வழங்கப்படும். AutoCAD for Beginners மற்றும் ஏற்கனவே மென்பொருள் பற்றி அறிந்தவர்கள் பயிலக்கூடிய வகையில் Advanced AutoCAD கற்கை நெறிகளும் நடைபெறுகின்றன.

4ஆவது பிரிவு ஆரம்பம்
20.10.2015 செவ்வாய்க்கிழமை

NGT GATEWAY
No. 39, College Road, Neeraviady, Jaffna.

Address : 39, College Road, Neeraviyadi, Jaffna.
Telephone : 021 493 6666 / 0716 362 362


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.